கோகுலம்

GOKULAM

ஏப்ரல் '89 ரூ. 3/-





எல்லா மேகி பிரியர்களுக்கும் இந்த ஆண்டு விதவித-மான புதிய பரிசுகளை மேகி கிளப் வழங்குகிறது.

உங்கள் இலவசப் பரிசை உடனே பெறுங்கள்!

5 மேகி நூடுல்ஸின் காலி பேக்குகளிலிருந்து அதன் முன்பக்கம் அச்சிடப்பட்டுள்ள இந்த முத்திரையை வெட்டியெடுத்து எமக்கு அனுப்பினால், நீங்கள் விரும்பும் ஒரு இலவசப் பரிசு உங்களுக்கு அனுப்பிவைக்கப்படும். 6 முதல் 8 வாரங்களுக்குள் மேகி கிளப்பில் இருந்து கேளிக்கைகள் நிறைந்த பரவசமூட்டும் பரிசு உங்களுக்கு அனுப்பிவைக்கப்படும்.

மறவாதீர்:

நீங்கள் மேகி கிளப் உறுப்பினர் எனில் ஒவ்வொரு முறையும் எமக்கு எழுதும்போது உங்கள் பெயர், முகவரி மற்றும் உறுப்பினர் எண்ணுடன் நீங்கள் விரும்பும் பரிசின் பெயரையும் குறிப்பிட்டு எழுதவும்.

நீங்கள் மேகி கிளப் உறுப்பினர் இல்லையெனிலும் கூட எமக்கு எழுதும் போது உங்கள் பெயர், முகவரியுடன் நீங்கள் விரும்பும் பரிசின் பெயரையும் குறிப்பிடவும்.

HTA 6320 TAM

எங்கள் முகவரி: மேகி கிளப், அஞ்சல் பெட்டி எண்: 5788, புது தில்லி 110055



நீங்களே செய்யும் எலெக்ட்ரானிக் கிட்!

ஒரே 'சிப்' மூலம் நூற்றுக்கும் மேற்பட்ட பரிசோதனைகள்!

''சிப்-சாப்'' நீங்களே செய்யும் எஜுகேஷனல் கிட் நூற்றுக்கும் மேற்பட்ட பகட்டான பரிசோதனைகள் கொண்டது. வித்தையை விளையாட்டாய் கற்பிக்கவென்றே திட்டமிடப்பட்டது!

உங்கள் குழந்தை நாளைய உலகில் வெற்றியடைய வழிசெய்யுங்கள்!

எலெக்ட்ரானிக் யுகத்தின் சவால்களை சமாளிக்கத் தகுதியான சாதனம் ''சிப்-சாப்''!

அம்சங்கள்: பாட்டரியால் இயங்கக் கூடியது - பாதுகாப்பானது • எளிதில் எடுத்துச் செல்லக் கூடியது • ஸால்டரிங் இல்லை – கனெக்ஷனுக்கு ''பேட்டெண்டுடன்'' கூடிய விசை • கையாள எளிது.

பரிசோதனைகள்: • மியூஸிகல் ஆர்கன்* ஷூட்டிங் விளையாட்டு • ஃபயர் அலாரம்* ஒயர்லெஸ் பீப்பர் * ஸிக்னல் டிரான்ஸ்மிட்டர்* லேட் ஆபரேட் அலாரம் இன்னும் பலப் பல.

ரூ. 300/- மட்டும் - வரிகள், அனுப்பும் செலவு தனி.

''எலக்ட்ரானிக்ஸ் எல்லோருக்கும்''

எஜுடெக்

33, சர்ச் தெரு, பெங்களூர்-560 001.
இந்தியா. போன்- 578801.

எனக்குத் தேவை ''சிப்-சாப்''. கிட் ஒன்றுக்கு ரூ. 350/- வரியும், அனுப்பும் செலவும் சேர்த்து. தயவு செய்து ....கிட்/கிட்கள் அனுப்பவும். இத்துடன் 'கிராஸ்' செய்யப்பட்ட டி.டி./போஸ்டல் ஆர்டர் (ஒரு கிட் ரூ. 50/- என்ற கணக்கில்) முன்பணமாக அனுப்புகிறேன். மீதித்தொகையை வி.பி.பி. வந்து சேர்ந்தவுடன் அனுப்புவதாக உறுதியளிக்கிறேன்.

பெயர் ....

விலாசம் ....

பள்ளி ☐ கல்லூரி ☐

Climb ads/Chip-Chap/890]





உயிர்களிடத்தில் அன்புவேணும்—தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்.

— பாரதியார்.

கோகுலம்

1989 ஏப்ரல் மாத இதழ்
மலர் 7 இதழ் 3
தனிப் பிரதி ரூ. 3/—
ஆண்டுச் சந்தா ரூ. 36/—

அருமைச் சிறுவர் சிறுமியரே,

உங்கள் கண்கள் கலங்கியிருப்பதை என்னால் காண முடிகிறது. இந்த இதழ் கோகுலம் உங்கள் கரத்தை அடைவதற்கு முன் உங்களுக்குச் செய்தி கிடைத்திருக்கும். ஆம், உங்களைப் போன்ற குழந்தைகளுக்காகவே வாழ்நாளெல்லாம் பாடுபட்டு உழைத்த குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா; அமரர் ஆகி விட்டார்! குழந்தைக் கவிஞரை இனி நம்மால் காண முடியாது என்றாலும் அவருடைய பாடல்களும் கதைகளும் என்றென்றும் நம் மனங்களில் இருக்கும். வள்ளியப்பாவின் சிமிட்டும் கண்களும் சிரித்த முகமும் எப்போதும் நம் நினைவில் இருந்து வரும். இவை நமக்குச் சோர்வு ஏற்படும்போதெல்லாம் உற்சாகம் அளித்து வாழ்க்கையில் நமக்கு நல் வழிகாட்டி அழைத்துச் செல்லும்.

வள்ளியப்பாவின் பாடல்களை என் அப்பா எனக்குப் பாடிக் காட்டினார்! நான் என் மகளுக்குப் பாடினேன். என் மகள் அவளுடைய குழந்தைக்கு இப்போது பாடிக் காட்டுகிறாள்! "கோயில் யானை வருகுது" என்று அவன் மழலையாகக் கூறி அசைந்து ஆடி நடக்கிறான்; யானையாக நடிக்கிறான்! இப்படி வாழையடி வாழையாக ஒவ்வொரு குடும்பத்திலும் வள்ளியப்பாவின் பாடல்களைப் பாடி மகிழ்ந்து வருகிறார்கள். இனி வரும் தலைமுறைகளிலும் இப்படியே பாடி மகிழப் போகிறார்கள். இதைத்தான் முடிவற்ற அமர நிலை என்கிறோம்.

வள்ளியப்பாவுக்குப் பல சிறப்புக்களும் பட்டங்களும் வந்து சேர்ந்தன. அவற்றால் அவருக்குப் பெருமை என்பதை விட அவரை அடைந்ததால் அந்த விருதுகளும் பட்டங்களும் பெருமையுற்றன என்பதே பொருந்தும்.

குழந்தைகளிடம், சிறந்த பண்புகளை வளர்க்க வேண்டும் என்ற நோக்கத்துடனேயே அவர் எழுதினார். அந்தப் பண்புகளை அவரும் வளர்த்துக் கொண்டு அந்த விதமாகவே வாழ்ந்து காட்டினார். இதுதான் அவருடைய தனிச் சிறப்பு. வெள்ளிக் கிழமை தவறாமல் கோவிலுக்குப் போவார். கடுமையாக உழைப்பார். இந்த இதழைக் கூட இந்த ஒரு பக்கம் தவிர மற்ற அனைத்தையும் அவரே தயாரித்தார். ஒழுக்க சீலராக விளங்கினார்.

குழந்தைகளுக்காக எழுதிய அவர், குழந்தைகளின் உள்ளத்தைப் பெற்றிருந்தார். குழந்தைகளின் கூட்டத்தில் குழந்தையாகவே மாறி உற்சாகமாக இருப்பார். அதனால் தான் அவரால் குழந்தைகளுக்காக குழந்தைகள் விரும்புவது போல் எழுத முடிந்தது. தமது வீட்டின் மொட்டை மாடியில் நிலவொளியில் பல சிறுவர் சிறுமியரை வரவழைத்துக் கதை கூறி மகிழ்வதும் பாடக் கேட்டு ஆனந்திப்பதும் அவருக்கு மிகவும் பிடித்தமானது.

வள்ளியப்பா எளிய குடும்பத்தில் பிறந்து, இந்தியன் வங்கியில் சேர்ந்து, படிப்படியாக உயர்ந்து மிகப் பெரிய பதவி வகித்து ஓய்வு பெற்றார். அதன் பின்னர் கோகுலம் பத்திரிகைக்கு கௌரவ ஆசிரியரானார். குழந்தைகளுக்கான பத்திரிகையை எப்படி நடத்த வேண்டும், எப்படி நடத்தக் கூடாது என்பனவற்றில் உறுதியான கருத்துக்களைக் கொண்டிருந்தார். கோகுலத்தைப் படிக்கும் சிறுவர் சிறுமியர் இந்த நாட்டின் சிறந்த எதிர்காலக் குடிமக்களாக விளங்க வேண்டும் என்று விரும்பி அதற்கேற்றவாறு இதனை உருவாக்கினார். அவர் காட்டிய பாதையில் இந்தப் பத்திரிகையைத் தொடர்ந்து நடத்துவதே அவருக்கு நாம் செய்யக்கூடிய கைமாறு. இதற்கு உங்கள் அன்பையும் உங்கள் பெற்றோர்களின் ஆதரவையும் கோரி, நண்பர் வள்ளியப்பாவுக்குக் கைகூப்பி அஞ்சலி செலுத்துகிறேன்.

அன்புடன்,

(கி. ராஜேந்திரன் — ஆசிரியர்)

கான்பூரைக் கவர்ந்த கவிஞர்

'அம்புலிமாமா' சுவாமிநாதன்

முன் காலத்தில் இராஜேந்திர சோழன் தமிழ் நாட்டிலிருந்து, தன் படையுடன் வட இந்தியாவிற்குப் போய் வெற்றி பெற்று 'கங்கை கொண்ட சோழன்' என்ற பட்டத்துடன் தமிழகம் திரும்பி வந்தான். இக்காலத்தில் நாடாளும் மன்னர்கள் இல்லாது போயினும், இலக்கிய உலகில் பல மொழிகளில் பல மன்னர்கள் இருக்கத்தான் இருக்கிறார்கள். அந்த மன்னர்களில் ஒருவர்தாம், தம் கவிதைகள் என்ற படையின் துணை கொண்டு தமிழகத்திலிருந்து கிளம்பி, ஹிந்தி மாநிலமாக உத்தரப் பிரதேசத்திலுள்ள கான்பூருக்குச் சென்றார்; அங்குள்ள இலக்கிய ரசிகர்களின் உள்ளங்களை வென்றார். அவர்களது அன்பைக் கவர்ந்து தாயகம் திரும்பினார். அந்த மன்னரின் தேரோட்டியாகச் செல்லும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

என்ன திகைக்கிறீர்கள்? ஆம், கான்பூரின் பாரதீய கல்யாண் சமஸ்தான் என்ற அமைப்பு கடந்த பிப்ரவரி 26—ஆம் தேதி கான்பூரில் குழந்தைக் கவிஞர் திரு. அழ. வள்ளியப்பாவைப் பாராட்டி கேடயம் வழங்கி, பத்திரம், பண முடிப்புக் கொடுத்தும் பொன்னாடை போர்த்திக் கௌரவித்ததைத்தான் நான் குறிப்பிடுகிறேன்.



அழ. வள்ளியப்பா.

கான்பூர்தான் உத்தரப்பிரதேசத்திலேயே பெரிய நகரம். ஆயினும் அதற்கு அடுத்த பெரிய நகரமான லக்னோதான் தலைநகரமாயிருக்கிறது.

உத்தரப் பிரதேசத்தில்தான் இராமர் பிறந்த அயோத்தி உள்ளது; கிருஷ்ணர் பிறந்த மதுராவும் உள்ளது. நேரு மாமா பிறந்த அலகாபாத்தும் உள்ளது. கங்கை, யமுனை பாயும் பிரதேசமாகவும் உள்ளது. இவற்றால் அந்த மாநில மக்கள் மிகவும் பெருமைப்படுகிறார்கள்.

இந்த ஹிந்தி மாநிலத்தில் தமிழகக் கவிஞர் ஒருவரைப் பாராட்டுகிறார்கள் என்றால், எந்தத் தமிழ் மகன்தான் மகிழ்ச்சி அடையாமல் இருக்க முடியும்?

"இந்த ஆண்டின் துவக்கத்தில் ஹிந்தி குழந்தை எழுத்தாள மன்னரும், குழந்தை இலக்கியத்தில்

ஆராய்ச்சி செய்து டாக்டர் பட்டம் பெற்றவருமான ராஷ்டிரபந்து எனக்குக் கடிதம் எழுதி, "இந்த ஆண்டு குழந்தைக் கவிஞரை நாங்கள் கௌரவிக்கப் போகிறோம். நீங்கள் அவரை எப்படியாவது கான்பூருக்கு அழைத்து வந்து விட வேண்டும்" என்ற அன்புக் கட்டளையைப் பிறப்பித்திருந்தார். அத்துடன் அங்கு என் முன்னிலையில் ஒரு கருத்தரங்கு நடத்த ஏற்பாடு செய்திருப்பதாயும் குறிப்பிட்டிருந்தார்.

பாரதீய பால கல்யாண் சமஸ்தான் விடுத்த அழைப்பினை எடுத்துக் கொண்டு நான் குழந்தைக் கவிஞரைச் சந்தித்து, தகவலைக் கூறினேன். அவர் முதலில் தயங்கினார். "கான்பூரில் எல்லாம் ஹிந்தி மயமாக இருக்குமே!" என்றார்.

"அது பற்றிக் கவலை வேண்டாம். உங்களோடு நானும் வருகிறேன். ஹிந்தி மாநிலத்தை உங்கள் கவிதைகளால் கைப்பற்றி விடலாம்" என்று கூறி, அவரது இசைவைப் பெற்று விட்டேன்!

பிப்ரவரி 23—ஆம் தேதியன்று, இருவரும் எல்லா ஏற்பாடுகளையும் செய்து கொண்டு, கான்பூரை நோக்கிச் சென்றோம். இரவு 1 மணிக்கு ஜான்சி ஜங்ஷன். அதன் பிறகு பசி, குளிர், தூக்கம் எல்லாம் ஒன்று சேர்ந்து எங்களை வாட்டத் தொடங்கின.

கருமமே கண்ணாக உடைய நாங்கள் மெய்வருத்தம் பார்க்கவில்லை. குளிரைத் தாங்கிக் கொண்டோம். பசியை அடக்கிக் கொண்டோம். கண் துஞ்சவில்லை. அதாவது, தூங்காமல் எங்கள் பெட்டி படுக்கைகளைக் காலை வரை பாதுகாத்தோம்.

இதற்குள், இன்னொரு குண்டு எங்கள் முன் வெடித்தது. கான்பூருக்கு எந்த ரயிலும் போகாது என்பதுதான் அது. விட்டோமா நாங்கள்? உதவி ரயில் நிலைய அதிகாரியின் அறையை முற்றுகையிட்டு, கான்பூர் சென்றடையும் வேறு ஒரு வழியைத் தெரிந்து கொண்டோம்.

25—ஆம் தேதி காலை வந்த ஒரு புகை ரதத்தில் (ரயில் வண்டிதான்) ஏறி அமர்ந்தோம். அந்த ரதம் எதிர்பார்த்ததற்கு மாறாக, எங்களைக் கான்பூருக்கு மிக அருகிலேயே கோவிந்தபுரி என்ற இடத்தில் கொண்டு போய் விட்டது. கான்பூர் வரை செல்ல முடியாததற்குக் காரணம், அங்குள்ள மில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்து ரயில் போக்குவரத்தையே தடை செய்து விட்டதுதான்!

கோவிந்தபுரியை அடைந்த நாங்கள் சட்டென ஓர் ஆட்டோ ரிக்ஷாவைப் பிடித்து அதில் அமர்ந்து கான்பூரின் ராஜ வீதியான மால் ரோடை அடைந்து, நண்பர் திரு. விஜய குமார் மேஹ்ரோத்ராவைச் சந்தித்தோம். அவரும் "ஆ! அம்புலி மாமா வந்து விட்டார்! வள்ளியப்பாஜி, வணக்கம். எதிலும் தமிழகம் முந்திக் கொள்கிறது. நீங்கள்தான் பிற மாநிலங்களிலிருந்து நாங்கள் எதிர்பார்க்கும் முக்கிய அன்பர்களில் முன்னதாக வந்தவர்கள்" எனப் பாராட்டினார். களைப்புத் தீர காப்பியைப் பருகக் கொடுத்தார். கான்பூரில் காப்பி அபூர்வம். எங்கும் தேநீர்தான்! பின்னர், நாங்கள் தங்குவதற்கு ஏற்பாடு செய்திருந்த விடுதிக்கு எங்களை அனுப்பி வைத்தார்.

திரு. விஜயகுமார் சிறந்த கவிஞர். இசையில் தேர்ச்சி பெற்றவர். குழந்தை இலக்கியத்திற்கு அருந்தொண்டு ஆற்றி வருபவர். மாபெரும் வியாபார நிறுவனத்தின் தலைவர்.

விடுதியில் எங்களைக் காண பாரதீய பால கல்யாண் சமஸ்தானின் செயலாளர் திரு. தபேஸ்வரி குப்தாவும், டாக்டர் ராஷ்டிரபந்துவும் மற்றும் பல இலக்கிய நண்பர்களும் வந்து அளவளாவினார்கள்.

'குழந்தைப் புத்தகம் வெளியிடுவதில் தோன்றும் பிரச்னைகள்' என்ற தலைப்பில் ஒரு கருத்தரங்கம். ஞானபாலிகா இன்டர் காலேஜில் 26—ஆம் தேதி காலை ஆரம்பமாகியது. சிறப்பு விருந்தினனாகச் சென்ற என் முன்னிலையில் கான்பூர் ஐ.ஓ.டி. பதிவாளர் திரு. கிரிராஜ் கிஷோர் தலைமையில் குழந்தை இலக்கிய மேதைகள் பல்வேறு பிரச்னைகள் பற்றித் தம் கருத்

துக்களைத் தெரிவித்தார்கள். நூலாசிரியம், ஊதியம், விற்பனை, அச்சடிப்பு, வண்ணப்படங்கள், அரசினர் உதவி போன்ற பல விஷயங்களில் பல கருத்துக்கள் கூறப்பட்டன. நானும், எழுத்தாளர்கள் ஒன்று கூடி ஒரு வெளியீட்டகம் நிறுவ வேண்டும் என்றேன்.

அக் கூட்டத்தில் பஞ்சாப் இளம் கவிஞர் அனில்குமார், தம் தாலாட்டுக் கவிதையை, தாய் பாடுவது போலவும் குழந்தை அழுதவாறே கேட்டும் பேசியும், தூங்குவது போலவும் தம் குரலை மாற்றி இசைத்து யாவருடைய பாராட்டுதல்களையும் பெற்றார். குழந்தைக் கவிஞர் தம் இரு பாடல்களைப் பாடி அவற்றின் ஒலி நயத்தை எடுத்துக் காட்டினார். அவர் தமிழில் பாடியதை நான் ஹிந்தியில் விளக்க மற்றவர்கள் கேட்டு மகிழ்ந்தனர்.

மாலை நான்கு மணிக்கு அதே கல்லூரி அரங்கில் பாராட்டு விழா ஆரம்பமாகியது. விழாவிற்கு, கான்பூர் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் விஷன் நாராயண் அஸ்தானா தலைமை தாங்கினார். திரு. விஜயகுமார் மேஹ்ரோத்ராவின் இறை வணக்கத்திற்குப் பின், பாரதீய பால கல்யாண் சமஸ்தானின் தலைவர் திரு. கங்கா பிரசாத் குப்தா யாவரையும் வரவேற்றார். செயலாளர் திரு. தபேஸ்வரி குப்தா சமஸ்தானின் பணிகளைப் பற்றிய அறிக்கையை வாசித்தார்.

திரு. விஜயகுமார் பாராட்டப்படுபவர்களை அவையோருக்கு அறிமுகம் செய்து வைத்தார். குழந்தைகளுக்காகச் சிறந்த இலக்கியம் படைத்த ஹிந்தி எழுத்தாளர் ஐவரும் தமிழ், பஞ்சாபி, மராத்தி, ஒரியா, கன்னடம் ஆகிய மொழி எழுத்தாளர்களும் நல்ல முறையில் பாராட்டப் பெற்றார்கள். கேடயம், பண முடிப்பு, சால்வை, சான்றிதழ் யாவும் ஒவ்வொருவருக்கும் வழங்கப் பெற்றது.

திரு. வள்ளியப்பா தமிழிலே பேசி நன்றி தெரிவித்தார். அதை நான் ஹிந்தியில் மொழி பெயர்ப்புச் செய்தேன்.


மறுநாள் காலை, திரு. விஜயகுமார் எங்களை அழைத்துப் போய்ச் சிற்றுண்டி அளித்து தம் இல்லத்தில் ஒரு கூட்டத்தில் சொற்பொழிவு ஆற்றச் செய்தார். குழந்தைக் கவிஞர் தம் பாடல் ஒன்றைக் கூற, அதை நான் ஹிந்தியில் மொழிபெயர்த்துச் சொன்னேன். சற்று நேரம் அவர்களின் தமிழ் மொழியின் தனித் தன்மைகளை எடுத்துரைத்தோம்.

பிறகு, கைலாஸ் மோட்டார்ஸ் அதிபர் திரு. பிரேம் சந்த்குப்தா நடத்தி வரும் சரஸ்வதி வித்யா மந்திர் பள்ளிக்குச் சென்று, அங்கு மாணவர் கூட்டத்தில் பேசினோம். டாக்டர் ராஷ்டிரபந்து தலைமை தாங்கி எங்களை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தினார். குழந்தைக் கவிஞர் 'கண்ணன் எங்கள் கண்ணனாம்', 'டம்டம், டம்டம், டமாரமாம்' என்ற தமது பாடல்களைப் பாடினார். நான் அவற்றை ஹிந்தியில் விளக்கிக்

மரக்குதிரை

சைக்கிளை முதல் முதலாக மரக் கட்டைகளினால்தான் தயாரித்தார்கள். பிளான்ஹார், மொரார் என்ற இரண்டு பிரெஞ்சுக்காரர்கள் 1779 – இல் தயாரித்த இந்த வண்டியில் சவாரி செய்தவர்கள், கால்களினால் தரையை உந்தி உந்தித் தள்ளிச் சென்றார்கள். பிறகு, படிப்படியாகச் சில மாற்றங்கள் செய்யப்பட்டன. 1840 – இல் முன் சக்கரத்தில் இருந்த மிதிபடிகள், இரும்புப் பட்டையிட்ட பின் சக்கரத்தின் ஆரைக் கால்களுடன் (spokes) இணைந்திருந்தன. இதை 'மரக் குதிரை' (wooden horse) என்று அழைத்தனர். அதன் பிறகு எத்தனை எத்தனையோ மாற்றங்கள்!

— ஏ. ரசீத் (13,402), நீலகிரி



கூறினேன். மாணவர்கள் மகிழ்ச்சி அடைந்தனர். திரு. பிரேம் சந்த் குப்தா எங்களுக்கு நினைவுப் பரிசு கள் வழங்கிக் கௌரவித்தார். எல்லா மாணவர்களுடனும் நாங்கள் விருந் துண்டோம். இனிப்பு வகைகளையும் பூரி, சப்பாத்தியையுமே இரண்டு நாட்களாகச் சாப்பிட்டு வந்த எங் களுக்கு அரிசிச் சோறும், தயிரும் கிடைத்ததால், விருந்து சிறப்பாக இருந்தது.

சென்னை திரும்ப வேண்டிய நேரம் வந்து விட்டது. கான்பூரில் ரயில் இல்லாததால் ஜான்ஸி சென்று இரவு ஒரு மணிக்கு கிராண்ட் டிரங் எக்ஸ்பிரஸைப் பிடிப்பது எப்படி என யோசித்தோம். எங்கள் நிலை மையை நன்குணர்ந்த திரு. பிரேம் சந்த், தம் கார் டிரைவரிடம் ரூபாய் 400 கொடுத்து, ''வண்டியில் பெட் ரோல் போட்டுக் கொண்டு, இவர் களைப் பத்திரமாக ஜான்ஸி ஜங்ஷ் னில் கொண்டு போய்ச் சேர்த்து விடு'' என்றார்.

எங்கள் கூடவே டாக்டர் ராஷ்டிர பந்துவும் - ஜான்ஸி வரை வந்தார். ராஷ்ட்ரபந்துவைப் போன்ற ஓர் எழுத்தாளரைக் காண்பதே அரிது. சில மாதங்களுக்கு முன்புதான் யமுனை ஆற்றிலே குளிக்கச் சென்ற அவரது அருமை மகன் ஆற்றிலே மூழ்கி இறந்தான். விழா நடப்பதற்கு 14 நாட்கள் முன்பு, அவரது அண்ணன் இறந்து விட்டார். இருப்பினும், தொண்டு உள்ளமும், குழந்தை இலக் கிய வளர்ச்சியில் அக்கறையும் கொண்ட அவர், விழாவின் வெற் றிக்கு அயராது உழைத்ததோடு, எங் களை வழியனுப்ப ஜான்ஸி வரை வந்தது எங்கள் நெஞ்சங்களை நெகிழ வைத்தது.

ஹிந்தி பேசும் மக்கள் தமிழகத் தில் தமிழிலே குழந்தை இலக்கியம் படைத்து, இலக்கியப் பணிபுரிந்து வரும் குழந்தைக் கவிஞர் அழ. வள்ளி யப்பாவைப் பாராட்டினார்கள் என் றால், அது அவரை மட்டுமல்ல; தமி ழையும், தமிழ் மக்கள் எல்லோரை யுமே பாராட்டியதற்குச் சமமாகும். இது தேசிய ஒருமைப்பாட்டிற்கும் ஓர் எடுத்துக்காட்டாகும்.



கேளுங்கள்; சொல்லுகிறோம்

* துப்பறியும் நாவல்களைத் தமிழில் முதல் முதலாக எழுதியவர் யார் என்று கூற முடியுமா?

— டி. பி. வரதன், சென்னை — 5.

ஜே. ஆர். ரங்கராஜு என்பவர்தான். இந்த நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து (1905 முதல்) பல துப்பறியும் நாவல்களை எழுதினார். இந்த நாவல்கள் எல்லாவற்றிலும் துப்பறியும் கோவிந்தன் என்பவர் வருவார். இவரது நாவல்களில் சில மேடைகளில் நடிக்கப் பட்டன. சில திரைப்படங்களாகவும் அக்காலத்தில் வந்தன.

* தமிழ்நாட்டில் புளிய மரங்கள் அதிகமாக இருக்கும் இடம் எது?

— பெ. சீனிமுகந்தன், தில்லைநகர்.

தருமபுரி மாவட்டத்தில்தான். புளி அதிகமாகக் கிடைக்கக் கூடிய மாவட்டம் இதுதான்.

* தென் இந்தியாவில் மிக உயரமான சிகரம் எது?

— பி. ரமேஷ், உதகமண்டலம்.

நீலகிரி மலைக்குத் தெற்கேயுள்ள சகயாத்ரி மலைத் தொடரின் ஒரு பகுதியான ஆனைமலையிலுள்ள ஆனைமுடிதான் தென்னிந்தியாவில் உயரமானது. உயரம் 8850 அடி.

* கவிமணி மிகப் பெரிய கவிஞர். அப்படியிருக்கும் போது, இக்காலக் கவிஞர்கள் சிலருக்குக் 'கவிமாமணி' என்று பட்டம் சூட்டுகிறார்களே, இது சரியா?

— பாப்பிரியன், மதுரை — 2.

எது உயர்ந்த பட்டம்? கவிமணியா, கவிமாமணியா?



சரியில்லைதான். சிறப்பாகக் கவிதை எழுதுகிறவர்களுக்கே இப்பட்டம் கொடுக்கப்படுகிறது என்றாலும், அவர்களில் எவருமே கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளையை விடச் சிறந்தவர்கள் என்று கூறிவிட முடியாது.

* ஞானபீட விருது பெற்ற அகிலன் அவர்கள் எங்களைப் போன்ற சிறுவர் சிறுமியர்க்காகவும் கதைகள் எழுதியிருக்கிறாராமே, அவை புத்தகமாக வந்திருக்கிறதா?

— என். சிலம்பு, அறந்தாங்கி.



சிறுவர் சிறுமியருக்காக அவர் நான்கு கதைப் புத்தகங்கள் எழுதியிருக்கிறார். நல்ல பையன், தங்க நகரம், சிவப்பு விளக்கு, கண்ணான கண்ணன், — இவற்றில் கண்ணான கண்ணன் தமிழக அரசு பரிசு பெற்றது.

* பாரதிதாசனுக்கு அவருடைய பெற்றோர் வைத்த பெயர் என்ன? அவர் எந்த ஆண்டில் பிறந்தார்?

— சி. குருமூர்த்தி, வேதாரண்யம்.

இவருடைய இயற்பெயர் கனகசுப்புரத்தினம். புதுச்சேரியில் பாரதியார் வாழ்ந்த போது, அவரிடத்தில் இவருக்கு மிகுந்த பற்றுதல் ஏற்பட்டது. எனவே, தன் பெயரை, 'பாரதிதாசன்' என்று மாற்றிக் கொண்டார். இவர் பிறந்தது 29.4.1891 — இல். அடுத்த ஆண்டு இவரது நூற்றாண்டு விழா தொடங்குகிறது.

* கூடைப் பந்து விளையாட்டைக் கண்டுபிடித்தவர் யார்? எப்போது அது நம் நாட்டுக்கு வந்தது?

— வி. ஸ்ரீராம், சென்னை — 18.,

அமெரிக்காவிலுள்ள ஸ்பிரிங் ஃபீல்டில் பணியாற்றிய டாக்டர் நய்ஸ்மித் (**Naismith**) என்பவர்தான் இதை 1891 — ஆம் ஆண்டு கண்டுபிடித்தார். இந்த ஆட்டம் இந்தியாவுக்கு 65 ஆண்டுகளுக்கு முன்பு வந்தது.

அட்டை வண்ணப்படம்: ஜி. ஸோபனா. — கே. வி. ஆனந்த்.



ஜி.யு.போப்

தோற்றம்: 24.4.1820 மறைவு: 11.2.1908

குழந்தைகளே! தென்னாப்பிரிக்கா என்றதும், நமது தேசத் தந்தை காந்திஜியின் நினைவு வருகிறது அல்லவா? ஆம்! அங்குதான் அவர் தமது 'சத்தியாக்கிரகப்போராட்டத்தை' முதன் முதலில் தொடங்கினார். அங்கு வாழும் கறுப்பு இன மக்களுக்காக — அவர்களின் உரிமைகளைப் பெற்றுத் தருவதற்காக, வெள்ளை ஏகாதிபத்திய அரசை எதிர்த்துப் போராடினார். அன்று அவர் தொடங்கிய பணி, இன்று வரையில் முற்றுப் பெறவில்லை. அவருக்குப் பிறகு, பல தலைவர்கள் அப்பணியைத் தொடர்ந்து ஆற்றிவருகின்றனர். அவர்களில் ஒருவர், கடந்த 25



• நெல்சன் மண்டேலா.

சிறையில் வாடும் தலைவருக்குப் பெரிய பெரிய விருதுகள்!

ஆண்டுகளுக்கும் மேலாகச் சிறையில் அடைபட்டுக் கிடக்கிறார். அவர் யார் தெரியுமா குழந்தைகளே? — அவர் தான் நெல்சன் மண்டேலா! அவருடைய கதை இதோ, ஆம்! நெல்சன் மண்டேலாவின் கதை!

தென்னாப்பிரிக்க மக்கள் தொகையில் கறுப்பு இன நீக்ரோக்களின் எண்ணிக்கை 70 சதவீதம். அந்த நாட்டின் சொந்தக்காரர்களே அவர்கள் தான். ஆனால், ஐரோப்பாவிலிருந்து வந்த 18 சதவீதம் வெள்ளை இனத்தவர்கள், அவர்களை அடக்கி ஆண்டு வருகின்றனர். இன—நிற வெறி பிடித்த அந்த வெள்ளைச் சிறுபான்மை அரசுக்கு 'பிரிட்டோரிய அரசு' என்று பெயர். கறுப்பர்களின் நிழல்கூடத் தம் வெள்ளை இன மக்களின் மீது படக் கூடாது என்று, கறுப்பர்களை ஊரை விட்டுத் தனியான இடத்தில் ஒதுக்கிவைத்துள்ளது. அவர்களுக்கென்று தனியான குடியிருப்புகள், தனியான சாலைகள், தனியான பள்ளிகள், தனி மருத்துவமனைகள்.

இன்னும் எல்லாம் தனித்தனி தான்! சுரங்கங்கள், தொழிற் சாலைகள், நிலங்கள் எல்லாம் வெள்ளையர்களிடம். ஆனால், அவற்றில் வேலை செய்யும் கூலிகள் மட்டும் கறுப்பர்கள். ஊதியத்தில் கூடக் கறுப்பர்களுக்குக் குறைவு. வெள்ளையர்களுக்கு அதிகம். இந்த ஏற்றத்தாழ்வுகளைப் பற்றிக் கறுப்பர்கள் குரல் எழுப்ப முடியாது. எழுப்பினால், வேட்டை நாய்களை அவிழ்த்து விட்டு விரட்டுவார்கள். போலீசைக் கொண்டு, ஓட ஓட விரட்டியடிப்பார்கள்; துப்பாக்கியால் சுட்டுத் தள்ளுவார்கள். அல்லது, சிறையிலடைப்பார்கள். அப்படிச் சிறையில் அடைக்கப்பட்டுள்ளவர்தான், கறுப்பர்களின்

ஜானகி மணாளன்

தலைவரான நெல்சன் மண்டேலா!

தென்னாப்பிரிக்காவின் 'டாங்ஸ் காய்' பிரதேசம். அங்கு 'உமர்தலா' என்று ஒரு கிராமம். அதில் 'டெம் போம்' என்று ஒரு மரபுக் குடி நீக்ரோ மக்கள் இனம். அதன் தலைவருக்கு மகனாகப் பிறந்தவர்தான் நெல்சன் மண்டேலா. ஆண்டு 1918 ஜூலை 18.

தந்தையின் எண்ணம் என்ன, தெரியுமா? தனக்குப் பிறகு, தன் இடத்திற்கு மண்டேலா வர வேண்டும் என்பது. ஆனால், மண்டேலாவுக்கு அதில் நாட்டமில்லை. அவர் சிறு வயது முதலே கொஞ்சம் பிடிவாதக்காரர்; துணிச்சல் மிக்கவர்; அநியாயத்தைத் தட்டிக் கேட்கும் துணிவு உள்ளவர். கலகமே செய்து விடுவார். எனவே, 'வெள்ளை இனத்தவரின் ஆதிக்கத்தை ஒழிக்க வேண்டும். தமது மரபுக்குடி மட்டுமல்லாது, அனைத்து நீக்ரோ இன மக்களையும், சுதந்திரமாக வாழச் செய்ய வேண்டும் என்பதுதான் அவரது லட்சியமாக இருந்தது.

மண்டேலா சிறந்த அறிவாளி. அத்துடன் கடின உழைப்பாளி. முதல் வகுப்பில் பி.ஏ. பட்டம் பெற்றதும், எல்.எல்.பி.யும் படித்துத் தேறினார். அது வக்கீல் படிப்பு. ஜோஹன்ஸ்பர்க் என்று ஒரு நகரம். அங்கு வக்கீல் தொழிலில் ஈடுபட்டார். நல்ல வருமானம். மிகக் குறுகிய காலத்தில், பெயரும், புகழும் அவரைத் தேடி வந்தன. ஆனால், அவருடைய நோக்கம் அதுவல்லவே!

எனவே, விரைவிலேயே தமது வக்கீல் தொழிலைத் துறந்து விட்டுப் பொது வாழ்வில் ஈடுபடத் தொடங்கி விட்டார். 'ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ்' என்று ஒரு கட்சி. மண்டேலா அதில் சேர்ந்து விட்டார். வெகு விரைவிலேயே, அக் கட்சியில் குறிப்பிடத்தக்க ஓர் இடத்தைப் பற்றினார்.

காங்கிரஸ் மிகவும் மெத்தனமாகச் செயல்பட்டு வந்த நேரம். மண்டேலா, அயராத தமது கடின உழைப்பின் மூலம் காங்கிரசுக்குப் புத்துயிர் ஊட்டினார். எந்த இடர்வரினும், துச்சமென மதித்துத் தீரத்துடன், பல போராட்டத் திட்டங்களை வகுத்து, தமது நண்பர்களுடன் சேர்ந்து அவற்றைச் செயல்படுத்தினார். அவற்றில் ஒன்று நியூ பிரிட்டன் ரயில் நிலைய முற்றுகைப் போராட்டம். அது நடந்தது 1952 ஜூன் 26. தொடர்ந்து நடந்த போராட்டங்களில் நான்கே மாதத்தில் 8500 பேர் வரை சிறைப்பட்டனர். அதன் காரணமாகக் காங்கிரசின் செல்வாக்கு வளர்ந்தது.

அரசு மண்டேலாவை, இப்படிப் போராட எத்தனை நாள்தான் வெளியில் விட்டு வைக்கும்? விரைவில் அவர் கைதானார். கம்யூனிஸ்ட் சதிகாரர் என்று குற்றம் சாட்டப்பட்டார். ஆனால், தகுந்த ஆதாரம் வேண்டாமா? நீதிமன்றம் அவரை விடுதலை செய்து விட்டது. சிறிது காலம்தான்! பிறகு, மீண்டும் கைதானார். அப்போது மேலும், கடினமான தேசத் துரோகக் குற்றச்சாட்டு வழக்கு விசாரணை சில ஆண்டுகள் நடந்தது. கடைசியில், முன் தடவை போலத்தான். ஆம்! அவர் குற்றம் அற்றவர் என்று விடுதலையானார்.

அதன் பிறகு, மண்டேலாவின் புகழ் நாடெங்கும் பரவியது. அனைவரும் அவரைப் புகழ்ந்தனர். தேசிய உணர்வு, துன்பங்களைக் கண்டு அஞ்சாமை, மக்களிடம் அவருக்கு இருந்த இரக்க உணர்வு ஆகிய அவருடைய உயர் குணங்களை மக்கள் புரிந்து கொண்டனர். அவருக்கு மதிப்பும் மக்கள் ஆதரவும் பெருகின.

1955. 'க்ளிப்டவுன்' என்ற நகரில், ஓர் அரசியல் மாநாடு கூட்டினார். அதில், தென்னாப்பிரிக்காவுக்கான அரசியல் மற்றும் பொருளாதார சுதந்திரத்துக்கான புதிய திட்டம் வகுக்கப்பட்டது. எனவே, அம் மாநாடு வரலாற்றுச் சிறப்புப் பெற்ற ஒன்றாயிற்று.

அதன் பிறகு மண்டேலாவின் புகழ் வானளாவு உயர்ந்தது. அதைக் கண்ட பிரிட்டோரிய அரசு நடுநடுங்கியது. எனவே, அவரைச் சுற்றி ரகசியப் புலனாய்வுகளை அதிகரித்தது. ஆனால், மண்டேலா அவற்றைக் கண்டு அஞ்சவோ, அல்லது அவற்றையெல்லாம் பொருட்படுத்தவோ இல்லை. அடுத்தடுத்துப் பல போராட்டத் திட்டங்

களை வகுத்துக் கொண்டே சென்றார்.

1960 மார்ச் 21. 'ஷார்ப் வில்' என்ற நகரில் மிகப் பெரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை மண்டேலா நடத்தினார். அக் கூட்டத்தின் மீது, அரசு துப்பாக்கிச் சூடு நடத்தியது. 69 பேர் இறந்தனர். கிட்டத்தட்ட 250 பேர் படுகாயம். இந் நிகழ்ச்சி 'தென்னாப்பிரிக்காவின் ஜாலியன்வாலாபாக்' என்று அழைக்கப்படுகிறது. ஏன் தெரியுமா, குழந்தைகளே! நமது நாட்டு விடுதலைப் போரில், பஞ்சாபில், ஆங்கில அரசு 'ஜாலியன்வாலா பாக்' என்ற மைதானத்தில் நடந்த பொதுக் கூட்டத்தின் போது, துப்பாக்கிச் சூடு நடத்தி, நூற்றுக்கணக்கானவர்களைக் கொன்றது அல்லவா? அதே போன்ற நிகழ்ச்சி என்பதால், இப்படி அழைக்கப்படுகிறது.

அந்த நிகழ்ச்சிக்குப் பிறகு, அரசு மேலும் அதிக அடக்குமுறையைக் கைக் கொண்டது. அரசியல் கூட்டங்கள், ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள் போன்றவற்றைத் தடைவிதித்துச் சட்டம் இயற்றியது.

அதைக் கண்டு, ஆப்பிரிக்கா கண்டத்தின் மற்ற நாடுகளும் திகைத்தன. எங்கும் ஒரே பதற்றம். கொந்தளிப்பு. தென்னாப்பிரிக்கக் கறுப்பர்கள் அதை ஒரு சவாலாகவே எடுத்துக் கொண்டனர். சிறிதும் அஞ்சாமல், எதிர்த்து நிற்கத் தயாராயினர். அப்போது மண்டேலா என்ன சொன்னார், தெரியுமா?

''இந்தப் புதிய சட்டம், நம் நாட்டைத் தலைகுனியச் செய்கிறது. எல்லா அரசியல் சட்டங்களையும், சமுதாயச் சட்டங்களையும், மற்றும் நீதியின் மதிப்பையும் இது தடை செய்கிறது. இதை நாங்கள் ஒரு போதும் ஏற்க மாட்டோம்'' என்று முழங்கினார்.

அதன் பிறகு, மண்டேலாவின் போக்கில் பெரும் மாற்றம் ஏற்பட்டது. என்ன தெரியுமா?

இனி அமைதி வழியில் போராடுவதால் மட்டும், பிரிட்டோரியா அரசு செவிசாய்க்காது என்பதை உணர்ந்தார். தம் நண்பர்களுடன் இது பற்றித் தீவிரமாகக் கலந்தாலோசித்தார். கடைசியில், ஆயுதம் தாங்கிய கலகத்தில் ஈடுபட வேண்டும் என முழக்கமிட்டார்.

அதன்படி, 1961ல், ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ், ஒரு படைப் பிரிவை ஏற்படுத்தியது. அவர்கள் மொழியில் அதற்கு 'உமக்ரோன்டோ வே ஸிஜ்வே' என்று பெயர். அதன்படி, போர்வாள் போராட்ட வழிமுறைகளை வகுத்துச் செயல்படலானார். அதற்கு ஏராளமான ஆயுதங்கள் தேவைப்பட்டன. அவற்றைப் பெறுவதற்காக, நிதியுதவி கேட்டு, பல்வேறு ஆப்பிரிக்க நாடுகளுக்கு மாறு வேடத்தில் சுற்றுப் பயணம் செய்தார். பல நாடுகளின் ஆதரவு கிட்டியது.

அதெல்லாம் பிரிட்டோரிய அரசுக்குத் தெரியாமல் போகுமா? இனி மண்டேலாவைச் சுதந்திரமாக வெளியில் வலம் வர அனுமதிப்பது ஆபத்து என்பதை உணர்ந்தது. எனவே, கைது செய்ய முடிவு செய்தது.

டர்பன் என்று ஒரு நகரம். அங்கிருந்து 80 மைலில் நேடால். அங்கு மண்டேலா பிரிட்டோரிய அரசுப் போலீசாரிடம் பிடிபட்டு விட்டார். ஆண்டு 1962 ஆகஸ்ட் 5. இத்தனைக்கும், அவர் ஒரு வெள்ளை இனத் திரைப்பட நடிகரின் காரோட்டி போன்று வேடமிட்டுத் தலைமறைவாகத்தான் இருந்தார். ரகசியப் புலனாய்வுத் துறையுடன் தொடர்பு கொண்ட, உள்ளூர் ஒற்றர் ஒருவர், வஞ்சகமாக, அவரைக் காட்டிக் கொடுத்து விட்டார்.

மண்டேலா மீது, கலகம் செய்ததாக வழக்குத் தொடுக்கப்பட்டது. விசாரணைக்குப் பிறகு, அவருக்கு ஐந்தாண்டு கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

அவரது சிறை வாழ்க்கை 1962 ஆகஸ்ட் 10—ஆம்நாள் தொடங்கியது. அரசு அத்துடன் திருப்தி அடையவில்லை. ஏன் தெரியுமா? தண்டனைக் காலம் முடிந்து விடுதலையான பிறகு, மேலும் தீவிரமாக ஆயுதம் தாங்கிய கலவரத்தில் ஈடுபடுவாரே என்ற பயம். ஆகவே, இன்னொரு வழக்கை ஜோடித்து, நீதிமன்றத்தில்



மண்டேலாவின் மனைவி வினியும் குழந்தைகளும்.

தாக்கல் செய்தது பிரிட்டோரிய அரசு. குற்றச்சாட்டு என்ன தெரியுமா, குழந்தைகளே? புரட்சி மூலம் ஆட்சிக் கவிழ்ப்புக்குச் சதித் திட்டம் தீட்டினார் என்பதுதான் அது. தென்னாப்பிரிக்கக் கறுப்பர் வரலாற்றில், அது 'ரிவோனியா வழக்கு விசாரணை' எனப் பிரபலமடைந்துள்ளது.

அப்போது, நீதிமன்றத்தில், மண்டேலா நாலரை மணி நேரத்துக்கு ஒரு சொற்பொழிவே நிகழ்த்தி விட்டார். அப் பேச்சு, தென்னாப்பிரிக்க காங்கிரசின் கொள்கை முழுக்க தஸ்தாவேஜாகவே இன்றும் கருதப்படுகிறது.

1964 ஜூன் 12. அவருக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டது. எந்த ஒரு நாகரிக நாட்டிலும், ஆயுள் தண்டனை பெற்றவர்கள், பத்துப் பன்னிரண்டு ஆண்டுகளில் விடுதலையாகி விடுவார்கள். ஏனெனில், அவ்வப்போது, தண்டனைக் காலத்தில் தள்ளுபடி உண்டு. ஆனால், பிரிட்டோரிய அரசின் சட்டத்தில் அதற்கெல்லாம் இடம் இல்லை. எனவேதான், 1962 ஆகஸ்ட் 10 முதல் 25 வருடங்களுக்கு மேலாகச் சிறையிலிருந்தும், இன்னும் அவர் விடுதலை செய்யப்படவில்லை!

அவர் முதலில் 'ரோபென்' தீவில் உள்ள போல்ஸ்மூர் சிறைச் சாலையில் அடைக்கப்பட்டார். கைதி எண் 466/64. அவர் ஏன் அங்கு அடைக்கப்பட்டார், தெரியுமா? அவரைப் பற்றிய எந்தவிதத் தகவலும் வெளி உலகுக்குத் தெரிந்து விடக் கூடாது என்பதற்காகத்தான். 1982 ஏப்ரலில் அவர் அங்கிருந்து அகற்றப்பட்டு, போல்ஸ்மூருக்கு அருகிலேயே வேறொரு சிறையில் அடைக்கப்பட்டார். அந்த இடத்தைச் சுற்றிப் பலத்த போலீஸ் பந்தோபஸ்து.

நெல்சன் மண்டேலா திருமணமானவர். 1958 ஜூன் 14—ஆம் நாள், அவர் 'வினி' என்ற பெண்ணை மணந்தார். அவர்களுக்கு தற்போது இரண்டு பெண்கள் உள்ளனர்.

வினி மண்டேலா ஒரு வீரப் பெண்மணி. கணவரின் நோக்கம் நிறைவேறத் தன்னை அர்ப்பணித்துக்கொண்டு, தென்னாப்பிரிக்கத் தேசிய காங்கிரஸ் தொண்டர்களை வழி நடத்திச் சென்று கொண்டிருக்கிறார். அவரை எல்லாரும் அன்புடன் 'தென்னாப்பிரிக்க அன்னை' என்றே அழைக்கின்றனர். மக்களின் முன் தோன்றும்போது மன உறுதியைக் குறிப்பதாகக் கையை இறுக்க மூடி, முஷ்டியை உயர்த்திக் காட்டுவார். பிரிட்டோரிய அரசு அவர் மீதும் பல தடைகளை விதித்துள்ளது. குறிப்பாக, அவர் வெளிநாடு எதற்கும் செல்ல அரசு

அனுமதிக்கவில்லை.

1980 நவம்பர் 14 குழந்தைகள் தினத்தன்று, இந்தியா மண்டேலாவுக்கு 'நேரு நல்லெண்ண விருது' வழங்கியது. நெல்சன் சிறையில் இருக்கிறார் அல்லவா? எனவே, வினிமண்டேலாவுக்கு நம் அரசு அழைப்பு விடுத்தது. ஆனால், பிரிட்டோரிய அரசு அவரை அனுமதிக்கவில்லை. அதன் பிறகு, தென்னாப்பிரிக்க தேசிய காங்கிரசின் தலைவர் ஆலிவர் டாம்போ வந்து அந்த விருதினைப் பெற்றுச் சென்றார்.

நேரு விருதைப் போல், மேலும் பல விருதுகள் அவரை நாடிவந்தவண்ணம் உள்ளன. உதாரணத்துக்குச் சில வற்றைச் சொல்லவா? இதோ: சுதந்திரத்தைக் காக்கப் போராடியதற்காக சைமன் பொலிவர் விருது; கியூபாவின் பலாயா கிரோன் விருது; மனித அதிகாரத்தை நிலைநாட்டப் பாடுபடுவதற்காக க்ரிஸ்கி விருது; சர்வதேசப் பிரிவுணர்வுக்காகக் கிழக்கு ஜெர்மனி விருது; மூன்றாம் உலக நாடுகளுக்கான ஐ.நா. விருது. இப்படி இன்னும் பல. சிறையிலிருக்கும் போது வேறு எவருமே இப்படிப் பல சர்வதேச விருதுகளை, இதுவரையில் பெற்றதில்லை. இவரே முதல் நபர்!

அது மட்டுமல்ல; இன்னும் சில சிறப்புகளும் அவரைத் தேடி வந்தன. என்னென்ன தெரியுமா?

ரோம், பிளாரன்சு, அபர்டீன், கிளாஸ்கோ போன்ற பல பெரிய நகரங்கள், அவருக்குக் 'குடியுரிமை' வழங்கியுள்ளன. மேலும், உலகின் பல பல்கலைக் கழகங்கள் அவருக்குக் கௌரவ டாக்டர் பட்டங்களை வழங்கியுள்ளன. அமெரிக்க வாஷிங்டன் நகரில் ஒரு தெருவுக்கு 'நெல்சன் மண்டேலா தெரு' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது!

சில மாதங்களுக்கு முன்பு, அவருக்குச் சிறையில் காச நோய் ஏற்பட்டிருப்பதற்கான அறிகுறி தோன்றியது. அவர் உயிரைக் காப்பாற்ற அவரை விடுதலை செய்ய வேண்டும் என்ற கோரிக்கை வலுவடைந்தது என்றாலும்கூட, பிரிட்டோரியா அரசு மனம் இரங்கவில்லை. மாறாக, அவரைச்

உண்டு/ இல்லை

ஆழி

இங்கே உள்ள 8 உயிரினங்களில், 4 வெகு காலத்திற்கு முன்பு இருந்தவை. இப்போது இருக்கிறவை எவை? இல்லாதவை எவை?



விடை வேறு பக்கம்

சிறையிலிருந்து வேறொரு பிரத்தியேக இடத்தில் வைத்து வைத்தியத்துக்கு ஏற்பாடுகள் மட்டும் செய்தது. அந்த இடத்திலும்கூட, கட்டுக் காவல்கள்தான்!

மண்டேலாவை விடுதலை செய்யுமாறும், இன—நிறவெறிக் கொள்கையைக் கைவிடுமாறும், உலக நிறுவனங்கள் மற்றும் உலக நாடுகள் எல்லாம் பலமுறை தென்னாப்பிரிக்க அரசைக் கேட்டுக் கொண்டன. அந்நாட்டின் மீது பொருளாதாரத் தடை கூட விதிக்கப்பட்டது. ஆனாலும், பிரிட்டோரியா நிறவெறி அரசு சிறிதும் மனம் இரங்கவில்லை. இப்படி அது பிடிவாதமாக இருப்பதற்கு என்ன காரணம்?

தென்னாப்பிரிக்காவில் 70 சதவீதம் பேர் கறுப்பர்கள் இருந்தும் அவர்களுக்குள் ஒற்றுமை இல்லை. அதுதான் முக்கிய காரணம். அந்த 70 சதவீதத்தில் மொத்தம் 9 நீக்ரோ உட்குடியினர் உள்ளனர். ஜுலூக்கள் 20 சதவீதம் பேர். கோஸாக்கள் 18 சதவீதம்; ஸோடான்கள் 13 சதவீதம் பேர். ஸ்வானாக்கள் 9 சதவீதம். மீதியுள்ள 10 சதவீதத்தில் மற்ற ஐந்து பிரிவினர்.

இவர்களிலே, ஜுலூக்களுக்கும், கோஸாக்களுக்கும் பகை. அடிக்கடி சண்டை. ஒத்துப் போக மாட்டார்கள். ஒரு பிரிவினர் மற்றொரு பிரிவினரை ஒழித்துக் கட்ட முயற்சி செய்கிறார்கள். இவர்களது உட்குடிச் சண்டையில், 1985ல் மட்டும் 238 கறுப்பர்கள் இறந்துள்ளனர். அரசியல் கொள்கைகளிலும் அவர்களிடையே கருத்து வேறுபாடு உண்டு. நெல்சன் மண்டேலாவைப் பிடிக்காத சில பிரிவினரும் உண்டு. அவர்கள், கறுப்பர்களுக்கு வெள்ளையருடன் சம உரிமை என்பதில் நம்பிக்கை இல்லாதவர்கள். இவற்றையெல்லாம் பிரிட்டோரியா அரசு தனக்குச் சாதகமாக்கிக் கொள்கிறது. 'ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்' என்பார்களே! அப்படியாகி விட்டது. ஒற்றுமையே உயர்வு தரும் என்பதை அவர்கள் உணர்ந்து விட்டால், வெற்றி பெறுவது எளிது.

ஆப்பிரிக்க மக்களின் விடுதலைக்காக மண்டேலா தம் உயிரையே பணயமாக வைத்திருக்கிறார். வரும் ஜூலை 18—ஆம் தேதி அவருக்கு 71 வயது நிறைகிறது. நிறவெறி முடிவுக்கு வந்தால், அவர் மகிழ்ச்சியடைவார். அந்த மகிழ்ச்சி அவருக்குக் கிடைக்க வேண்டும் என்று நாமெல்லாம் வாழ்த்துவோம்.

பெயரில்லாத அஞ்சல் தலை

உலகில் முதன் முதலாக அஞ்சல் தலை வெளியிட்ட நாடு இங்கிலாந்து. வெளியிட்ட ஆண்டு 1840. ஆனால், அதில் நாட்டின் பெயர் பொறிக்கப்படவில்லை. அதுவே இப்பொழுதும் தொடர்கிறது. நாட்டின் பெயரில்லாமல் அஞ்சல் தலை வெளியிடும் நாடு இங்கிலாந்துதான்!

— எம். வெங்கடேச மூர்த்தி, (7698), சென்னை — 44.




விஞ்ஞான வளர்ச்சி

கொலம்பஸ் பயண வெற்றியைப் பற்றித் தகவல் அறிந்து கொள்ள இங்கிலாந்தின் அரசி இஸபெல்லாவுக்கு 5 மாதங்கள் பிடித்தன!


ஆபிரகாம் லிங்கன் கொல்லப்பட்ட செய்தி ஐரோப்பாவுக்குத் தெரிய இரண்டு வாரங்களாயின!

நீல் ஆம்ஸ்ட்ராங் நிலவின் மீது நடந்த செய்தியை 1.3 நொடிகளில் உலகம் முழுவதும் தெரிந்து கொண்டது. விஞ்ஞானத்தின் வளர்ச்சி எத்தனை பயனுள்ளதாக இருக்கிறது பார்த்தீர்களா?

— எஸ். ஜெயஸ்ரீ, (1254), திருச்சி — 14.



சின்னக்கதை.



பிரார்த்தனைக்குக் காரணம்

ஓர் அரசன் தன்னுடைய குடிமக்களை மிகவும் கொடுமையாக நடத்தினான். அதிகமான வரி விதித்தான். சிறிய குற்றம் செய்தாலும் கடுமையான தண்டனை அளிப்பான். மக்கள் அனைவரும் அவனை வெறுத்தனர்.

மக்கள் கோயிலுக்குப் போனால், அரசன் இறந்து போக வேண்டும் என்பதே அவர்களுடைய முதல் பிரார்த்தனையாக இருக்கும்.

நாட்டு மக்கள் அனைவரும் தன்னை வெறுப்பதை அரசனும் அறிவான். அதற்காக அவனிடம் எந்த மாற்றமும் இல்லை.

அந்த நாட்டில் இருந்த ஒரு கிழவி மட்டும், "கடவுளே, நான் சாகும் வரை இந்த அரசன் வாழ வேண்டும். அதுவரை அவன் உடல் நலத்தோடு இருக்க வேண்டும்" என்று வேண்டிக் கொண்டிருந்தாள்.

அங்கே இருப்பவர்களில் அவள் அதிக வயதானவள். நல்லவள்; ஊர் மக்களின் மதிப்பைப் பெற்றவள். அவளுடைய பிரார்த்தனையை மக்கள் விரும்பாவிட்டாலும், அதற்காக அவளை ஒன்றும் சொல்வதில்லை.

கிழவியின் பிரார்த்தனையைக் கேள்வியுற்ற அரசன் வியப்படைந்து, அவளை அழைத்து வரச் செய்து, அவளுடைய பிரார்த்தனைக்குக் காரணம் என்ன என்று கேட்டான்.


அதற்குக் கிழவி, "அரசே! நான் சிறுமியாக இருந்த போது உங்கள் தாத்தா ஆட்சி செய்தார். அவர் பெரிய கொடுங்கோலர். அவருக்குப் பின் உங்கள் தந்தை ஆண்ட போது, உங்கள் தாத்தாவே மேல் என்று எண்ணினோம். பிறகு, அவருடைய இறப்புக்காக வேண்டினோம். நீங்கள் ஆட்சிக்கு வந்தீர்கள். உங்கள் ஆட்சியைப் பற்றி உங்களுக்கே தெரியும். நீங்கள் இறந்து விட்டால், அடுத்து ஆளப் போகும் உங்கள் மகன் உங்களை காட்டிலும் கொடியவனாகவே இருப்பான் என்பது உறுதி! அதனால்தான், நான் உயிரோடு இருக்கும் வரை, நீங்கள் வாழ வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறேன்" என்றாள்.


எஸ். பத்மாவதி (20,382), காஞ்சிபுரம் — 1.

உறுப்புக்களில் ஊர்கள்!


1. குளித்தலை
2. ரிஷிகேசம்
3. கண்ணபுரம்
4. கோகர்ணம்
5. ஆலவாய்
6. பல்லாவரம்
7. தொண்டைமான் நல்லூர்
8. கைலாசபுரம்
9. கோழிக்கால் நத்தம்








பகல் நேரங்களில் மரங்கள் தங்களிடமுள்ள தண்ணீரை இழக்கின்றன. ஒரு பெரிய மரம், ஒரு வெப்பமான தினத்தில் கிட்டத்தட்ட 50 வாளி தண்ணீரை நிலத்திலிருந்து உறிஞ்சி எடுத்து, அதை இலைகளின் வழியே வெளியே விடும்.



ஒரு சின்ன பரிசோதனை மூலம் நீங்கள் இதை நேராகப் பார்க்கலாம். ஒரு புதரின் இலைகள் அடர்ந்த கிளையின் மேல் ஒரு பிளாஸ்டிக் பையை நுழைத்து அதன் வாயை கிளையின் தண்டைச் சுற்றி அழுத்திக் கட்டி விடுங்கள். மூன்று நாட்கள் அப்படியே இருக்கட்டும். அந்தப் பையின் உள்ளே நிறைய தண்ணீர் சேர்ந்திருப்பதைப் பார்க்க முடியும். வெயிலில் அதிகமாக இருக்கும் நாட்களில், பையில் சேரும் தண்ணீரின் அளவும் அதிகமாக இருக்கும்.

விரல் ரேகை சித்திரங்கள்






தேவையானவை :
ஒரு பென்சில், ஒரு ரப்பர், வெள்ளை டிராயிங் காகிதம் வாட்டர் கலர்கள், கறுப்பு ஸ்கெட்ச்பேனா, வர்ணங்களைக் குழைக்க ஒரு தட்டு, கை துடைத்துக் கொள்ள பழைய துணி

படம் வரைந்து வர்ணம் தீட்ட இது ஒரு புதுமையான வழி. சாதாரணமாகப் படத்தை வரைந்துவிட்டு வர்ணம் தீட்டுவோம். ஆனால் விரல்ரேகை சித்திரங்களை வரைய இதற்கு நேர்மாறாகச் செய்ய வேண்டும். ஏதாவது நாலைந்து வர்ணங்களைப் பிளேட்டின் மீது தனித்தனியாகக் குழைத்துக் கொள்ளுங்கள். ஏதாவது ஒரு வர்ணத்தின் மீது கட்டை விரலை வைத்து அழுத்தி எடுத்து, பிறகு டிராயிங் காகிதத்தின் மீது விரலை அழுத்துங்கள். துணியினால் கையைத் துடைத்துக் கொண்டு விட்டு, வேறொரு வர்ணத்தின் மீது கட்டை விரலைப் பதித்து, அதைக் காகிதத்தின் மீது பதிக்கவும். காகிதத்தின் மேல் பதிக்கப்பட்ட விரல் அடையாளங்கள் நன்றாக உலரும் வரை காத்திருங்கள். இப்போது ஸ்கெட்ச் பேனாவினால், விரல் அடையாளத்தின் மீது கோடுகளைப் போட்டு அதை மீன் சித்திரமாகச் செய்யலாம். அல்லது ஒரு பறவை, தவளை, ஆடு, பூனை என் ஹம்ப்டி-டம்டி சித்திரமாகக் கூட செய்ய முடியும்.










இந்த முறையில் நீங்கள் செய்யக் கூடியவை ஏராளம். ஒரு பெரிய வெள்ளைக் காகிதத்தை எடுத்துக்கொண்டு அதை விரல் ரேகை சித்திரங்களால் நிரப்பி, அதை அன்பளிப்புப் பொருளுக்குச் சுற்றப்படும் அலங்கார காகிதமாக உபயோகிக்கலாம். அல்லது ஒரே அளவு சிறிய காகிதங்களில் ஒவ்வொரு விரல் ரேகை சித்திரம் வரைந்து, கடிதம் எழுதும் காகிதமாக உபயோகிக்கலாம். விரல் ரேகை சித்திரங்களை வரைந்து வாழ்த்துக் கடிதங்களையும் தயாரிக்கலாம். இப்படி எத்தனை எத்தனையோ செய்யலாம்!








தேசக்கொடிகள் தெரியுமா?

உலகின் பல நாடுகளிலிருந்து வரும் உல்லாசப் பயணிகள் இந்த பஸ்ஸில் இருக்கிறார்கள். பல்வேறு நாட்டின் கொடிகளை நீங்கள் அறிந்திருந்தால், யார் எந்த தேசத்தவர் என்பதைக் கண்டு பிடிக்கமுடியும்.

விடை : A — ஸ்விட்ஜர்லாந்து,
B — இந்தியா, C — ரஷ்யா,
D — துருக்கி, E — ஜப்பான்,
F — இங்கிலாந்து, G — அமெரிக்கா





THE KING OF SWEETS

CUT AND KEEP

HTA 7196



வேலப்பனின் நினைவெல்லாம் மாந்தோப்பில் வைத்த சட்டைகளைச் சுற்றியே சுழன்றது.

அந்தப் பகுதிக்குப் பள்ளி மாண வர்கள் யாரும் போவது இல்லை. தோப்புக்கு உரியவர்கள் வருவார்கள்; வேலை செய்பவர்கள் வருவார்கள்.

வண்ணச்

இருந்தாலும் சட்டைகள் அங்கே இருப் பது நல்லது இல்லை. உடனே எடுத் துக் கொண்டு போய்விட வேண்டும் என்று நினைத்தான்.

உணவு இடைவேளையின் போது போக முடிய வில்லை. சாப்பிட்டு வந்த சற்று நேரத்தில் வரலாற்று ஆசிரியர் தேசப்படப் பயிற்சி கொடுக் கத் தொடங்கிவிட்டார். வேலப்பன் அசோகப் பேரரசுக்கு வண்ணம் கொடுத்தான்; எண்ணம் 'சட்டை சட் டை' என்று சொல்லிக் கொண்டிருந் தது. 'ஆசைத்தம்பி சொல்லாமல் கொள்ளாமல் ஓடி விட்டானே! அவன் இருந்தால் மிகவும் உதவியாக இருக்குமே!'

அன்று ஆசைத்தம்பியைத் தலை மை ஆசிரியர் கேள்விமேல் கேட்கவே, வகுப்புக்குப் போன பின்னாலும் அவன் மிகுந்த அச்சத்தில் இருந் தான். வழக்கமாகவே, ஆசிரியர்கள் நடத்தும் பாடம் அவனுடைய மூளைக் குள் செல்லாமல் ஆவியாகிவிடும். அன்று வகுப்பில் இருப்பதையே அவன் மறந்து விட்டான். பள்ளி விடு வதற்குள் ஓடிவிடலாம் என்று நினைத் தான். தலைமை ஆசிரிடம் மறுபடி சிக்கினால் தொல்லை வந்து விடும் என்று தயங்கினான். பல்லைக் கடித் துக் கொண்டு இருந்தான். மணி அடித் ததுதான் தாமதம், உடனே பறந்து விட்டான்!

'ஆசைத்தம்பிக்காகக் காத்திருப்ப தில் பயனில்லை. எல்லோரும் போகிற வரையில் இங்கே நின்று கொண்டிருந் தாலும் சந்தேகம் வரும்' என்று எண்

8 புதலூர் முத்து

தோட்டத்தின் வானம்பாடிகள்

ணிய வேலப்பன், நேராகக் கடைத் தெருவுக்குப் போனான். பின்னர் அங்கிருந்து வேறு பாதையில் தெற்கே திரும்பி மாந்தோப்புக்கு வந்தான்.

சுற்று முற்றும் பார்த்தான். யாருமில்லை. தூரத்தில் தெரிந்த பள்ளிக் கூடத்திலும் ஆள் நடமாட்டம் இல்லை. 'இந்நேரம் எல்லோரும் போயிருப்பார்கள். காவல்காரர் வகுப்புக் கதவுகளையெல்லாம் சாத்திவிட்டு மோட்டார்க் கொட்டகைக்குப் போயிருப்பார்.'

ஒரு பெரிய மரத்தின் மறைவில் சைக்கிளை நிறுத்தினான். சருகுக் குவியலில் கால் படாமல் நடந்து சட்டைகளை வைத்திருந்த மரத்தை நோக்கிச் சென்றான்.

பொந்துக்குள் கையை விட்ட அவன் தேள் கடித்தது போன்ற அதிர்ச்சிக்கு உள்ளானான். ஒரு பந்து போல் சுருட்டி வைத்திருந்த சட்டைகளைக் காணவில்லை!

சொல்லி வைத்தது போல் எடுத்திருக்கிறார்களே! யார் எடுத்திருப்பார்கள்?

தோப்பைச் சேர்ந்தவர்கள் எடுத்திருக்க வழியில்லை. அப்படியே அவர்கள் கையில் கிடைத்தாலும் அதனால் ஆபத்து ஒன்றும் இல்லை. விஷயம் தெரிந்த யாரோ ஒருவன் தான் எடுத்திருக்க வேண்டும்!

அந்த ஒருவன் — அரவிந்தன்! அவனைத் தவிர வேறு யாரும் இவ்வளவு முயற்சி எடுத்துக் கொள்ள வழியில்லை. அவனை அடக்கிவிட்டால் எல்லாம் சரியாகி விடும். ஆனால், அவன் வசதி படைத்தவன். அவனை எப்படி அடக்குவது? அவனுக்குப் பக்கபலமாக இருக்கிறானே ராமு. அவன் ஏழைதானே! ஏழையை மடக்குவது சுலபம். அவனை மடக்கி விட்டால் அரவிந்தனின் ஆட்டமும் குறைந்து விடும்.

வேலப்பனின் சிந்தனைகள் மழைக் காலக் காளான்களாய்த் தோன்றின; ஈசல்களாகப் பறந்தன.

அப்போது தெற்கே இருக்கும் மணல்மேட்டிலிருந்து ஒரு சைக்கிள் வந்து கொண்டிருந்தது.


'இனி இங்கே நின்று கொண்டிருந்தால் தொல்லைதான்' என்று அந்த இடத்தை விட்டுப் புறப்படத் தயாரானான்.

அவன் சைக்கிளைத் தள்ளிக் கொண்டு சாலைக்கு வருவதற்குள் சைக்கிள்காரன் அருகில் வந்து விட்டான். வந்தவனைப் பார்த்ததும் வேலப்பனின் அச்சம் நீங்கிவிட்டது.

அவன், செய்தித்தாள் போடுவதற்காகப் புதிதாகச் சேர்ந்துள்ள பையன் செல்வராசு!

அவன் முந்திக் கொள்வதற்குள் "செல்வராசு! இந்த நேரத்தில் எங்கே போகிறாய்? என்றான் வேலப்பன்.

"வழக்கமாக சனிக்கிழமை வரும் 'அல்லி' பத்திரிகை ஒருநாள் முன்னதாக இன்றைக்கு வருகிறதாம். ஐயா



அவர் பிழைப்பு

''அந்த ஆளுக்கு அடிச்சுப் பிழைக் கறதுதான் பிழைப்புன்னு சொல்றியே, பெரிய போக்கிரியா?''

''இல்லை, 'டைப்பிஸ்ட்'!''

— வலங்கை ஜி. ராஜசேகர்.

சொன்னார். அதனால் 'பார்சலை' எடுத்துவர இரயில் நிலையத்துக்குப் போகிறேன்,'' என்று சொல்லிவிட்டு, ''ஆமாம், நீ ஏன் இந்த நேரத்தில் இங்கே நிற்கிறாய்?'' என்று எதிர்க் கேள்வி கேட்டான் அவன்.

''இந்தத் தோப்பு மாங்காய்கள் நன் றாக இருக்கும். வாங்கிப் போகலாம் என்று வந்தேன். தோப்புக் காரர் களைக் காணோம். புறப்பட்டு விட் டேன்,'' சமாளித்தான் வேலப்பன்.

''அதோ தெற்கேயிருந்து தோப்புக் காரர் வந்து கொண்டிருக்கிறார்.''

அதைக் கேட்டதும் அவனுக்கு ஒரு நிமிடம் ஒன்றும் புரியவில்லை.

''சரி, நீ போய்ப் பார்சலை எடுத் துக் கொண்டு கடைக்கு வா. மாங்காய் வாங்கிக் கொண்டு இதோ நான் பின் னாலேயே வருகிறேன்'' என்று மறு படியும் சமாளித்தான்.

செல்வராசுவின் சைக்கிள் பார் வையிலிருந்து மறைந்ததும், வேலப் பன் ஒரே தாவாக சைக்கிளில் ஏறி அமர்ந்தான்; கடையை நோக்கி விரைந்தான்.

'அல்லி' இதழ்க் கட்டுகளைக் கடைக்குக் கொண்டு வந்த செல்வ ராசு அவற்றை அடுக்கி வைத்துக் கொண்டிருந்தான்.

வேலப்பன் அவனை அழைத்தான்.

''செல்வராசு! எனக்கு நீ ஓர் உதவி செய்ய வேண்டும்.''

''என்ன உதவியென்று சொல். என் னால் முடிந்தால் செய்கிறேன்.''

''ராமுப்பயல் இருக்கிறான் பார், அவன் என்ன செய்கிறான், எங்கே போகிறான், யாரோடு சுற்றுகிறான் என்று கவனித்து எனக்கு அவ்வப் போது சொல்ல வேண்டும். அவ் வளவுதான்!''

அதை அவன் கொஞ்சமும் எதிர் பார்க்கவில்லை. 'ராமுவின்மீது இவ னுக்கு ஏன் இவ்வளவு வெறுப்பு? இவர்கள் அவனை வேலையை விட்டு நீக்கி விட்டாலும், ஒரு நாள் வழியில் என்னைப் பார்த்து, எப்படியெல்லாம் வாடிக்கையாளர்களிடம் நடந்து கொள்ள வேண்டும்.... பழகவேண் டும் என்று சொல்லிக் கொடுத் தானே! என்னுடைய குணத்தில் நல்ல மாற்றத்தை விளைவித்தானே! அவ னுடையதுன்பத்திலும்என் முன்னேற் றத்தில் அக்கறை காட்டும் அவனுக்கு நான் ஒரு போதும் கெடுதல் செய்ய மாட்டேன்' என்று உறுதியாக நினைத் துக் கொண்டான்.

அதை அவனிடம் கூறமுடியாது என்பதால் வேறு விதமாகப் பேசி னான்.

''சரி, செய்கிறேன். ஆனால் நீ ஒன்று செய்ய வேண்டும்.''

''என்ன செய்ய வேண்டும்?''

''இந்த வேலைக்குத் தனியாகச் சம்பளம் கொடுக்க வேண்டும்.''

சிரிக்காமல் அமைதியாகச் சொன் னான்.

மறு வினாடி அவனுடைய கன்னத் தில் ஓர் அறை விழுந்தது.

''பேப்பர் போடவந்த பயலுக்கு இவ்வளவு திமிரா? இரு... உன்னைத் தக்க சமயத்தில் கவனித்துக் கொள் கிறேன்.''

ஆணவம் அவனுடைய கண்களை மறைத்தது. அதனால் சொற்கள் அம் புகளாக வந்தன. அவன் அறைந்த அறையால் ஏற்பட்ட வேதனையை விட, அந்தச் சொற்கள் செல்வராசு வின் உள்ளத்தைப் புண்படுத்தின.

''ஏழை என்றால் அவ்வளவு இளப் பமா? நீ சொல்கிறபடியெல்லாம் ஆட வேண்டுமா? இரு, இந்த நியாயத்தை

உன் தந்தையிடமே கேட்கலாம்.''

அந்தச் சொற்கள் வேலப்பனை யோசிக்க வைத்தன. அவன் சொல் வதையெல்லாம் விமலானந்தம் தட் டாமல் கேட்பார் என்பது உண்மை தான். ஆனால், ராமு சென்று 'கோமதி நியூஸ் ஏஜன்சி'யின் வரு மானம் குறைந்திருக்கிற இந்த நேரத் தில் அவருக்குக் கோபம் வந்தாலும் வரலாம். எதற்கும் எச்சரிக்கையாக இருப்பது நல்லது என்று நினைத்தான்.

செல்வராசு தேம்பிக் கொண்டிருந் தான். அவனிடம் அதற்கு மேல் எது வும் பேசாமல் புறப்பட்டான்.

'இந் நேரம் ஆசைத்தம்பியைச் சந் தித்து, சட்டை காணாமற்போன விஷ யத்தைச் சொல்லியிருக்கலாம். இந்தப் பயலால் இவ்வளவு நேரமும் வீணாகப் போய்விட்டது!'

எரிச்சலாக இருந்தது அவனுக்கு.

அமுதா உணவுவிடுதியைத்தாண்டி நடந்து கொண்டிருந்தான். எதிரே கம் பளிச் சால்வையைப் போர்த்திக் கொண்டு, சிகரெட் புகையை விட்டுக் கொண்டு ஓர் உருவம் — விமலானந் தமே தான்!

'இந்த நேரத்தில் அவர் பார்வை யில் பட்டால் கடைக்குக் கூப்பிடுவார்; அங்கே செல்வராசு புகார் அறிக்கை யைப் படிப்பான்!'

அவர் நெருங்கி வருவதற்குள் — பார்ப்பதற்குள் அவன் திரும்பி உணவு விடுதிக்குள் நுழைந்து விட்டான்!

''வா தம்பி வா... உன்னைத்தான் பார்க்க நினைத்தேன்'' குரலுக்குரிய மனிதரைக் கவனித்தான். தையற் காரர் சீனிவாசன்!

'என்னவோ தெரியவில்லையே!' என்ற குழப்பத்தோடு அவருக்கு எதி ரில் சென்று அமர்ந்தான்.


''தம்பி, ஒரு செய்தியை உன்னிடம் சொல்ல வேண்டும்.''

''என்ன செய்தி?''

பரபரப்பை வெளிக்காட்டாமல் கேட்டான்.

''நான் தைத்துக் கொடுத்த மஞ்சள் நிறச் சட்டை....''

வேலப்பனின் இதயம் படபடத் தது.





பிழையில்லாமல் எழுதுவோம்

நாம் கடிதம் எழுதும்போதோ, கதை, கட்டுரை, பாடல் எழுதும் போதோ பிழைகள் வந்துவிடுகின்றன. கூடுமான வரை பிழையின்றி எழுதக் கற்றுக் கொள்வது நல்லதல்லவா?

கீழே பிழைகளும், அவற்றிற்குத் திருத்தங்களும் தரப்பட்டுள்ளன. படித்துப் பார்த்துப் பயன்பெறுவோம்.

பிழை	திருத்தம்
அருவெறுப்பு	அருவருப்பு
ஊரணி	ஊருணி
சுவற்றில்	சுவரில்
எந்தன்	என்றன்
துளிர்	தளிர்
சித்தரித்தான்	சித்திரித்தான்
கோடாலி	கோடரி
தொந்திரவு	தொந்தரவு
கத்திரிக்கோல்	கத்தரிக்கோல்
வெய்யில்	வெயில்
வரட்சி	வறட்சி
சிலவு	செலவு
பதட்டம்	பதற்றம்
சோம்பேரி	சோம்பேறி
கோர்வை	கோவை
புண்ணாக்கு	பிண்ணாக்கு
எல்லோரும்	எல்லாரும்
துகை	தொகை
பீத்தல்	பீற்றல்
வல்லுனர்	வல்லுநர்
புட்டு	பிட்டு
சதை	தசை
அருகாமை	அருகில்

"ஏன், அதற்கென்ன?"

"அதை எங்கேயாவது தவற விட்டு விட்டாயா?" ஒரு வினாடி தடுமாறினான். மறுவினாடி ஒரு பதிலைத் தயாரித்து விட்டான்.

"பள்ளிக்கு அருகிலுள்ள ஆற்றுக்குக் குளிக்கப் போனேன். அப்போது, கரையில் கிடந்த சட்டையை யாரோ எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள்."

வருத்தப் படுபவனைப் போல முகத்தை வைத்துக் கொண்டான்.

"தம்பி, கவலைப்படாதே! உன் சட்டை கிடைத்து விட்டது!"

அதைக் கேட்டு மகிழ்ச்சியடைய வேண்டியவன் அதிர்ச்சியடைந்தான்.

"சட்டை கிடைத்து விட்டதா? எங்கே? எப்படி?"

"அதெல்லாம் எனக்குத் தெரியாது. உங்கள் தலைமை ஆசிரியர் வைத்திருக்கிறார்."

அதிர்ச்சியும் குழப்பமும் அவன் உள்ளத்தைப் பந்தாடிக் கொண்டிருந்தன.

'ஆசைத் தம்பியின் சட்டையும் சிக்கியிருக்குமே!' என்று நினைத்தான்.

"தம்பி, இன்னொரு சட்டையையும் அவர் வைத்திருக்கிறார். ஆசைத் தம்பியின் சிவப்புச் சட்டை!" என்றார் சீனிவாசன்.

'பள்ளிக்கூடம் போகாமல் இருந்தால் சந்தேகம் ஏற்படும்' என்று எண்ணி அவர்கள் அப்படிச் செய்தார்கள். விளைவுகள் வேறு மாதிரி ஆகிவிட்டன.

மீன் பிடிக்கப் போய்த் தூண்டிலைப் பறிகொடுத்த நிலையில் அவர்கள் இப்போது நின்றார்கள்.

அவனுடைய முகம் உள்ளத்து உணர்வுகளைக் காட்டியது. அதைப் பார்த்த தையற்காரரே குழம்பினார்.

அவரிடம் அவன் விடைபெற்றுக் கொண்டான்.

'உடனே ஆசைத்தம்பியைப்பார்க்க வேண்டும்' என்று துடித்தது உள்ளம்.

அவன் பாளையத்திற்குப் போயிருக்கிற செய்தி தெரியாமல் விரைவாக நடந்து கொண்டிருந்தான் வேலப்பன்!

(தொடரும்)




ஜி.யு.போப்

ஜி. யு. போப் இங்கிலாந்தில் பிறந்தவர். சமயத் தொண்டு புரியத் தமிழ் நாட்டுக்கு வந்தார். மகா வித்துவான் இராமானுஜக் கவிராயரிடம் தமிழ் மொழியை நன்றாகக் கற்றார்.

தமிழ் இலக்கியச் செல்வங்களான திருக்குறள், நாலடியார், திருவாசகம் ஆகியவற்றை ஆங்கிலத்திலே மொழி பெயர்த்து, அவற்றின் சிறப்பை உலகம் அறியச் செய்தார். இவற்றுடன் புறநானூறு, புறப்பொருள், வெண்பாமாலை ஆகிய நூல்களிலுள்ள சில பாடல்களையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். 'தமிழ்ச் செய்யுள் கலம்பகம்' என்ற பெயரில் சிறந்த தமிழ்ச் செய்யுள்கள் சிலவற்றைத் திரட்டி வெளியிட்டார். இவரது தமிழ்ப் புலமையைப் பாராட்டி, இவரை 'போப்பையர்' என்றே தமிழறிஞர்கள் அழைத்தனர்.

இவர் தமிழில் மட்டுமல்ல; தெலுங்கிலும் நல்ல புலமை உடையவர். இங்கிலாந்திலுள்ள ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தின் தமிழ், தெலுங்கு மொழிப் பேராசிரியராக இருந்து, தமிழ், தெலுங்கு மொழிகளிலுள்ள சிறந்த நூல்களை ஆங்கிலத்தில் எடுத்துக் கூறினார்.

'சித்தாந்த தீபிகை' என்ற பத்திரிகைக்கு இவர் 1900 — ஆம் ஆண்டில் ஒரு கடிதத்தில், ''நான் இறந்த பிறகு, என் கல்லறையின் மேல் 'போப்பையர் — ஒரு தமிழ் மாணவர்' என்று எழுதப்பட வேண்டும்'' என்ற ஆசையைத் தெரிவித்திருந்தார்.



தாத்தா வைத்த மரம்

—பி.ஆர்.பார்த்தசாரதி

வீட்டின் வாசலில் தாத்தா குழி தோண்டிக் கொண்டிருந்தார். அருகில் வேப்பங் கன்று ஒன்று வேர் மூடப்பட்டுச் சுவரில் சாய்த்து வைக்கப்பட்டிருந்தது.

''என்ன தாத்தா இது? வீடு எவ்வளவு அழகாக் கட்டியிருக்கோம்? அழகாய் வர்ணம் அடிச்சிருக்கோம். வீட்டைப்பார்த்துக்கொண்டே இருக்கலாம் போல் இருக்கு. நீங்க வேப்பங்கன்றை வைத்து வீட்டின் அழகைப் பார்க்க முடியாமே கெடுக்கிறீங்களே?'' என்றான் அவரது ஆறு வயதுப் பேரன் மாதவன்.

தாத்தா அவனைத் தீர்க்கமாகப் பார்த்தார்; சிரித்தார்.

''அடே பேராண்டி, இன்று வைக்கிற வேப்பங்கன்று இன்னும் ஏழு, எட்டு வருடங்களில் மரமாக வளரும். வேப்பங்காற்று உடல் ஆரோக்கியத்துக்கு எவ்வளவு நல்லது தெரியுமா? தவிர வீட்டின் வாசலில் மரம் இருப்பதுதான் அழகு'' பேரனின் கன்னத்தைக் கிள்ளியபடியே சொன்னார்.

''போங்க தாத்தா. எனக்கென்னவோ வாசலில் மரம் வைப்பது பிடிக்கவில்லை'' தாத்தாவின் சமாதானம் அவனுக்குத் திருப்தியளிக்கவில்லை.

தாத்தா தினமும் காலையில் பொறு



மையாக வேப்பங்கன்றுக்குத் தண்ணீர் விட்டு வந்தார். ஆடு, மாடுகள் அதைக் கடித்துவிடாதபடி அவ்வப்போது முள் வேலி கட்டிப் பாதுகாத்தார்.

மாதவனுக்கு, தாத்தா மரத்தை வைத்து வீட்டின் அழகான பார்வையைக் கெடுக்கிறார் என்ற எண்ணம் உள்ளதால், அவன் அம்மரத்தின் வளர்ச்சியைக் கண்டு கொள்வதே இல்லை.

ஐந்து, ஆறு வருடங்கள் ஓடின.

மரம் தாத்தாவின் கவனிப்பினால் கிடுகிடுவென வளர்ந்தது.

திடீரென்று வந்த ஜுரத்தில் தாத்தா ஒருநாள் பூவுலகத்தை விட்டு மறைந்தார்.

மாதவன் தாத்தாவுக்காகச் சில நாட்கள் அழுதான்.

காலம் அப்படியே ஓடிக் கொண்டிருந்தது.

தாத்தா போன பிறகு அம்மரத்திற்கு அவன் அம்மாவும் அப்பாவும் சில நாட்கள் தண்ணீர் விட்டு வந்தனர்.

மாதவனுக்கு எப்படியாவது அம்மரத்தை வெட்டிவிட்டு வீட்டின் அழகைப் பிரகாசிக்க வைக்க வேண்டும் என்ற எண்ணம்.

ஒரு நாள் விடியற்காலை.

மாதவனுக்குத் தூக்கம் கொஞ்சம் கொஞ்சமாக விலகி வந்த நேரம்.

வாசலில் 'டமால்' என்ற சத்தமும் கண்ணாடி உடையும் சத்தமும் கேட்டது.

அதைத் தொடர்ந்து அவன் அம்மா கையில் கோலமாவு டப்பாவுடன் ஓடி வந்தாள்.

''ஐயையோ... என் உயிர் போக இருந்தது; நல்ல காலம் பிழைத்தேன்'' என்று சொல்லிக் கொண்டே மாதவனையும் அவன் அப்பாவையும் எழுப்பினாள்.

இருவரும் ஓடிப் போய் வாசலை அடைந்தனர். அங்கே கண்ட காட்சியில் மாதவன் அதிர்ச்சி அடைந்தான்.

ஒரு பெரிய பஸ் ஒன்று வேப்பமரத்தில் மோதி அதன் கண்ணாடிகள் உடைந்து முன்பக்கம் நசுங்கி இருந்தது.

''நான் கோலம் போட்டுக் கொண்டிருக்கும்போது இந்த பஸ் திடீரென்று ரோட்டிலிருந்து திரும்பி என் பக்கமாக ஓடிவந்தது. பஸ் பிரேக் பிடிக்கவில்லை போல் தெரிகிறது. இந்த மரத்தில் மோதி நின்றுவிட்டது. இந்த மரம் மட்டும் இல்லையெனில் நான் இன்று பஸ் மோதி இறந்திருப்பேன்'' என்றாள் அவன் அம்மா படபடப்புடன்.

மாதவன் உடனே உள்ளே ஓடிப் போய், தாத்தாவின் படத்தின் முன்னால் நின்று கைகூப்பியபடி ''தாத்தா... இன்று நீங்கள் என் அம்மாவைக் காப்பாற்றிவிட்டீர்கள்'' என்றான்.

அப்போது அவனுக்கு ஆனந்தக் கண்ணீர் பெருகியது.

சென்னை புனித எப்பாஸ் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் சமீபத்தில் தென் இந்திய விஞ்ஞானக் கண்காட்சி நடந்தது... அதில் ஆந்திரா... கர்நாடகா... கேரளா... தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி மாநிலங்கள் கலந்து கொண்டன.

தண்ணீரின் பல்வேறு சக்தித் திறன்கள் பற்றியும், உலகத்தின் நீர்நிலைகளைப் பற்றியும் காட்சிப் பொருள்கள் கண்காட்சியில் இருந்தன. அவை மிகச் சிறந்த படைப்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, பரிசாக ரூபாய் 1000 இரு மாணவிகளுக்கு அளிக்கப்பட்டது.

இந்த இரு மாணவிகளான அமுதாவும் மகாலட்சுமியும் திருச்சி பாய்லர் ஆலை பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் படித்து வருபவர்கள்.

— ராஜி ராதா.



பெரிய முட்டாள்

— புலேந்திரன்

குளிர்காலம் — அதிகாலை நேரம்.

வைக்கோல் போர் ஒன்று புகைந்து கொண்டிருந்தது. அதன் உச்சியில் அமர்ந்திருந்த இருவர், தங்களுக்குள் 'யார் பெரியவர்?' என்று விவாதித்துக் கொண்டிருந்தனர்.

அப்போது —

''தே..,. தே...'' என்று கழுதையைத் தள்ளிக் கொண்டு அவ்வழியாக ஒருவன் வந்து கொண்டிருந்தான்.

அந்தக் கழுதை மிகவும் இளைத்துப் போய் இருந்தது. அதன் முதுகில் இரண்டு உப்பு மூட்டைகள் கிடந்தன. அந்த மூட்டைகளைச் சுமக்க முடியாமல் தள்ளாடித் தள்ளாடி நடந்து கொண்டிருந்தது.

வைக்கோல் போரைப் பார்த்த கழுதைக்காரன், ''கீழே 'தீ' பற்றிக் கொண்டிருக்கிறது. மேலே என்ன செய்கிறீர்கள்? சீக்கிரம் கீழே குதியுங்கள்'' என்றான்.

மேலே இருந்த இருவரில் ஒருவன், ''கழுதைக்காரரே! நீங்கள் சொல்லுங்கள். இந்த வைக்கோல் போரின் அடியில் நெருப்பு வைத்த நான்தானே பெரியவன்?'' என்றான்.

''அய்யா! குளிர் காய்வதற்காக அந்தக் கருத்தைச் சொல்லியதே நான் தான். ஆகவே, நான்தானே பெரியவன்?'' என்றான், மற்றவன்.

கழுதைக்காரன் எரிச்சலுடன், ''இரண்டு பேர்களுமே முட்டாள்களாக இருக்கிறீர்களே'' என்றான்.

சட்டென்று கீழே குதித்து வந்த இருவரும், ''ஆங்... இப்போது சொல்லுங்கள். எங்களுக்குள் பெரிய முட்டாள் யார்?'' என்றனர்.

கழுதைக்காரனுக்கு ஓர் எண்ணம் உதித்தது. 'இந்த மூடர்களைப் பயன்படுத்திக்கழுதையையும், உப்புமூட்டைகளையும் ஊருக்குக் கொண்டு போய் விடலாம்' என்று எண்ணிய அவன், ''நான் சொல்கிறபடி செய்தால்... முடிவில் யார் பெரிய முட்டாள் என்று சொல்கிறேன்'' என்றான்.

இருவரும், ''அப்படியே செய்கிறோம்'' என்றனர்.

''கழுதையின் முதுகில் கிடக்கும் மூட்டைகளை ஆளுக்கு ஒன்றாகத் தூக்கிக் கொண்டு முன்னே நடந்து செல்லுங்கள்'' என்றான், கழுதைக்காரன்.

அவர்களும் அப்படியே செய்தனர்.

சுமை இல்லாததால் கழுதையும் வேகமாக நடக்கத் தொடங்கியது.

சற்றுத் தூரம் சென்றதும் — காவிரி நதி குறுக்கிட்டது.

நதியில் வெள்ளம் பெருக்கெடுத்திருந்தது.

அவ்விடத்தில் — நதியைக் கடப்பதற்குப் பாலம் இல்லை. தோணியில் தான் போக வேண்டும்.

தோணிக்காரரை அணுகி, ''அக்கரைக்குப் போக வேண்டும்'' என்



றான், கழுதைக்காரன்.

தோணிக்காரர், "ஏறிக்கொள்ளுங்கள். ஆனால், கழுதையின் கால்களைக் கட்டிவிட வேண்டும்" என்றார்.

கழுதைக்காரன் தன்னுடன் வந்த இருவரையும் பார்த்து, "மூட்டைகளைத் தோணிக்குள் போடுங்கள். கழுதையையும் ஏற்றுங்கள். அதன் கால்களை ஒரு கயிறு கொண்டு கட்டிவிடுங்கள்" என்று கூறிவிட்டு, தோணியில் ஏறி, தோணிக்காரரின் அருகில் உட்கார்ந்து கொண்டான்.

அவன் சொல்லியபடியே செய்துவிட்டு அவ்விருவரும் ஏறிக் கொண்டதும், தோணி புறப்பட்டது.

தோணி—நதியின் மத்தியில்போய்க் கொண்டிருந்தது.

முதல் மூடன் இரண்டாவது மூடனின் காதில், "டேய்! அதைப் பிடித்துக் கழுதையின் காதுக்குள் போடு" என்றான், தணிந்த குரலில்.

இரண்டாவது மூடன், தோணிப் பலகையில் ஊர்ந்து கொண்டிருந்த கட்டெறும்பைப்பிடித்துக்கழுதையின் காதுக்குள் விட்டான்.

அவ்வளவுதான் —

கழுதையின் காதுக்குள் சென்ற கட்டெறும்பு 'நறுக்'கென்று கடித்தது.

கழுதை கத்திக் கொண்டே காலை இழுக்கவும், அவர்கள் கட்டியிருந்த வைக்கோல் கயிறு அறுந்துவிட்டது.

கழுதை கால்களை உதறிக் கொண்டே தோணியில் இங்கும் அங்கும் ஓடத் தொடங்கியதால் —

தோணியில் இருந்த நால்வருக்கும் உதைகள் விழுந்தன. தோணி நிலை தடுமாறி நதியில் கவிழ்ந்து விட்டது.

அதைப்பார்த்துக்கரையில்போய்க் கொண்டிருந்த ஒருவர் கூச்சல் போடவும் — கூட்டம் கூடிவிட்டது.

தோணிக்காரர் நீச்சல் அடித்து, தோணியைப் பிடித்துக் கரை சேர்ந்து விட்டார்.

நீச்சல் தெரிந்த சிலர் நதியில் குதித்து, கழுதைக்காரனையும், அந்த மூடர்களையும் கரைக்குக் கொண்டு வந்து சேர்த்தனர்.

உப்பு மூட்டைகள் இரண்டும் நீரில் கரைந்து விட்டன.

கழுதையை மீட்க முடியவில்லை.



அது ஆற்றோடு போய் விட்டது.

"ஐயய்யோ! என் உப்பு மூட்டை போய்விட்டதே! என் கழுதை போய் விட்டதே...!" என்று தலையில் அடித்துக் கொண்டு அழுதான், கழுதைக்காரன்.

அங்கே கூடியிருந்தவர்களில் முதியவர் ஒருவர், "என்ன நடந்தது?" என்று வினவினார்.

கழுதைக்காரன், அந்த மூடர்களைச் சந்தித்து முதல் தோணியில் ஏறியது வரையிலும் அழுது கொண்டே கூறினான்.

மூடர்கள் தாங்கள் செய்ததைக்கூறிவிட்டு, "பெரியவரே! நீங்களே சொல்லுங்கள். எங்களில் பெரிய முட்டாள் யார்?" என்று கேட்டனர்.

அவர்கள் கூறியதைக் கேட்ட முதியவர், "நீங்கள் இருவரும் முட்டாள்கள்தான். ஆனால், உங்களை நம்பி உப்பு மூட்டைகளை இழந்ததோடு, தன்னுடைய கழுதையையும் இழந்து விட்டு நிற்கிறானே... இந்தக் கழுதைக் காரன்தான் உங்களை விட மிகப் பெரிய முட்டாள்" என்றார்.

அன்றைக்கு விழுந்த அடி!

வி.ர.வசந்தன்



கிருஷ்ணன் மிகவும் கொதிப்படைந்து போயிருந்தான். அவன் முகத்தில் கோபம் அனலாக வீசிக் கொண்டிருந்தது. இன்று அப்பாவிடம் சொல்லி, இரண்டில் ஒன்று பார்த்து விட வேண்டும் என்று மனத்திற்குள் குமுறினான்.

நேற்று, பள்ளிக்கூடத்தில் நடந்தது இன்னும் அவன் மனத்தைவிட்டு அகலவில்லை. வர வர இந்தக் கணித ஆசிரியரின் அராஜகம் வரம்புக்கு மீறிப் போய்விட்டது. இதை இப்படியே விட்டுவிட்டால் ஆபத்து! அவர் குறிப்பிடும்கணக்குகளைச் சரியாகச் செய்யாவிட்டால், பிரம்பால் இரண்டு அடி அடித்துவிட்டுப் போவது? அதை விட்டுவிட்டு, பெஞ்சு மேலே ஏறி நில் என்று சொல்கிறாரே, படிக்க வரும் மாணவர்கள் என்றால், ஏதோ, ஆட்டு மந்தைகள் என்று நினைத்துவிட்டார் போலிருக்கிறது!'

நேற்று மாதத்தேர்வுக்கான விடைத்தாள்களைத் திருத்தி, வகுப்பிற்குக் கொண்டு வந்த கணித ஆசிரியர், ஒவ்வொருவரின் பெயராக அழைத்து அதைக் கொடுத்தார்.

கிருஷ்ணனின் முறை வந்த போது அவர், அவனது விடைத்தாளைக் கையில் வைத்துக்கொண்டு வகுப்பறையைப் பார்த்து, ''நம் கிருஷ்ணன் வகுப்பில் முதல் மதிப்பெண் பெற்றிருக்கிறான்'' என்றார்.

எல்லோரும் கிருஷ்ணனை வியப்புடன் பார்க்க, அவர், ''ஆமாம், அவன் வாங்கி இருக்கும் மதிப்பெண் ஒன்று! என்று விடைத்தாளை அவன் கையில் கொடுத்தார்.

மறுகணம், வகுப்பறை முழுவதும் சிரிப்பில் அதிர்ந்தது. அவன் வெட்கிப் போனான். அவர் அதோடு விட்டிருந்தால் பரவாயில்லை. மீண்டும் வகுப்பறையைப் பார்த்து, ''முதல் இடத்

தைப் பெற்ற கிருஷ்ணன் இப்போது பெஞ்சின் மீது ஏறி நின்று தனது மகிழ்ச்சியை நம் எல்லோருடனும் பகிர்ந்து கொள்வான்'' என்றார்.

மாணவர்களின் சிரிப்பொலி கிருஷ்ணனின் மனத்தில் கோபக் கனலை விசிறிவிட்டது. அவன் அப்போதேஒருமுடிவுக்குவந்துவிட்டான், இதை அப்பாவிடம் போய்ச்சொல்லி இந்த வாத்தியாரின் கொட்டத்தை அடக்க வேண்டும் என்று.

அவனையும், அவனைப்போல் குறைந்த மதிப்பெண்கள் வாங்கிய இன்னும் சில மாணவர்களையும் பாடநேரம் முடிவடைவது வரை பெஞ்சின் மீது நிற்கச் சொல்லி, தண்டனையளித்தார் ஆசிரியர்.

வகுப்புநேரம் முடிவடைந்ததும் வெட்கம் தோய்ந்த முகத்தோடு நின்ற கிருஷ்ணனை அணுகிய ஆசிரியர், ''அடுத்த தேர்வில் நீ நிறைய மதிப்பெண் வாங்கி, இன்றைக்கு உன்னைப் பார்த்துச் சிரித்தவர்களை ஆச்சரியப் படவைக்கணும், என்ன புரியுதா?'' என்றார்.

அவனோ ஒன்றும் பேசாமல் முகத்தைத் திருப்பிக் கொண்டு நின்றான். அவன் மனம் பெஞ்சின் மீது ஏறச் சொல்லி நம்மை அவமானப்படுத்தியது மட்டுமின்றி, கிண்டல் வேறு செய்கிறாரே என்று பொருமியது.

நேற்று வகுப்பில் நடைபெற்றதை நினைத்து நினைத்து வெதும்பிய கிருஷ்ணன் ஒரு முடிவுடன் எழுந்து தன் தகப்பனாரைப் பார்ப்பதற்காக விரைந்தான்.

அவனது வீட்டின் அருகிலேயே, களிமண் பொம்மைகளைச் செய்யும் ஒரு பெரிய தொழிற்கூடத்தை வைத்திருந்தார் அவனது அப்பா. அந்தத் தொழிற்கூடத்தை நோக்கிப் பரபரப்புடன் நடந்தான் அவன்.

சூளையிலிருந்து புதிதாக எடுத்த களிமண் பொம்மைகளை மேற்பார்வையிட்டவாறு, அவற்றுக்கு என்னென்ன வர்ணங்களைக் கொடுத்தால் நன்றாக இருக்கும் என்று தன் உதவியாளர்களுக்கு யோசனை கூறிக் கொண்டிருந்தார் கிருஷ்ணனின் தகப்பனார். தன் மகன் அவசரமாக வருவதைப் பார்த்து அவர் திகைத்தார்.

அவன் அப்படிப் பரபரப்புடன் வந்தாலே, பள்ளிக்கூடத்தில் ஏதோ பிரச்னை என்று அவருக்குப் புரிந்து விடும்!

வேகமாக அவரை அணுகிய கிருஷ்ணன் உர்ரென்று முகத்தைவைத்துக்கொண்டு, ''நீங்கள் இதை வந்து கேட்காதபோனால், நான் இன்றையிலிருந்து பள்ளிக்கூடம் போகமாட்டேன்'' என்றான்.

''என்னப்பா விஷயம்?, என்ன நடந்தது?, எதுக்கு இப்படிப் பதற்றப் படுகிறாய்?'' என்று கேட்டார் அவர்.

''அப்புறம் என்னப்பா.... இந்தக் கணக்கு வாத்தியார் எதுக்கெடுத்தாலும் பெஞ்சுமேலே ஏறச் சொல்லி அவமானப்படுத்துறார்... தப்பு செஞ்சா, பிரம்பாலே நாலு அடி அடிச்சாலும் பரவாயில்லை..... இப்படி அவமானப்படுத்தி மற்ற பசங்களை சிரிக்க வைக்கிறது அவருக்கு வேடிக்கையாப் போச்சு.... இதை நீங்க வந்து கேட்கணும்'' என்று படபடத்தான் அவன்.

அவன் முகத்தை ஏறிட்டுப் பார்த்த தகப்பனார், ''உன்னை அவமானப் படுத்திறதாலே அவருக்கு என்னப்பா கிடைக்கும்?'' என்று கேட்டார் ஒன்றும் புரியாதவரைப் போல்.

கிருஷ்ணன் முகத்தைக் கடுகடுவென்று வைத்துக்கொண்டு, ''அது தான் சொல்றேனே.... இதெல்லாம் அவருக்கு ஒரு வேடிக்கைன்னு.. அவர் வேடிக்கை காட்டறதுக்கு நான் அவமானப்படணுமா?'' என்று பொருமினான்.

''என்னப்பா இது, அவர் உனக்கு வாத்தியார். உனக்குப் பாடம் சொல்லித் தருவதும், நீ சரியாகப் படிக்கல்லேன்னா தண்டிக்கிறதும் அவருடைய கடமை. சும்மா இருந்தால் உன்னைப் பெஞ்சு மேலே ஏத்தி விட்டு வேடிக்கை காட்டுறதுக்கு அவர் என்ன குரங்கு வித்தைக்கார்ரா? நீ என்ன தப்பு செய்தாய்? முதல்லே அதைச் சொல்லு'' என்று சற்று கோபத்துடன் மகனைப் பார்த்தார் அவர்.

கிருஷ்ணன் சற்று நேரம் ஒன்றும்



பேசாமல் தரையைப் பார்த்துக் கொண்டு நின்றான். பிறகு மெதுவாக, ''இந்த மாசப் பரீட்சையிலே பெயிலாயிட்டேன். அதுக்குப் போய் பெஞ்சு மேலே நிக்கவச்சு அவமானப் படுத்தணுமா?'' என்று முணுமுணுத்தான்.

''அப்படிச்சொல்லு.... நீ அவர் சொன்னபடி கேட்டு, பாடத்தை ஒழுங்காய்ப் படிக்கல்லே. அதுக்கு அவர் தண்டனை கொடுத்தார் இல்லையா... இது அவமானப்படுத்தறது இல்லியேப்பா.... நீ நல்லாப் படிக்கணும் என்கிற பொறுப்புணர்ச்சி அவருக்கு இருக்கிறதாலே தானே, உன்னுடைய உயர்விலே அவருக்கு அக்கறை இருக்கிறதாலே தானே, உன்னைக் கண்டிச்சாரு.... அதைப் புரிஞ்சுக்காமே, பள்ளிக்கூடத்துக்கே போகமாட்டேன்னு சொல்றியே.... அதனாலே யாருக்கு நஷ்டம்?'' என்று மகனை அவர் கேட்க,

கிருஷ்ணன் பாதி அழுகையும், பாதி குமுறலுமாக, தன் தந்தையைப் பார்த்து, ''அப்படின்னா நீங்க அவரை எதுவும் கேட்க மாட்டீங்க, அவரு பெஞ்சு மேலே ஏறச்சொல்வாரு... தலைகீழா நிக்கச்சொல்வாரு..... எல்லோரும் என்னைப் பார்த்துச் சிரிச்சுட்டே இருக்கட்டும்'' என்று குமுறினான்.

அவனது அறியாமையை நினைத்து மனம் நொந்தவராய், ''அவர் சொல்றபடி நீ ஒழுங்காப் பாடத்தைப் படிச்சுட்டுப் போனால், அவர் எதுக்கு உன்னைத் தண்டிக்கிறாரு.... யோசிச்சு பாரு, நம்ம மேலே உண்மையான அக்கறை உள்ளவங்க, என்னதான் சொன்னாலும் அது உன்னை அவமானப்படுத்துறது ஆகாதப்பா... இது இப்ப உனக்குப் புரியாது... நீ பெரியவனான பிறகுதான் யார்யாரெல்லாம் நாம் முன்னேற உதவி இருக்காங்க என்கிறது புரியும்.... நான்கூட சின்ன வயசிலே உன்னைப் போலத்தான் நினைச்சேன்...'' என்று நிறுத்திய கிருஷ்ணனின் தகப்பனார், வேட்டியைக் கணுக்காலுக்கு மேல் தூக்கி, தன் காலிலிருந்த வடு ஒன்றை அவனிடம் காட்டினார்.

அவரது காலில் இருக்கும் அந்த வடுவை அவன் அடிக்கடி பார்த்திருக்கிறான். ஆனாலும் ஏன் அதை அவர் இப்போது தனக்குக் காட்டுகிறார் என்று புரியாதவனாய் ஆர்வத்துடன் தந்தையின் முகத்தைப் பார்த்தான் கிருஷ்ணன்.

''கிருஷ்ணா, நான் உன்னைப் போல் சின்னப் பையனாக இருந்தப்போ, பள்ளிக்கூடத்துக்கு அனுப்பிப் படிக்கவைக்கிற வசதி எங்க அப்பாவுக்கு இல்லை.... அவர் அந்தக் காலத்திலே களிமண்ணிலே பொம்மைகள் செய்கிற ஒரு பெரியவரிடத்திலே அந்தத் தொழிலைப் பழகிக்கிறதுக்காக என்னை அனுப்பினாரு.... ஆனால், நான் ஆர்வத்தோடு அந்தக் கலையைக் கத்துக்காமே விளையாட்டிலே காலத்தைக் கடத்திக்கிட்டே இருந்தேன். களிமண்ணைப் பக்குவப் படுத்துகிற முறைகள், அதைப் பொம்மைகளாய் உருவாக்குகிற நுட்பங்களையெல்லாம் அவர் பொறுப்போடே சொல்லித் தருவார்..... ஆனால், நான் அதைப் பொருட்படுத்தாமல் இருந்ததால், என்னாலே சரிவர அந்தக் கலையைக் கத்துக்க முடியல்லே.... ஒருநாள் அவருக்குக் கோபம் தாங்காமல், சூளைக்குப் போட வேண்டிய விறகுக்கட்டையை எடுத்து என் காலிலே பளீர்னு ஒரு அடி வச்சாரு.... சதை பிஞ்சு இரத்தமாய்க் கொட்டிச்சு. அதனாலே ஏற்பட்டது தான் இந்த வடு.'' என்று நிறுத்தினார் அவனது தகப்பனார்.

அவர் சொல்லியதைக் கேட்ட கிருஷ்ணன், ''இவ்வளவு நாள் ஆகியும் அது மறையாதிருக்குதே!'' என்று வியந்தான்.

அவனைப் பார்த்துப் புன்னகைத்த அவர், ''இல்லை கிருஷ்ணா, அது அழியாத வடுவாக என் காலிலே விழுந்துடிச்சு..... ஆனால், அதுக்குப் பிறகு, நான் முதலில் பயத்தோடேயும், பிறகு ஆர்வத்தோடேயும் பொம்மை செய்கிற கலையைக் கத்துக்கிட்டேன். பிறகு நானாகச் செய்து விற்க ஆரம்பிச்சேன். கொஞ்சம் கொஞ்சமாகத் தொழிலிலே உயர்ந்து, இன்னைக்கு இந்தத் தொழில் கூடத்தையும் நிறுவி இருக்கேன். இதுக்கெல்லாம் காரணம் யார்? எனக்குத் தொழில் கற்றுத்தந்த அவரைத்தவிர வேறு யாரைச் சொல்ல முடியும், சொல்லு? இந்தத் தழும்பைப் பார்க்கிற போதெல்லாம் என் மனசு நன்றியோடு அவரை நினைக்கும்... வாழ்க்கையிலே நான் உயர்ந்ததுக்குக் காரணம் அன்றைக்கு அவர் அடிச்ச இந்த அடிதான்'' என்று அந்த வடுவைத் தடவிக் காட்டினார் அப்பா.

கிருஷ்ணன் ஒன்றும் பேசத் தெரியாமல், தன் தந்தையின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான். 'உன்னைப் பார்த்து இன்றைக்குச் சிரித்தவர்கள் வியப்படையும் படி, நீ படித்து நல்ல மதிப்பெண் பெற வேண்டும்' என்று கணித ஆசிரியர் கூறியது அவன் மனத்தில் மீண்டும் ஒலித்தது. தன்னை அவமதிக்க அல்ல; நல்வழி காட்டவே, அவர் தண்டிக்கிறார் என்பது அவனுக்கு, இப்போது புரிந்தது.

''வெற்றுக்களிமண்ணை எடுத்துப் பக்குவப்படுத்திப் பிசைந்து எப்படி விதவிதமான பொம்மைகளாக ஒரு கலைஞன் உருவாக்குகிறானோ, அது போலத்தான் இளம் மனங்களைப் பக்குவப்படுத்திப் பாடம் சொல்லித் தந்து, தண்டிக்க வேண்டிய இடத்திலே தண்டிச்சு, தட்டிக் கொடுக்க வேண்டிய நேரம் தட்டிக்கொடுத்து, மறைந்து கிடக்கற திறமைகளை வெளியே கொண்டுவந்து, உங்களை உருவாக்குகிற ஆசிரியர் மேலே கோபப்படுவது எவ்வளவு அறிவீனம் என்று முதலிலே புரிஞ்சுக்க.... அப்புறம் உனக்குப் பொறுப்பும், பாடத்தைப் படிக்கணும் என்கிற ஆர்வமும் தானாக வரும்.'' என்று சொல்லிய தகப்பனாரை, தயக்கத்துடன் ஏறிட்டுப் பார்த்து முறுவலித்தான் கிருஷ்ணன்.

தெளிவடைந்திருந்த அவனது முகமே, தான் சொல்லியதையெல்லாம் அவன் புரிந்து கொண்டான் என்பதைத் தகப்பனாருக்கு உணர்த்திற்று!

சித்திரப் புதிர்! 35


ஆழி




1 இது எந்த நாட்டின் தேசியக் கொடி?




2 பனித் தரையில் விளையாடப் படும் இந்த விளையாட்டுக்கு என்ன பெயர்?



3 தேசப் படத்தில் இந்த அடையாளம் இருந்தால் அங்கே என்ன தொழில் நடப்பதைக் குறிக்கும்?



4 புனிதமான இந்த மலையின் பெயர் என்ன?



5 இது கரடி என்று சொல்லி விடுவீர்கள். ஆனால் இது எங்கே உள்ள கரடி என்பதைச் சொல்ல முடியுமா?

விடை வேறு பக்கம்



* Photo : Prabhu Shankar



GOKULAM

— an English monthly for children.

Laughter is precious,
Knowledge is a gift,
Awareness of the World
around us, is integral to growth......

Give your children all these things —
Give them Gokulam, a gift they deserve!

96 Pages
Price :
Rs. 3.00

For agency and subscription contact :
GOKULAM, Guindy, Madras - 600 032
Telephone : 434157, 434190

Annual Subscription	:	36.00 (India)
Overseas	:	270.00 (Air mail)
	:	120.00 (Sea mail)



"தெரு விள்க்கிலே படிச்சே நீதிபதியான மேதையைப் போல வரணும்னு எனக்கும் ஆசை."
"ஏன் நீயும் அவரைப் போலப் படியேன்"
"ஒரு நாளாவது எங்க தெருவிலே லைட் எரிஞ்சாத்தானே!"
"எம்மா! விமானம் பற்றி நான் எழுதின கட்டுரையை ராக்கெட் பண்ணி விடுறானம்மா! இந்தக் கோபு அண்ணா"
"யாருக்கும் தெரியாமல் நான் பாம்புப் பண்ணைக்குப் போய் வந்ததை நீ யாரிடமும் சொல்லிடாதே!"
சிறிது சிரிக்கலாமே!
"பாரதியார் சொன்னபடி செய்ததற்காகவா உன்னை டீச்சர் அடிச்சாங்க?"
"'ஓடி விளையாடு பாப்பா'ன்னு சொன்னதை வகுப்பறைக்குள்ளே நான் செய்தது தப்பாயிடுச்சு"
"சாக்லேட் தந்தியே, இன்னிக்கு உன் பிறந்த நாளா?"
"இல்லை. என் டாமி பிறந்த நாள்."
கருத்து, படங்கள்

சீனக் கதை

தமிழில்: **சந்திரநாத்**



பெயரால் வந்த பெருந் தொல்லை

பழைய காலத்தில் சீனாவில் பெற்றோர்கள் தங்கள் முதல் மகனுக்கு வெகு நீளமான பெயர்களை வைப்பது வழக்கமாக இருந்தது.

பெயர் எவ்வளவுக்கெவ்வளவு நீளமாக இருக்கிறதோ, அவ்வளவுக்கு அவனுக்கு அதிர்ஷ்டமும் ஏற்படும் என்று சீனர்கள் நம்பினார்கள்.

இதனால், ஒவ்வொரு பெற்றோரும் போட்டி போட்டுக் கொண்டு அதிக நீளமான பெயர்களைக் கண்டு பிடிப்பதிலும், முதல் மகனுக்கு வைப்பதிலும் ஈடுபட்டார்கள்.

நீளமான பெயர்களைக் கண்டு பிடிப்பதில் ஒரு பெரிய போட்டியே ஏற்பட்டு விட்டது. 'உன் மகனுடைய பெயரைவிட என் மகனுடைய பெயர் தான் நீளம்' என்று சொல்லிப் பெருமையடித்துக் கொண்டார்கள்.

இதனால், ஒவ்வொரு வீட்டிலும் வெகு நீளமான பெயரையுடைய பையன் இருந்தான். அவனுக்கு அவனுடைய முழுப் பெயரையும் ஞாபகம் வைத்துக் கொள்வதும், 'உன் பெயர் என்ன?' என்று மற்றவர்கள் கேட்கும் போது திருப்பிச் சொல்வதும் கஷ்டமாக இருந்தன.

இப்படி நீளமான பெயர்கள் இருப்பதால் எல்லோருமே கஷ்டப்பட்டார்கள். ஆனாலும், அவரவர் மூத்த மகனுக்குத் தேடித் தேடி நீண்ட பெயர்களை வைத்துக் கொண்டே இருந்தார்கள்.

ஷான் என்ற பெயருடைய குடும்பம் ஒன்று இருந்தது. நாம் நேரு குடும்பம், சோழவம்சம் என்றெல்லாம் குறிப்பிடுகிறோமல்லவா?

அதுபோன்றது இந்த ஷான் வம்சமும். இந்தக் குடும்பத்திலே உயரமான, உறுதியான ஒரு பையன் பிறந்தான்.

அவன் பிறப்பதற்கு முன்பே அவனுடைய பெற்றோர்கள் அவனுக்கான பெயரைத் தேர்ந்தெடுத்து வைத்திருந்தார்கள்.

பையன் பிறந்ததும் உறவினர்களும் நண்பர்களுமாக வந்து பையனுக்கு வாழ்த்துச் சொல்லக் கூடினார்கள்.

அந்தக் கூட்டத்திலே அவனுடைய பெயரை வீட்டுப் பெரியவர் மிகப் பெருமிதத்தோடு அறிவித்தார்.

அவனுக்கு அவர்கள் வைத்த பெயர்: ரிச்சி டிக்கி தம்போ நோ சி

ரம்போ ஸிரி பாரி புஷ்கி பாரி பிம் போ!

''ஆஹா! எவ்வளவு அழகான பெயர்!'' என்று அதைக் கேட்டதும் உறவினர்களும் நண்பர்களும் ஆரவாரித்தார்கள்.

கஷ்டப்பட்டு இவ்வளவு நீளமான பெயரை வைத்த பெரியவருக்குப் பெரிய வெற்றி கிடைத்தது போலிருந்தது. அவர் முகம் பூத்தது.

''நாம் இந்தப் பெயரால் அடிக்கடி அவனை அழைக்க வேண்டும். அப்போதுதான் அவனுடைய அதிர்ஷ்டம் பெருகும்'' என்றார்கள் உறவினர்கள். இது பெயரிடும் சமயத்தில் எல்லா வீடுகளிலும் வழக்கமாகச் சொல்லப்படும் வார்த்தை.

அதன் பின் வந்திருந்தவர்கள் கிளம்பிப் போய்விட்டார்கள்.

ரிச்சி டிக்கி தம்போ நோ சீ ரம்போ ஸிரிபாரிபுஷ்கிபாரிபிம்போ பலசாலியாகவும் அழகானவனாகவும் வளர்ந்து வந்தான்.

அவனுடைய ஒரே ஒரு குறை அவனோடு விளையாட அவனுக்கு ஒரு தம்பி இல்லையே என்பதுதான்.

இந்த விஷயம் அவன் மனசை அடிக்கடி வாட்டியது. 'எனக்கு ஒரு தம்பி பிறக்கக்கூடாதா?' என்று அவன் ஏங்கினான்.

சில ஆண்டுகளில், அவனுடைய அம்மா இன்னொரு பையனைப் பெற்றெடுத்தாள்.

எல்லாத் தேசங்களிலும் போல சீனாவிலும் முதல் மகனுக்குத்தான் முக்கியத்துவம். ஆகவே, இரண்டாவதாகப் பிறந்த பையனுக்கு நீளமான பெயரைத் தேடி யாரும் அலையவில்லை. 'ஆ—ப்பூ' என்று சுருக்கமாக அவனுக்குப் பெயர் வைத்து விட்டார்கள்.

ரிச்சி டிக்கி தம்போ நோ சீ ரம்போ ஸிரி பாரி புஷ்கி பாரி பிம் போவுக்கு ரொம்பச் சந்தோஷம். அவன் தம்பியோடு மகிழ்ச்சியுடன் விளையாடினான். அவனுடன் வயலைச் சுற்றி ஓடி விளையாடும் நேரத்திற்காகக் காத்திருந்தான். அவனுடன் சமமாக விளையாடினான்.

தம்பி, முதல் தடவை தன் முழுப் பெயரையும் சொல்லிக் கூப்பிட்ட அன்று அவன் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

இரண்டு பேரும் எப்போதும் ஒன்றாக இருந்தார்கள். எப்போதும் சேர்ந்தே வயல்களிலும், அவர்களுடைய சிறிய தோட்டத்திலும் திரிந்தார்கள்; விளையாடினார்கள்.

'ஆ—ப்பூ'வுக்கு மிகவும் பிடித்தமான விளையாட்டு கண்ணாமூச்சி விளையாட்டு. ''நான் எங்காவது ஒளிந்து கொள்கிறேன் — நீ என்னைத் தேடிக் கண்டுபிடி, பார்க்கலாம்'' என்பான் அவன், அண்ணனிடம்.

தான் ஒளிந்து கொள்ள, ரிச்சி டிக்கி தம்போ நோ சீ ரம்போ ஸிரி பாரி புஷ்கி பாரி பிம் போ தன்னைத் தேடிக் கண்டுபிடிப்பது, அல்லது ரிச்சி டிக்கி தம்போ நோ சீ ரம்போ ஸிரி பாரி புஷ்கி பாரி பிம் போ ஒளிந்து கொள்ள, தான் அவனைத் தேடிக் கண்டுபிடிப்பது இரண்டுமே அவனுக்கு ரொம்ப ரொம்பப் பிடித்திருக்கிறது.

இருவரும் அடிக்கடி இதையே திரும்பத் திரும்ப விளையாடுவார்கள். ஒளிந்து கொள்ள வசதியாக, பக்கத்தில் லீ-சுங் என்பவரின் பண்ணைக் குடிசை இருந்தது.

அந்தப் பண்ணையில், குடிசையின் பின்னால் ஒரு பெரிய கிணறு! அதன் மீது கவிழ்ந்து கொண்டு குரல் கொடுத்தால் உள்ளிருந்து எதிரொலி கேட்கும்.

அதைக் கேட்பதிலேயும் இருவருக்கும் ரொம்ப ஆசை., அடிக்கடி கிணற்றின் மீது கவிழ்ந்து கொண்டு சப்தம் எழுப்பி, எதிரொலியைக் கேட்டு மகிழ்வார்கள்.

ஒருநாள் அப்படிக் கவிழ்ந்து எதிரொலிகேட்டுக்கொண்டிருந்தபோது, ரிச்சி டிக்கி தம்போ நோ சீ ரம்போ ஸிரி பாரி புஷ்கி பாரி பிம் போ நிலை தடுமாறிக் கிணற்றுக்குள் விழுந்து விட்டான்.

கிணறு மிக ஆழமாக இருந்தது. தண்ணீர் அடிமட்டத்தில் கறுப்பாகக் காணப்பட்டது. அதன் உள்ளே விழும் போது அண்ணன் போட்ட குரலைக் கேட்டு, ஆ—ப்பூ பயந்து நடுங்கி விட்டான்.

''ஓ! ரிச்சி டிக்கி தம்போ நோ சீ ரம்போ ஸிரி பாரி புஷ்கி பாரி பிம் போ, என்ன ஆயிற்று உனக்கு? எங்கே இருக்கிறாய், நீ?'' என்று கூவினான் ஆ—ப்பூ.

இருண்ட கிணற்றிலிருந்து ரிச்சி டிக்கி தம்போ நோ சீ. ரம்போ ஸிரி பாரி புஷ்கி பாரி பிம் போவின் குரல் வந்தது.

தம்பி எட்டிப் பார்த்தான்.


''பயப்படாதே தம்பி.—நல்லவேளை வேளையாக, கிணற்றில் நீட்டிக் கொண்டிருக்கும் ஒரு பாறையைப் பிடித்துக் கொண்டு விட்டேன். என் உடம்பு தண்ணீரில் இருக்கிறது. தண்ணீர் 'சில்'லென்று இருக்கிறது. ஆ—ப்பூ,நீ என்ன செய்ய வேண்டும் என்றால், உடனே லீ—சுங்கிடம் ஓடிச் செல். அவரிடம் நீண்ட கயிறோ, ஏணியோ, நிச்சயமாக இருக்கும். அவற்றில் ஒன்று வந்து விட்டால், நான் வெளியே வந்துவிடுவேன் — ஓடு சீக்கிரம்'' என்றான்.

ஆ—ப்பூ, ரிச்சி டிக்கி தம்போ நோ சீ ரம்போ ஸி பாரி புஷ்கி பாரி பிம் போவை ஒரு தடவை கவலையுடன் பார்த்துவிட்டு, லீ—சுங்கின் குடிசையை நோக்கி ஓடினான்.

லீ—சுங்கின் குடிசையை அடைந்ததும் வாசலில் நின்று ஆ—ப்பூ ''ஓ. லீ—சுங் மாமா'' என்று கத்தினான். அவர் வெளியில் வந்தார்.

''மதிப்பிற்குரிய பெரியவரே! என் அண்ணன் ரிச்சி டிக்கி தம்போ நோ சீ ரம்போ ஸிரி பாரி புஷ்கி பாரி பிம் போ உங்கள் கிணற்றுக்குள் விழுந்து விட்டான். அவனால் வெளியே வர முடியவில்லை. உங்களிடம் ஏணியோ, நீண்ட கயிறோ இருக்கிறதா? இருந்தால், உடனே கொடுங்கள். அதைக் கொண்டு நான் ரிச்சி டிக்கி தம்போ நோ சீ ரம்போ ஸிரி பாரி புஷ்கி பாரி பிம் போவை வெளியே கொண்டு வந்து விடுவேன்..இருக்கிறதா, பாருங்கள், சீக்கிரம்.''

கிழ லீ—சுங், ''என்ன! ரிச்சி டிக்கி தம்போ நோ சீ ரம்போ ஸிரி பாரி புஷ்கி பாரி பிம் போ என் கிணற்றில் விழுந்து விட்டானா? கடவுளே — என் நீண்ட கயிற்றை எங்கே வைத்தேன்



என்பது ஞாபகமில்லையே! பாவம், ரிச்சி டிக்கி தம்போ நோ சீ ரம்போ ஸிரி பாரி புஷ்கி பாரி பிம் போ'' என்று கூறி, ஒவ்வோர் இடமாக நினைவுபடுத்திக்கொண்டு கயிற்றைத் தேடினார். கடைசியில்தான் அவர் அதை இரண்டு நாட்களுக்கு முன்பு லு — ட்ஸிக்குக் கொடுத்திருப்பது நினைவுக்கு வந்தது.

லு — ட்ஸி கிராமத்தை நோக்கிச் சென்ற சாலையின் கோடியில் குடியிருந்தார். ''இதோ,பாய் வாங்கி வருகிறேன்'' என்று சொல்லிவிட்டு லு—ட்ஸியின் வீட்டை நோக்கி ஓடினார் கிழவர்.

ஆ—ப்பூ, இனி கிழவரை நம்பிப் பயனில்லை என்று நினைத்து விஷயத்தைப் பெற்றோர்களிடம் தெரிவிக்கலாம் என்று தன் வீட்டை நோக்கி ஓடினான்.

அவன் வெகு வேகமாக ஓடினான். ஒவ்வொரு கணமும் அண்ணனுக்கு ஆபத்தானது என்று அவனுக்குத் தெரிந்தது.

ஆனால், நடுவழியில் ஒரு கை. அவனைப் பிடித்துத் தடுத்து நிறுத்தியது. ''என்ன ஆயிற்று ஆ—ப்பூ, ஏன் இப்படித் தலைதெறிக்க ஓடுகிறாய்?'' என்று கேட்டார் நிறுத்தியவர்.

''நான் போக வேண்டும். ரிச்சி டிக்கி தம்போ நோ சீ ரம்போ ஸிரி பாரி புஷ்கி பாரி பிம் போ கிணற்றில் விழுந்து விட்டான்'' என்று மூச்சிரைக்கச் சொல்லிவிட்டு, கையை விடுவித்துக் கொண்டு ஓடினான் ஆ—ப்பூ.

அடுத்தடுத்து அண்டை வீட்டுக்காரர்கள், உறவினர்கள் என்று பல பேர் எதிர்ப்பட்டு, நிறுத்தி, ''என்ன விஷயம்?'' என்று கேட்டார்கள்.

ஒவ்வொருவரிடமும் சிறிது நேரம் நின்று, ''ரிச்சி டிக்கி தம்போ நோ சீ ரம்போ ஸிரி பாரி புஷ்கி பாரி பிம் போ, லீ—சுங்கின் பண்ணைக் கிணற்றில் விழுந்து விட்டான்'' என்று சொல்லி முடிப்பதற்குள் வெகு நேரமாகிவிட்டது.

செய்தி கேட்ட ஒவ்வொருவரும் ஏணியையோ கயிற்றையோ கொடுத்து உதவவில்லை. ''ஐயோ, பாவம்'' என்றார்கள்.

இப்படி வழிநெடுக அறிவித்துக் கொண்டே வீட்டை நோக்கி ஓடிய ஆ—ப்பூ வாசலில் நின்ற தன் அன்னையைத்தான் முதலில் பார்த்தான்.

''என்னடா ஆ—ப்பூ, இப்படி ஓடி வருகிறாய்!'' என்று கேட்டாள் அவள்.

''அம்மா! அம்மா! கிழவன் லீ—சுங்கின் பண்ணைக் கிணற்றில், நம் ரிச்சி டிக்கி தம்போ நோ சீ ரம்போ ஸிரி பாரி புஷ்கி பாரி பிம் போ விழுந்து விட்டான்'' என்றான் ஆ—ப்பூ.

அவள், ''என்னங்க. இதைக் கேட்டீங்களா?'' என்று கூவிக் கொண்டே உள்ளே ஓடி, பெரிய மகனின் முழுப் பெயரையும் சொல்லிக் கிணற்றில் விழுந்து விட்டதைச் சொல்லி அழுதாள்.


கிணற்றில் நீட்டிக் கொண்டிருக்கும் ஒரு பாறையைப் பிடித்துக் கொண்டிருப்பதையும், நீளக் கயிறு அல்லது ஏணி இருந்தால் காப்பாற்றலாம் என்றும் ஆ—ப்பூ சொன்னான்.

''ஐயோ, நம்ப ரிச்சி டிக்கி தம்போ நோ சீ ரம்போ ஸிரி பாரி புஷ்கி பாரி பிம் போவா? கடவுளே!'' என்று பதறிக் கொண்டு எழுந்தார், ஆ—ப்பூவின் தந்தை. ''சரி, நீ முன்னால் ஓடு. ரிச்சி டிக்கி தம்போ நோ சீ ரம்போ ஸிரி பாரி புஷ்கி பாரி பிம் போவிடம் போய் அவனைப் பார்த்துக் கொள். நான் ஒரு நீண்ட கயிற்றைத் தேடி எடுத்துக் கொண்டு சீக்கிரம் வந்து

ஒருமைப்பாடு

ஊடும் பாவும் ஒட்டி நெய்த
கோடி வேட்டி ஒன்றிலே
உள்ளநூல் பல்லாயிரங்கள்
ஒன்று போல இருக்குது.
இழையில் ஒன்று பிழைபட்டாலும்
எடுத்து உடுத்த முடியுமா?
இதையறிந்து எந்த நாளும்
இதயங் கூடி வாழுவோம்.

— கொத்தமங்கலம் சுப்பு.





விடுகிறேன்'' என்றார்.

ஆ—ப்பூ மீண்டும் லீ—சுங்கின் பண்ணையை நோக்கி ஓடினான். அவன் சீக்கிரமாகவே பண்ணைக்கு வந்து சேர்ந்து விட்டான். நல்ல காலம், அதே சமயம், லீ — சுங்கும் தன் நீண்ட கயிற்றை வாங்கிக் கொண்டு அங்கே வந்துவிட்டார்.

ஆ—ப்பூ கிணற்றுள் கவிழ்ந்து, ''ஏ, ரிச்சி டிக்கி தம்போ நோ சீ ரம்போ ஸிரி பாரி புஷ்கி பாரி பிம் போ,எப்படி இருக்கிறாய்?'' என்று உரக்கக் கேட்டான்.

கிணற்றுள் இருந்து, ரிச்சி டிக்கி தம்போ நோ சீ ரம்போ ஸிரி பாரி புஷ்கி பாரி பிம் போவின் குரல் வந்தது. ''ஆ—ப்பூ, இப்போதாவது வந்தாயே? எவ்வளவு நேரம் பண்ணி விட்டாய்?''

ஆ—ப்பூவின் கண்களில் நீர் துளிர்த்தது. 'நான் என்ன செய்யட்டும்? உன் நீளமான பெயரை ஒவ்வோர் இடத்திலும் நின்று நின்று சொல்லவே எனக்கு நேரமாகி விட்டது' என்று சொல்ல நினைத்தான் அவன். ஆனாலும் சொல்லவில்லை.

லீ—சுங், தாம் கொண்டு வந்திருந்த நீளமான கயிற்றைக் கிணற்றுக்குள் விட்டான். ஆ—ப்பூவும் அவருக்கு உதவினான்.

ரிச்சி டிக்கி தம்போ நோ சீ ரம்போ ஸிரி பாரி புஷ்கி பாரி பிம் போ எப்படியோ தட்டுத் தடுமாறி அதைப் பிடித்துக் கொண்டான். அதன் உதவியால் ரிச்சி டிக்கி தம்போ நோ சீ ரம்போ ஸிரி பாரி புஷ்கி பாரி பிம் போ மேலே கொண்டுவரப் பட்டான்.

இதற்குள் அவனுடைய குடும்பத்தினர், உறவினர்கள் எல்லோரும் பெரிய கூட்டமாக வந்து அங்கே கூடி விட்டார்கள்.

களைத்துப்போய்நடுவில்உட்கார்ந்திருந்த அவனைப் பார்த்து எல்லோரும் அனுதாப வார்த்தைகளைச் சொன்னார்கள்.

''அண்ணா! ரிச்சி டிக்கி தம்போ நோ சீ ரம்போ ஸிரி பாரி புஷ்கி பாரி பிம் போ! களைத்துப் போயிருக்கிறாயே! இப்போது உனக்கு என்ன வேண்டும்? சொல்'' என்றுகேட்டான் ஆ—ப்பூ.


''ஆமாம் ஆ—ப்பூ'' என்று நடுங்கிக் கொண்டே சொன்னான் ரிச்சி டிக்கி தம்போ நோ சீ ரம்போ ஸிரி பாரி புஷ்கி பாரி பிம் போ, ''நீ உன்னுடைய அழகான, சிறிய பெயரை எனக்குக் கொடுத்துவிட்டு, என் அதிர்ஷ்டகர மான, அருமையான, நீண்ட பெயரை நீ எடுத்துக் கொள்! அந்தப் பெயரிலே இன்னும் ஒரு வார்த்தை அதிகமாக இருந்திருந்தாலும் நீ வந்து சேர இன்னும் நேரமாகியிருக்கும். நான் மூழ்கியே போயிருப்பேன்'' என்றான்.


அப்போதுதான் அவனுடைய பெற் றோர்கள் தங்கள் தவறை உணர்ந்தார் கள். நீளமான பெயரை ஒவ்வொரு தடவை உச்சரிக்கும் போதும் ஆகிற நேரம், உயிரைக் காக்கத் தடையாக இருப்பதை நேருக்கு நேர் பார்த்தார் கள். ''சின்னப் பெயராக வைத்திருந் தால், இதைவிடச் சீக்கிரமாக எல்லோ ரும் வந்து மகனைக் காப்பாற்றியிருப் பார்கள்'' — என்றார் அவனுடைய தந்தை.


சுற்றி நின்ற உறவினர்களும், நண் பர்களும் இதை ஏற்றுக் கொண்டு, ''இனிமேல் பெருமைக்காக, எங்களின் எந்தப் பிள்ளைக்கும் நீள மான பெயர்களை வைப்பதில்லை'' என்று முடிவு செய்தார்கள்.


ரிச்சி டிக்கி தம்போ நோ சீ ரம்போ ஸிரி பாரி புஷ்கி பாரி பிம் போவுக்கு ஏற்பட்ட இந்த விபத்துப் பற்றிய செய்தி சீனா முழுவதும் பரவிற்று. எல்லோருமே இனி சிறிய பெயர்க ளையே வைப்பது என்று தீர்மானித் தார்கள்.


அதனால்தான் இன்று சீனாவில் எல்லாப் பெயர்களும் மிகச் சிறியன வாக இருக்கின்றன!





பரீக்ஷித்து மகாராஜா கங்கைக் கரையில் தியானம் செய்தார்...
அத்ரி, வசிஷ்டர், விசுவாமித்ரர், நாரதர் முதலிய பல முனிவர்கள் வந்தனர்...
பரீக்ஷித்து தியானம் கலைந்து அவர்களை வணங்கினார்...
என்ன இப்படி ஏகாந்தமாக...?
கதை: ஆனந்தி படம்: வினு
விருத்திராசுரனை வென்ற வஜ்ராயுதம்!
முனிவர்களே! ஓர் அந்தணச் சிறுவனின் சாபம் காரணமாக ஏழு நாட்களில் நான் இறந்து போகப் போகிறேன்...
பகவானை அடைய நான் என்ன செய்ய வேண்டும்? வழி காட்டுங்கள்...
தியானம் போதாது, யாகம் செய்!


யோகம் அதைவிடச் சிறந்தது!
தபஸ்தான் மோட்சமளிக்கும்!
தானம் பண்ணலாமே!
அப்போது சுகபிரும்ம ரிஷி வந்தார்....
சுவாமி, வரவேணும்...
மன்னவா, என்ன இதெல்லாம்...?
...இவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொன்றைச் சொல்கிறார்கள். எனக்கு ஒரேகுழப்பமாக இருக்கிறது...
கவலைப் படாதே! பகவானை அடைய மிக எளிய மார்க்கம், அவருடைய கதைகளைக் கேட்பதுதான்... பகவானுடைய கதைகளை என் தந்தை வியாஸர் எனக்குச் சொன்னார்...
...அவற்றை உனக்குச் சொல்லவே வந்தேன். கேட்டு நல்ல கதி அடைவாய்!



பரீக்ஷித்து மட்டுமின்றி மற்ற ரிஷிகளும் சுக பிரும்மர் கூறிய கதைகளைக் கேட்க ஆர்வத்துடன் அமர்ந்தனர்....
மகாவிஷ்ணுவின் கதைகளையும் அவருடைய பக்தர்களின் கதைகளையும் சொல்கிறேன்....
சுக பிரும்ம ரிஷி பல கதைகளைக் கூறினார்... அவற்றில் ஒன்று...
ஒரு சமயம் தேவேந்திரன், சபையில் சசி தேவியுடன் வீற்றிருந்தான்...
தேவர்களும் ருத்திரர்களும் ரிஷிகளும் இந்திரனை வாழ்த்தினார்கள்...
ஜெய விஜயீபவ!
அப்ஸரஸுகள் ஆடினார்கள்....
அப்போது தேவகுரு பிருஹஸ்பதி வந்தார்...



இந்திரன் அவரைக் கவனியாமல் நாட்டி யத்தில் கண்ணா யிருந்தான்....
ஆகா! அற்புதம்!
பிருஹஸ்பதி கோப மடைந்து திரும்பினார்... தேவர்கள் கலங்கினர்...
என்ன விபரீதம் நேரப் போகிறதோ...
நாட்டியம் முடிந்ததும் தேவர்கள்...
பிருஹஸ்பதி கோபத்துடன் திரும்பிப் போய் விட்டார்...!
குருவை அவமதித்து விட்டீரே...!
சசிதேவி இந்திரனிடம்...
குருவின் ஆசி இல்லா விட்டால் அசுரர்கள் நம்மை அழித்து விடுவார்கள்.... குல நாசம் உண்டாகும்!
இந்திரன் கலக்கமடைந்தான்...
தவறு செய்து விட்டேன்; இதோ போய் மன்னிப்புக் கேட்டு, சமாதானப் படுத்தி அழைத்து வருகிறேன்!


ஆனால் இந்திரனைச் சந்திக்கவோ மன்னிக்கவோ மனமில்லாத பிருஹஸ்பதி...
அவன் கண்களில் படாமல் மறைந்து விடுகிறேன்...
குருவைத் தேடிக் களைத்த இந்திரன்...
என்னை அவர் தண்டிக்கத் தீர்மானித்து விட்டார் போலிருக்கிறது. ...என்ன செய்வேன்?
இதற்குள் அசுரர் உலகில்...
செய்தி கேட்டாயா? தேவர் குருவைக் காண வில்லையாம்!
அப்படியா! வா, சுக்கிராச்சாரியாரிடம் சொல்வோம்!
அசுரர் குரு சுக்கிராச்சாரியார் செய்தி அறிந்து...
குருவை மகிழ் விக்காதவர்கள் எதிலும் தோல்வி அடைவார்கள். தேவர்களை வெல்வது இனி உங்களுக்கு எளிது!
தேவர்கள் மீது அசுரர்கள் படையெடுத்தார்கள்...





தேவர்கள் தோல்வி கண்டனர்...
என்ன சோதனை! குருவின் அதிருப்தியே இந்தத் தோல்விக்குக்காரணம்...
தேவர்கள் பிரம்மா விடம் யோசனை கேட்டனர்...
அவமானத்தைத் தாங்க முடியவில்லை.. நீங்கள்தான் உதவ வேண்டும்...
இந்திரா! இது உன் அகம்பாவத்தால் வந்த அவமானம். விசுவரூபனிடம் போ! அவர் தேவர்களின் குருவானால் உங்கள் கஷ்டம் தீரும்.
விசுவரூபனுக்கு மூன்று தலைகள்...
தவம் செய்து கொண்டு நான் நிம்மதியாக இருக்கிறேன். என்னை வற்புறுத்தாதீர்கள்.
உங்களை வணங்குகிறேன், தயவு செய்யுங்கள்; தேவர்களைக் காப்பாற்றி அருளுங்கள்! யாசிக்கிறேன்!


அடைக்கலம் என்று வந்தவர்களுக்கு உதவியை மறுக்க முடியாமல் விசுவரூபன்....
சரி வருகிறேன்...
இந்திரனுக்கு நாராயண கவசம் உபதேசித்தார் விசுவரூபன்...
இந்த மந்திரத்தை பக்தியோடு ஜபித்து வந்தால் உன் ஒவ்வொரு அங்கமும் பாதுகாக்கப்படும்.
மந்திர கவசம் பெற்ற இந்திரன் தீரத்துடன் போரிட்டான்...
தேவருலகை அசுரரிடமிருந்து மீட்டான்...
ஹா... என்னை யாரால் வெல்ல முடியும்!
கர்வமடையாதே!
அசுரர்கள் உனக்குச் சமபலம் உடையவர்கள்... ஆனால் கர்வம் போன்ற தீய குணங்கள் தான் அவர்களை வீழ்த்துகிறது. நீயும் அசுர குணங்களைப் பெற்றால் துன்பமடைவாய்.




விசுவரூபனுடைய அறிவுரையை இந்திரன் ஏற்கவில்லை... ...சசிதேவி...
ஒரு மகானைக் குருவாக அடைந்தோம்; நம் பாக்கியம்!
அதென்னவோ, அவருக்கு அசுரர்களிடம் உள்ளன்பு இருக்கிறது...
...இல்லாவிட்டால் அசுரர்களை எனக்குச் சமபலம் உள்ளவர்கள் என்பாரா? நம் பகைவர்களை இவர் எப்படி போற்றலாம்...?
ஒரு பெரிய யாகம் நடத்தினார் விசுவரூபன். யாகத்தின் பயனில் ஒரு பங்கு அசுரர்களுக்கும் போய்ச் சேருமாறு மந்திரங்கள் சொன்னார்.
அசுரர் உலகம் இதை உணர்ந்து மகிழ்ந்தது..
விசுவரூபன் நடுநிலையானவர். நல்லவர். நமக்கும் யாகத்தின் பலன் கிடைக்கச் செய்தார்... வாழ்க!
இந்திரனிடம் அக்னி வந்து...
விசுவரூபன் கட்டளைப்படி யாகத்தின் பயனில் ஒரு பங்கை அசுரர்களுக்குக் கொடுத்து விட்டு வந்திருக்கிறேன். எனக்கு அவமானமாய் இருக்கிறது...



இந்திரன் கோபமடைந்தான். விசுவரூபனிடம் போய்...
எங்களுக்காக யாகம் நடத்தி விட்டுப் பலனைப் பகைவருக்குக் கிடைக்கச் செய்கிறீரே!
இந்திரா! யாகம் நடத்துவது நல்வாழ்வுக்காக. யாகத்தின் பயனை அசுரரும் அடைந்தால்தானே அவர்களும் நல்லறிவு பெற்று அமைதி விரும்புவார்கள்?
ஆனால் ஆத்திரமடைந்திருந்த இந்திரன் புத்தி இழந்து, வாளை உருவி...
எங்களுக்குத் துரோகம் செய்து, அசுரரிடம் பிரியம் காட்டும் உன்னை...
இந்திரனால் வெட்டப்பட்ட விசுவரூபனுடைய சிரங்கள் மூன்றும் பறவைகளாக மாறி, பறந்து சென்றன...
குருவைக் கொன்ற பாவம் இந்திரனைச் சூழ்ந்தது...
பிரும்மஹத்தி தோஷம் பிடித்து என் தேகம் ஒளி இழந்து விட்டது...





ஓராண்டு காலம் கடும் தவம் இயற்றி சாபத்திலிருந்து விடுபட்டான் இந்திரன்.
இதற்கிடையில் விசுவரூபனுடைய தந்தை துவஷ்டா யாகம் செய்து...
இந்திர சத்ருவே! ஹோமத்திலிருந்து எழுவாய்! என் மகனைக் கொன்ற இந்திரனைப் பழி தீர்ப்பாய்!
நெருப்பிலிருந்து எழுந்தான் விருத்திராசுரன்....
...ஒரு எரிமலை அலைவது போல் இங்குமங்கும் சென்றான்...
எங்கே, பகைவன்! எங்கே, இந்திரன்!
தேவர்களுடன் போரிட்டான் விருத்திராசுரன்....
ஐயய்யோ! நாம் வீசும் ஆயுதங்களை விழுங்குகிறானே!



தேவர்கள் பயந்து...
ஓடுங்கள்! நம்மையும் விழுங்கி விடுவான்!
தேவர்கள் விஷ்ணுவைச் சரணடைந்தனர்...
நாராயணா, காப்பாற்று!
திருமால் இரக்கம் கொண்டு...
ததீசி முனிவரிடம் செல்லுங்கள். அவர்தான் உங்களைக் காப்பாற்ற முடியும்...
விஷ்ணு, அசுவினி தேவர்களை அழைத்து...
விருத்திராசுரனை வெல்லும் உபாயம் உங்களுக்குத் தெரியும். இந்திரனுடன் செல்லுங்கள்.
மூவரும் தவமிருக்கும் ததீசி முனிவரை நெருங்கினர்...
இந்திரா! இவர் உடல் தவத்தினாலும் ஒழுக்கத்தினாலும் ஞானத்தினாலும் வஜ்ரம் போல் கெட்டிப் பட்டிருக்கிறது...


எனவே இவர் முதுகெலும்பைக் கொண்டு வஜ்ராயுதம் தயாரித்தால் விருத்திராசுரனை வெல்லலாம்...
மூவரும் ததீசி முனிவரைப் பூஜித்தனர்...
ததீசி தவம் கலைந்து......
தேவர்களே! என்ன வேண்டும்?
சொல்லவே நா கூசுகிறது... ..என்னை மன்னித்து...
பரவாயில்லை, சொல்லு...
விருத்திராசுரனைக் கொல்லக் கூடிய சக்தி தங்கள் முதுகெலும்புக்குத்தான் உள்ளது.. ..தந்தருள வேண்டும்! மூவுலகங்களையும் காக்க, நீங்கள் இந்தத் தியாகத்தைச் செய்ய வேண்டும்!


சரி, உங்கள் வேண்டுகோளை ஏற்கிறேன்.
ததீசி முனிவர் மகத்தான தியாகம் புரிந்தார். உயிர் துறந்தார்.
பகவானிடம் சித்தத்தை வைத்து என் சரீரத்திலிருந்து விடுதலை பெறுகிறேன்.
தேவ சிற்பி விசுவகர்மா, ததீசியின் முதுகெலும்பை உலைக்களத்தில் இட்டார்...
ஓர் அற்புத ஆயுதம் உருவாகப் போகிறது......
பட்டறையில் அதற்குப் புது வடிவம் தந்தார்..
இதற்கு வஜ்ராயுதம் என்று பெயர்.
புதிய ஆயுதத்தை இந்திரனிடம் தந்தார்...
உமக்கு இனி வெற்றி!


நர்மதை நதிக்கரையில் தேவாசுரப் போர் நடந்தது.
வஜ்ராயுதத்துக்குப் பயந்து அசுரர்கள் ஓட........
விடாதே! துரத்து!
அப்போது விருத்திராசுரன்...
தேவர்களே! ஓடுகிறவர்களை ஏன் துரத்துகிறீர்கள்? என்னுடன் போரிடுங்கள்!
இந்திரன் வீசிய கதாயுதத்தை விருத்திராசுரன் பற்றி......
ஐராவதத்தின் மீது வீச...
ஐயோ! ஐராவதம் வலி தாங்காமல் பின் வாங்குகிறதே!


இந்திரன் வஜ்ராயுதத்தைப் பிரயோகித்தான்...
ஆ! ஒரு கையை இழந்தேன்!
ஆனால் பாறை போன்ற விருத்திரனின் கையைத் தாக்கியதில்...
இந்திரனே! ஆயுதமில்லாதவனை நீ கொன்றது போல் உன்னை நான் தாக்க மாட்டேன்! வஜ்ராயுதத்தை எடுத்துக் கொள்!
அடடா! வஜ்ராயுதம் கை நழுவி விழுந்து விட்டதே!
விருத்திராசுரன் வீசிய ஆயுதங்களையெல்லாம் இந்திரன்...
வஜ்ராயுதத்தால் எல்லாவற்றையும் தடுத்தேன்!
விருத்திராசுரனின் இன்னொரு கரமும் வஜ்ராயுதத்தால் தாக்கப்பட்டு...
இந்திரா! இரண்டு கைகளையும் நான் இழந்தாலும் உன்னை விட மாட்டேன்!


விருத்திராசுரன் தன் வாயைப் பிளந்து இந்திரனை ஐராவதத்துடன் சேர்த்து விழுங்கி விட்டான்...
இதென்ன விபரீதம்!
தேவர்கள் கலங்கினர். ஆனால் இந்திரனுக்கு விசுவரூபன், நாராயண கவசம் உபதேசித்திருந் ததால்...
மந்திரம் ஜபிக்கிறேன். விருத்திராசுரனால் நம்மை ஜீரணிக்க முடியாது!
வஜ்ராயுதத்தால் விருத்தி ராசுரனின் வயிற்றைக் கிழித்துக் கொண்டு வெளியே வந்தான் இந்திரன்.
நெருப்பில் பிறந்த விருத்திரா சுரன், ஜோதிமயமாக வானில் உயர்ந்து மறைந்தான்...
...தேவர்கள் மகிழ்ந்து, நாராயணனை வணங்கினார்கள்.

அருந்துங்கள் கஞ்சி

சந்திரா குமாரசாமி

அலுவலகத்துக்குக் கிளம்பிக் கொண்டிருந்த அப்பாவிடம் தயங்கித் தயங்கி வந்து நின்றான் ராமு. "என்ன வேணும் ராமு? நோட்டு ஏதாவது வாங்கப் பணம் வேண்டுமா?" என்றார் அப்பா.

"வந்துப்பா..... வந்து, மாதாந்திர தேர்வுக்கான பிராக்ரஸ் ரிப்போர்ட்ல கையெழுத்து வேணும்," என்று இழுத்தான்.

"அதுக்கென்ன தயக்கம்? நீதான் என் சிங்கக்குட்டியாச்சே..... எண்பதுக்குக் குறைஞ்சு என்னிக்குமே மார்க் எடுக்க மாட்டியே!" என்றபடி கைநீட்டிக் கார்டை வாங்கினார்.

கார்டை வாங்கிப் பார்த்தவர் அப்படியே அதிர்ந்து போனார். ராமுவின் பிராக்ரஸ் ரிப்போர்ட்டில் எண்பதுக்குக் குறைந்த மதிப்பெண்களை என்றுமே அவர் பார்த்ததில்லை. கல்வி முன்னேற்ற அறிவிப்பான பிராக்ரஸ் ரிப்போர்ட் ராமுவைப்பற்றி நல்ல அறிவிப்பையே என்றும் தந்திருக்கிறது. சென்ற காலாண்டுத் தேர்வின் போது கடுமையான காய்ச்சலோடும் கூடப் பிடிவாதமாகப் பள்ளிக்குச் சென்று தேர்வு எழுதி வந்தான். படிக்கவும் முடியாமல், அமர்ந்து எழுதவும் முடியாமல் பலவீனமாக எழுதுபவன் பாஸ் மார்க்குகள் எடுக்கப் போவதில்லை என்றே அவர் நினைத்திருந்தார். ஆனாலும், ராமு பெயில் மார்க் எடுக்காமல் 40, 45 என்ற அளவில் சுமாரான மார்க்குகள் எடுத்திருந்தான். உடல் நிலை சரியில்லாத அந்த நேரத்தில் எடுத்த மதிப்பெண்களைக் காட்டிலும் மிகக் குறைவாக "சும்மா பாஸ்" என்று சொல்லும் அளவில் இப்போது 35 ம் 40 ம்தான் எடுத்திருந்தான்.

"இது என்னடா மார்க் ராமு? நீ எப்படியாவது முயற்சி செய்து முதல் மாணவனாக முன்னுக்கு வருவாய்னு நாங்க நினைச்சா, நீ இப்படிக் கீழேயே போறியே! வெறும் 35 மார்க் எடுத்து பாஸ் செய்திருக்கியே, உனக்கு வெட்கமாயில்லே," என்றார் அப்பா கோபமாக.

"ஏன், தமிழிலும், ஆங்கிலத்திலும் 40 எடுத்திருக்கேனே. எப்படி இருந்தாலும் பாஸ் மார்க் தானே எடுத்திருக்கேன்? இதற்கு ஏன் வெட்கப்பட வேண்டும்? அதிகமாகக் கஷ்டப்பட்டு 80, 90 எடுத்தாலும் பாஸ் தான், ஓரளவு படித்து 35, 40 எடுத்தாலும் பாஸ்தான், பிறகு ஏன் அதிகமாகக் கஷ்டப்படணும்னுதான் சுமாராப் படிச்சேன்," என்றான் ராமு.


"என்ன திமிர் இருந்தால், நீ இப்படியெல்லாம் பேசுவேடா, ராஸ்கல்," என்று கோபத்துடன் அடிப்பதற்காகக் கையை நீட்டிக்கொண்டு அவன் அருகில் வந்தார் அப்பா. "ஆஃபீஸ் போகும் நேரம் நீங்க ஏன் பதற்றப் படறீங்க....? பேசாமல் கையெழுத்துப் போட்டு அனுப்புங்க, பிறகு பார்த்துக்கலாம்," என்றாள் அம்மா.

"அவன் என்ன பேச்சு பேசறான் பார்த்தியா!" என்றார் அப்பா. "அதையெல்லாம் நானும் கேட்டேன். நீங்க இப்போ கையெழுத்துப் போட்டு அனுப்புங்க சொல்றேன்," என்ற அம்மா அவர் கையெழுத்திட்டுக் கொடுத்ததும், ஏதோ ரகசியமாகச் சொல்ல ஆரம்பித்தாள். கார்டை வாங்கிக் கொண்ட ராமு "தப்பித்

தோம், பிழைத்தோம்'' என்று ஒரே ஓட்டமாக ஓடிவிட்டான்.

ராமு எட்டாம் வகுப்புப் படிக்கும் மாணவன். இன்னும் முயற்சி எடுத்துப் படித்தால் முதல் மாணவனாகக் கூடிய தகுதியுடன் நன்கு படித்து வந்தான். அவன் முதலாவது ரேங்க் வந்தால் சைக்கிள் வாங்கித் தருவதாக அவன் அப்பாகூடச் சொல்லியிருந்தார். ஒழுங்காகப் படித்துக் கொண்டிருக்கும் பொழுதே அவனுக்குச் சோம்பேறித் தனம் வந்துவிட்டது. அதற்குக் காரணம், சென்ற காலாண்டுத் தேர்வு தான். அந்தத் தேர்வின் பொழுது அதிகமான காய்ச்சல் காரணமாக அவனால் படிக்கவே முடியவில்லை. அப்பா, அம்மா தடுத்தும் கேளாமல் தேர்வைத் தவற விடக்கூடாது என்ற ஆர்வம் ரணமாக, அவன்தான் விரும்பித் தேர்வு எழுதச் சென்றான். படிக்காவிடினும், ஆசிரியர் பாடம் நடத்திய சமயத்தில் கவனித்ததையும், முன்னர் படித்ததையும் நினைவில் வைத்துப் பரீட்சை எழுதினான். அதனால், அவன் வழக்கம் போல் 80, 90 என எடுக்காத போனாலும் 40, 45 எனக் குறைவான மதிப்பெண்கள் எடுத்திருந்தான். பள்ளியில் படிக்காமல் திரியும் சோம்பேறிப் பையன்கள் எல்லாம் ராமுவிடம் வந்து, ''டேய் ராமு, நீ அதிர்ஷ்டசாலிடா, படிக்காமலே ஆசிரியர் நடத்தியதை வச்சே இவ்வளவு மார்க் வாங்கிட்டியே, அப்புறம் எதுக்குடா படிச்சு உடம்பைக் கெடுத்துக்கிறாய்? நீ எத்தனை மார்க் வாங்கி, பாஸ் பண்ணினாலும் எட்டாவது முடிஞ்சு ஒன்பதாவதுதான் போகணும். நீ அதிக மார்க் வாங்கினதுக்காக உன்னை ஒண்ணும் பத்தாவதுக்கு அனுப்பப் போறதில்லே... இப்ப மாதிரியே படிக்காமலே ஞாபகத்திலே இருக்கிறதையே எழுதி மார்க் வாங்கினால், ரெட்டிப்பு லாபம். பாஸுக்குப் பாஸும் ஆகலாம்; கஷ்டப்பட்டுப்படிச்சு உடம்பைக் கெடுத்துக்காமே, ஜாலியா விளையாடவும் செய்யலாம்,'' என்று சொன்னார்கள்.

ராமுவிற்கு அதுவும் சரியாகத்தான் பட்டது. அன்று முதல், அவர்களுடன் சேர்ந்து கொண்டு படிக்காமல் ஆட்



டம் போட ஆரம்பித்தான். அதன் பயனே குறைந்த மதிப்பெண்கள்.

ராமுவின் நல்லநண்பனான ரவிக்கு இவையெல்லாம் பிடிக்கவில்லை. ராமுவிடம் இவையெல்லாம் தவறு, படிக்காமல் ஆடக்கூடாது என்று எவ்வளவோ சொல்லிப் பார்த்துவிட்டான். அவன் கேட்கவில்லை. தன் நல்லநண்பன் கெட்டுப் போவதை விரும்பாத ரவி, ராமுவின் வீட்டிற்கு வந்து அவன் அம்மாவிடம் எல்லா விவரங்களையும் சொல்லிவிட்டான். அந்த விவரங்களைத்தான் அம்மா, அப்பாவிடம் சொன்னாள். பிறகு இருவருமாக யோசித்து ராமுவைத் திருத்த ஒரு திட்டம் தீட்டினர்.

மறுநாள் காலை, பள்ளிக்குக் கிளம்புவதற்கு முன்பு சாப்பாட்டு மேஜை மீது தட்டை எடுத்து வைத்தாள் அவன் அம்மா, "ராமு, அப்பா இன்னிக்கு வேலைக்குப் போகலையாம், அதனால், அவர் மெதுவாகச் சாப்பிடுவார். நீ சாப்பிட்டுக் கிளம்பு," என்று உணவுப் பாத்திரத்தைக் கொண்டு வந்து, மேஜை மேல் வைத்தாள் அம்மா. "இன்னிக்கு என்ன சாப்பாடு?" என்றபடி ஆவலாகப் பாத்திரத்தைத் திறந்த ராமு, "என்னம்மா இது!" என்று முகத்தைச் சுளித்தான். இன்னிக்கு ஒண்ணும் சமைக்கல்லேப்பா. கஞ்சிதான் வச்சிருக்கேன், குடி" என்றாள் அம்மா.

"எனக்கு எதுவும் வேண்டாம் போ! நீயே குடி" என்று கோபமாகக் கூறியபடி கிளம்பியவனிடம், வேகமாக வந்து டிஃபன் பாக்ஸை நீட்டினாள் அம்மா. "சாப்பிடா விட்டால் பரவாயில்லை. பள்ளிக்கும் சாப்பாடு கொண்டு போக மறந்து விடாதே" என்று அம்மா நீட்டிய டிஃபன் பாக்ஸை வாங்கிக் கொண்டு பள்ளிக்குப் பறந்தான்.

மாலையில் பள்ளி விட்டு வந்ததும், புத்தகப் பையை ஒரு மூலையிலும், ஷூவை ஒரு மூலையிலுமாக உதறினான். சத்தம் கேட்டு எட்டிப் பார்த்த ராமுவின் அப்பா, "என்ன ராமு, ஏன் இப்படி எல்லாத்தையும் 'தாட் பூட்'னு வீசுகிறாய்? என்ன கோபம்?" என்றார்.

"இந்த அம்மாவைப் பாருங்கப்பா காலையில் இங்கு சாப்பிடவும் கஞ்சி கொடுத்தாங்க, எனக்குப் பிடிக்கா துன்னு சொன்ன பிறகும், ஸ்கூலுக்குக் கஞ்சியைத்தான் வச்சிருக்காங்க. எனக்குக் கொஞ்சம் கூடப் பிடிக்கவேயில்லை. பசி தாங்க முடியாமல் தான் குடிச்சேன்" — கோபமாகக் கத்தியபடி வேண்டாத கஞ்சியைக் குடித்த விதத்தைச் சொன்னது அப்பாவிற்குச் சிரிப்பை வரவழைத்தது.

"என்னப்பா, நான் எவ்வளவு வேதனையோட சொல்றேன், நீங்க சிரிக்கறீங்க... கேலி பண்றீங்களா?"

"அதில்லை ராமு, எனக்கும் வெறும் கஞ்சியைத்தான் உங்கம்மா ஊத்தினாள். இனிமேல் சோறு சமைக்கப்போறதில்லையாம், வெறும் கஞ்சிதானாம் எப்பவுமே! அதையும் சொல்லிட்டாள்."

"அடக் கடவுளே!" தலையில் கை வைத்துக் கொண்டு உட்கார்ந்து விட்டான் ராமு.

"வந்துட்டியா ராமு! என்ன, இது தலையில் கை வச்சுக்கிட்டு உட்கார்ந்துட்டே... தலை வலிக்குதா...? பசித் தலைவலியா இருக்கும். வாடா கண்ணா, டிஃபனுக்குக் கஞ்சி வச்சிருக்கேன், உப்புப் போட்டு சாப்பிடுறியா, சக்கரை போட்டுச் சாப்பிடுறியா?" என்றாள் அம்மா மிகவும் பரிவாக.

"ஏம்மா இப்படி கஞ்சி, கஞ்சின்னு என் உயிரை வாங்கறே? நல்லாத் தானே சமைப்பே... உனக்குச் சமையலே மறந்து போயிடுத்தாம்மா?" எரிந்து விழுந்தான் ராமு.

"மறக்கவில்லை ராமு, பசி தீர்க்க உணவு வேணும், அது எதுவா இருந்தால் என்ன? சாப்பாடோ, இட்லி, தோசையோ எதுவாயிருந்தாலும் அதை ஆக்குவது எத்தனை சிரமம்...? எத்தனை செலவு? அதுவே கஞ்சியாயிருந்தால், செலவும் குறைவு, சிரமமும் குறைவு. அதைக் குடிச்சா மட்டும் நம்ம பசி தீராதா என்ன...? நம்ம வீட்டிலே இனிமேல் கஞ்சியே செய்யலாம்னு தீர்மானிச்சுட்டேன். உனக்குப் பிடிக்கலேன்னா கூழாக் கிளறி வச்சுடுறேன். எடுத்துச் சாப்பிடத் தோதா இருக்கும்."



"அம்மா சொன்னதைக் கேட்டீங்களாப்பா? திடீர்னு இவங்களுக்கு என்ன ஆச்சு? கஞ்சி, கூழுன்னு என்னென்னமோ சொல்றாங்களே!" — அழமாட்டாக் குறையாகக் கேட்டான் ராமு.

"எனக்கும்கூட உன் அம்மா சொல்றது சரின்னுதான் தோணுது ராமு. காய்கறி, அரிசி, பருப்பு, நெய், பால், தயிர் இப்படி சாப்பாட்டுக்காக எவ்வளவு செலவழிக்க வேண்டியிருக்கு! பேசாமே வெறும் கஞ்சியோ, கூழோ சாப்பிட்டால் செலவு ரொம்பக் குறைஞ்சிடுமே...! செலவு குறைஞ்சா அதிகம் சம்பாதிக்கவும் தேவையில்லை. அதிகம் சம்பளம் வர, ஆபீஸர் வேலைக்காகத் தினம் இங்கேயிருந்து ஆறு, ஏழு மைல் பஸ்ஸில் போகணும். அதை விட்டுட்டுப் பக்கத்திலே எங்கேயாவது குறைச்சல் சம்பளத்திலேகணக்குஎழுதுறவேலையா இருந்தாக்கூடப் பாத்துக்கலாம்."

"என்ன, நீங்க ரெண்டு பேரும் ஒரேயடியாய் அதிர்ச்சியைக் கொடுக்கிறீங்க....! அம்மா, வெறும் பசிக்குத்தான் உணவுன்னு யார் சொன்னது உங்களுக்கு? கண் தெளிவாய்ப் பார்க்க, செவி துல்லியமாய்க் கேட்க, வாய் பேச, வியாதிகள் வராமல் உடம்பில் தகுந்த எதிர்ப்புச் சக்தி பெற, மொத்தத்தில் நாம் ஆரோக்கியமாய் உயிர் வாழ, உண்ணும் உணவுகளில் பல வகையிலும் விட்டமின்கள் என்று சொல்லப்படும் உயிர்ச் சத்துக்கள் இருக்கம்மா. வெறும் சாதத்தை மட்டும் சாப்பிடாம, காய்கறி, கீரை, பயிறு வகைகள் எல்லாம் நிறையச் சாப்பிடணும்னு எங்க வாத்தியார் கூடச் சொல்லுவாரம்மா. நாம் தினம் கஞ்சியைக் குடிச்சால், பசியாலே சாகாமல் உயிர் வாழ முடியுமே தவிர, தேவையான சக்திகள் கிடைக்காமல் ரொம்ப பலவீனமா, நோயாளி மாதிரியாயிடுவோம். ஏம்ப்பா, இதை

யெல்லாம் நீங்களாவது அம்மா வுக்குச் சொல்லக் கூடாதா...? நீங் களும் வேலையை விடப் போறேன்னு சொல்றீங்களே...!'' — கோபமும், குழப்பமுமாய்க் கேட்டான் ராமு.

''அதனாலே என்ன ராமு, சம்ப ளம் குறைச்சலாயிருந்தாலும் ஓய்வு நிறையக் கிடைக்கிற வேலை கிடைக் காமலா போயிடும்? '' — அலட்சிய மாகப் பேசினார் அப்பா.

''ஏப்பா, நாம் இப்போ கொடுக்கிற வீட்டு வாடகையே 300 ரூபாய். நீங்க குறைச்சலாய்ச் சம்பாதிக்க நினைச் சால், வாடகைக்கே நிறையப் பணம் போயிடுமே!''

''அதுக்காகத்தான் சின்னதா குடிசை வீடு பார்த்திருக்கேன்.''

''குடிசை வீடா!'' — அதிர்ச்சியுடன் கேட்டான் ராமு.

''ஆமாம் ராமு, குடிசை வீடுதான். இப்படி ஃபேன், டீ.வி. கட்டில், பீரோன்னு வைக்க. குடிசையிலே இடம் பத்தாது. இதெல்லாம் வேணும்னு கட்டாயமும் இல்லையே! உடனே வித்திடுவோம். இவை இல் லாமலே இருப்போம்.''

''ஃபேன், டீ.வி. இல்லாமல் வீடா! என்னப்பா சொல்றீங்க? ''

''வீடு எதுக்கு ராமு, மழையிலே நனையாமே, வெயிலிலே காயாமே, நாமும் நம்ம உடைமைகளும் பாது காப்பா இருக்கத்தானே...? அதுக்கு இவ்வளவு பெரிய வீடு எதுக்கு? அதிக வாடகை எதுக்கு? சிறிய வீடா இருந்தால், அதிக வாடகைப் பிரச் சினையே இல்லை. நமக்கும் மழை, வெய்யிலிலேயிருந்து பாதுகாப்புக் கிடைக்கும்....''

''என்னப்பா, நீங்களா இப்படிப் பேசுறது! என்னாலே நம்பவே முடியல் லியேப்பா. வாழ்க்கையில் உழைக்க ணும், உழைப்பில் முன்னேறணும்னு சொல்லுவீங்களே, அப்படிப்பட்ட நீங்களா இப்படியெல்லாம் மாத்திப் பேசறீங்க...!''

''அதிலே என்ன தப்பு? ராமு, நல்லா படிக்கிற நீ 35 மார்க் எடுத்தா லும் பாஸ்; 95 எடுத்தாலும் பாஸ்! எதுக்கு சிரமப்பட்டுப் படிச்சு அதிக மார்க் எடுக்கணும்னு நீ நினைக்கிற போது எதுக்குச் சிரமப்பட்டு அதிகம் சம்பாதிக்கணும்னு நான் நினைக்கிறது மட்டும் தப்பாகுமா? '

''பல விதத்திலும் அறிவு பற்றாக் குறையைத் தீர்த்து, நம்மை அறிவாற் றல் உள்ள மனிதனாக ஆக்கும் கல்வி யைப் புறக்கணித்து, நீ அறிவில் பலவீனமாக இருக்கணும்னு நினைச்சா, ஆகாரத்திலும் சத்துக் களைப் புறக்கணித்து பலவீனமாய் இருப்போம்னு நினைச்சேன், எப் படிக் கஞ்சி மட்டும் ஒரு மனிதனுக் குப் போதுமான சக்தியைக் கொடுக்க முடியாதோ... அதே மாதிரிதான் பாஸாகிறதுக்காக மட்டும் அளவாய்ப் படிக்கிற படிப்பு அறிவாற்றலைத் தராது'' என்றாள் அம்மா.

''அம்மா, அப்பா என்னுடைய சோம்பேறித்தனத்தையும், என் தவறையும் எனக்குப் புரிகிற மாதிரி சொல்லத்தான் நீங்கள் ரெண்டு பேரும் இப்படி நடந்துக்கிட்டீங்கன்னு எனக்குப் புரியுது. என் தவறை நான் நன்றாக உணர்ந்துட்டேன். பாஸா கிறதுக்காக மட்டும் இல்லை, உண் மையிலேயே கல்வியறிவு பெறுவதற் காகவும், வாழ்வில் உயர்வடைவதற் காகவும் நன்றாகப் படிப்பேன். என்னை மன்னிச்சுடுங்க'' என்றான் ராமு தலைகுனிந்தபடி.

''கண்ணே ராமு, உனக்குப் புரிஞ் சுதா, உன்னுடைய தவறை உணர்ந் துட்ட நீ, முன்னைவிட நன்றாகப் படிப்பாய்னு நம்புறோம். வாப்பா, உனக்குப் பிடிச்ச பூரி, உருளைக் கிழங்கு வச்சிருக்கேன், சாப்பிட வா'' என்று அம்மா அன்போடு அழைத்தாள்.

''ராமு, என்னையும் பூரி சாப்பிடக் கூட்டிட்டுப் போ, நானும் கஞ்சியை மட்டும் குடிச்சிட்டுப் பசியோடதான் இருக்கேன்'' என்று அப்பா விளை யாட்டாக ஓடி வந்து அவன் கையைப் பிடித்துக் கொண்டார்.

''சோம்பல் நீங்கி சுறுசுறுப்பும், கல்வியில் ஆர்வமும் பெற, இன்றே அருந்துங்கள் அம்மா அன்புடன் தரும் கஞ்சியை'' என்று ராமு முழங்க மூவரும் சிரிப்பில் ஆழ்ந்தனர்.



விண்வெளிக்குச் செல்லவே
விரும்பிக் கனவு காண்கிறான்!

சிறுமி இருவர் சேர்கிறார்;
குறும்புப் பார்வை பார்க்கிறார்!



புகைப்படங்கள் : கோவை சிதாராம்


விந்தை உலகம்!



ஒட்டகத்தின் பாலைக் கறந்து பாத்திரத்தில் வைத்த சில நிமிடங்களில் தயிராகத் திரிந்து கட்டியாகி விடும். அதன் மடியிலேயே வாயால் உறிஞ்சினாலும், காற்றுப்படாமல் வைத்தாலும் மட்டும் கட்டியாகாது.

ஆஸ்திரேலியாவில் வசிக்கும் கோலாக் கரடிகள் எப்போதும் தழைகளை உண்ணும். தவிர, அதன் குட்டி-களை முதுகில் சுமந்து செல்லும். ●






● நீர்யானை தன் மூக்கை இறுக மூடிக் கொண்டு நீரினடியில் 10 நிமிடங்கள் வரை மூச்சு விடாத சக்தி கொண்டது. அவசியம் ஏற்பட்டாலொழிய ஓடாது. உடலில் ஏற்படுகிற எண்ணைக் கசிவால் வெப்பம் பாதுகாக்கப்படுவதுடன் பளபளப்பாகவும் இருக்கிறது.



● பாலைவனங்களில் வசிக்கும் மான்கள் நீரே குடிப்பதில்லை. தான் உண்ணும் தாவரங்களிலிருந்து ஈரத்தைப் பெறும். நீர் தேவையானால், பல மைல்களுக்கு அப்பாலும் கூட மழை பெய்யும் போது ஈரக்காற்றை மோப்பம் பிடித்து அங்கு சென்று நீர் குடிக்கும்.

● முதலைக்கு கண்ணிமைகளில்லை. ஆகவே, எப்போதும் விழித்திருப்பது போல் தோன்றும். அதன் வயிற்றில் சுரக்கும் நீர் இரும்பையும் ஜீரணிக்கும் சக்தி கொண்டது.



விமலன்



உங்களுக்காக
ஒரு திரைப்படம்!

ஆரிராரோ



* சிறுவன் கிளின்டாக நடித்த மீனுராஜ், ஓவியராக நடித்த சத்யேந்திரன், ஓவியரின் சட்டையைச் சரி செய்யும் இயக்குநர் வித்யா சங்கர்.

கிளின்ட் ஒரு சின்னஞ் சிறுவன். அவனுடைய காலும் சிறிது ஊனம். அவனுக்குத் தன் தாயிடத்திலும், தாய்க்கு அவனிடத்திலும் அளவில்லாத பாசம். ஆனால், திடீரென அவன் தாய் இறந்து விடவே, அவன் தன்னை எப்படியெல்லாம் தன் அன்னை வளர்த்தாள் என்பதை நினைத்து நினைத்துக் கவலைப்படுகிறான்.

அம்மாதான் இல்லை; அப்பாவாவது அவனிடம் அன்புடன் நடந்து கொள்கிறாரா என்றால், அவரும் அவனைச் சரியாகக் கவனிப்பதில்லை.

கிளின்ட் பள்ளிக்குச் செல்லும் வழியில் ஓர் ஓவியர் படம் வரைவதைப் பார்க்கிறான். அவனுக்கும் படம் வரைய வேண்டுமென்ற ஆசை ஏற்படுகிறது. ஓவியரின் உதவியால், அம்மாவின் படம் தீட்டப்படுகிறது. அதைப் பார்த்துப் பார்த்து ஆறுதல் அடைகிறான், கிளின்ட்.

இப்போது அவன் தந்தை மறுமணம் செய்து கொள்கிறார். சித்தி அவனது உணர்வுகளையும், ஆசைகளையும் புரிந்து கொள்ளாமல், அலட்சியப் படுத்துவதும், அவன் வரைந்து சுவரில் ஒட்டியிருந்த ஓவியங்களைக் கிழித்துப் போடுவதும் அவனது பிஞ்சு நெஞ்சைப் புண்படுத்துகின்றன.

அப்பாவும் சித்தியும் தன்னைக் கவனிக்காத நிலையில், தன் மீது அன்பு செலுத்தும் ஓவியரின் வீட்டிற்கு, யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் ஓடிச் சென்று கதவைத் தட்டுகிறான்.


இச் சமயம் சித்திக்குக் குழந்தை பிறக்கிறது. பிறந்த குழந்தை உயிருடன் இருக்க, அதன் தாய் அப்போதே இறந்து விடுகிறாள். தொட்டிலில் கிடக்கும் சித்திக்குப் பிறந்த குழந்தையின் அருகிலே சென்று, அதை ஆசையுடன் கண்டு, தொட்டிலை ஆட்டுகின்றான், கிளின்ட்.

அன்புக்காக ஏங்கும் ஒரு சிறுவனின் செயல்களை, உணர்ச்சிகளை அளவான வசனங்களுடன் அழகாக எடுத்துக் காட்டுகின்றது 'ஆரிராரோ...' என்ற இந்தக் குழந்தைகள் திரைப்படம்.

எல்லாருமே நன்றாக நடித்திருந்தாலும் கிளின்டாக நடிக்கும் மீனுராஜின் நடிப்பு உள்ளத்தைத் தொடுகிறது. கண்ணுக்கு விருந்தளிக்கும் காட்சிகள்; இதயத்தைக் குளிர்விக்கும் இசையமைப்பு ஆகியவற்றுடன், குழந்தைகளுக்குத் தமிழில் திரைப் படங்கள் இல்லையே என்ற மிகப் பெரிய குறையைச் சிறந்த முறையில் தீர்த்து வைத்திருக்கிறார் இயக்குநர் திரு. வித்யா சங்கர். இப்படம் வெற்றி மேல் வெற்றி பெற்று, மேன்மேலும் பல குழந்தைப் படங்களை அவர் தருவார் என நம்பலாம்.

முட்டாள் அரக்கன்

படக்கதை:- ஓவியர்-எஸ்.கே.ராமானுஜம் (ராஜு)




அரக்கன் சிறிது பயத்துடன்
அடேய்..பயலே! என்னையா மிரட்டுகிறாய்?
எனக்கும் நிறைய மந்திரங்கள் தெரியும் அதில்சிலவற்றைச்செய்து காட்டுகிறேன்..பார்க்கிறாயா?
அதற்கு முன்..நீ..முதலில் கீழேயுள்ள ஒரு கல்லை எடுத்து ஆகாயத்தில் வீசி எறி..பார்க்கலாம்?
அதன்படி ஒரு கல்லை அரக்கன் வீசினான்..
“உன் கல் கீழே வந்து விழுந்து விட்டதே! இப்பொழுது நான் ஒரு மந்திரக்கல்லை எறிகிறேன் பார்” என்று கூறி அவன், தன் கையில் மறைத்திருந்த குருவியைப் பறக்க விட்டான்
முட்டாள் அரக்கன் குருவியை,கல் என்று நம்பி விட்டு மிகவும் ஆச்சரியப்பட்டான்.
ஒரு வெள்ளைக் கல்லை எடுத்து, சாறு பிழி பார்க்கலாம்?
அரக்கன் ஒரு கல்லைக் கையில் எடுத்துப் பொடிப்பொடியாக ஆக்கிவிட்டான்.
இதோ பார்.. என்று கூறித் தன்னிடமுள்ள வெண்ணெயைப் பிழிந்தான்
அதைக்கண்டு நடு.. நடுங்கிய அரக்கன் – “உன் மந்திரத்தில் என்னை ஒன்றும் செய்யாதே... இன்று முதல் நான்.. உனக்கு அடிமை” என்று கூறினான்.....
அரக்கனை அரசனிடம் அழைத்துச்சென்றான்.
அரசர் கொடுத்த பொற்காசுகளைத் தாயிடம் கொடுத்து மகிழ்ந்தான்....

சங்கரின்

சாதனை!

—குன்றக்குடி பெரியபெருமாள்

சென்னையில் முதலமைச்சர் விருதைப் பெறப் போகிற சங்கரனின் கழுத்தில் ரோஜா மாலையை அணிவித்தார் தலைமை ஆசிரியர். அவனைச் சுற்றி நின்ற அன்னப்ப ராஜா நினைவு மேல் நிலைப் பள்ளி மாணவர்கள், 'சங்கரன் வாழ்க!' 'சங்கரன் வாழ்க!' என கோஷம் போட்டு வாழ்த்தினர்.

மாலையைக்கழுத்திலிருந்துமெல்ல எடுத்துக் கண்களில் ஒத்திக் கொண்டான் சங்கரன். கொஞ்ச தூரத்தில் நின்று கொண்டிருந்த அன்னதானச் சாமியாரின் அருகே வேகமாகச் சென்ற சங்கரன், அவரது பாதங்களில் ரோஜா மாலையை வைத்து, தரையில் விழுந்து வணங்கினான். "பகவான் உனக்கு எல்லாப் பாக்கியங்களையும் கொடுப்பார்" என உருக்கத்தோடு சாமியார் ஆசி கூறி, ரோஜா மாலையை எடுத்து மீண்டும் அவனுக்கு அணிவித்தார். அன்னதானச் சாமியாரின் அருகில்நின்றசங்கரனின் அப்பா, அம்மா இருவரும் கண்களில் பெருகிய கண்ணீரைத் துடைத்துக் கொண்டனர்.

கொல்லம்-சென்னை எக்ஸ்பிரஸ், நிலையத்திற்குள் 'திகுதிகு'வென நுழைந்தது. சங்கரனின் அப்பா கந்தையாவும், அம்மா வள்ளியம்மாளும் ரயிலில் ஏறி அமர்ந்து கொண்டனர். நண்பர்களோடு குதூகலமாகப் பேசிக் கொண்டிருந்த சங்கரனை வண்டியில் ஏறிக் கொள்ளுமாறு தலைமை ஆசிரியர் அவசரப்படுத்தினார்.

வண்டியில் ஏறிக் கை கூப்பி நின்றான் சங்கரன். வண்டி நகரத் தொ ங்கியதும், ஆசிரியர்களும் மாணவர்களும் கையசைத்து வழி அனுப்பினர். அசைந்து கொண்டிருந்த நூற்றுக் கணக்கான கைகளுக்கிடையே ஆடாமல் அசையாமல் உயர்ந்து நின்ற அன்னதானச் சாமியாரின் கையைப் பார்த்த சங்கரனுக்கு உடலெங்கும் புல்லரித்தது!

சில ஆண்டுகளுக்கு முன்புவரை ரயில்வேஸ்டேஷனுக்குஅப்பாலுள்ள பகுதி காட்டும்பிரதேசமாக இருந்தது. அங்கே குடியேறினார் அன்னதானச் சாமியார்.

திண்டும் முண்டுமாய் முறுக்கேறி, விழுதுகளைப்பூமிக்குள் இறக்கிநின்ற ஓர் ஆலமரத்தைத் தமது இருப்பிடமாகக் கொண்டிருந்தார் சாமியார். ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் அவர் நகருக்குள் வருவார். அவர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, சில குடும்பங்களில் 'பிடி அரிசி'யாகச் சேகரித்துக் கொடுக்கும் அரிசியை, மூட்டையாகக் கட்டித் தோளில் சுமந்து செல்வார். சாமியாரிடம் கொடுப்பதாலேயே, வியாபாரம் விமரிசையாக நடக்கிறதென்ற நம்பிக்கையில், அவரைத் தேடிப் பிடித்து, பலசரக்குச் சாமான்களும், காய் கறிகளும் கொடுத்தனுப்புகிற வியாபாரிகளும் நகரில் இருந்தனர்.

சேகரிக்கும் பொருள்களை வைத்துக் கொள்ளச் சிறிய குடிசை ஒன்றை ஆல மரத்திற்கு அருகில், தாமே முயன்று கட்டியிருந்தார் சாமியார். ஒவ்வொரு நாளும் மதிய நேரத்தில் தயார் செய்யும் அன்னத்தை, ஆல மரத்தின் அருகே ஊன்றப் பட்டிருந்த உயரமான வேலாயுதத்திற்கு முன்னால் கொட்டிப் படைத்து விட்டு,

வருகின்ற ஏழைகளுக்குச் சாமியார் எடுத்து வழங்குவார். சஞ்சீவி மலை அடிவார ஆல மரத்திற்கு, உச்சி வேளையில் நகரத்திலிருந்து ரயில்வே லைனைக் கடந்து சென்று திரும்பும் ஏழை எளியவர்கள், அந்தக் காலத்திலிருந்தே சாமியாரை, 'அன்ன தானச் சாமியார்' என அழைத்து வந்தனர்.

அன்றொரு வெள்ளிக் கிழமை. இரவு நேரம்.

அப்போது அன்னதானச் சாமியார் ஆள் இல்லாத ரயில்வே கேட்டைக் கடந்து சென்ற போது, வடக்கே தூரத்தில் ரயில் வருவதைப் பார்த்தார். ரயிலின் ஹெட்லைட் வெள்ளிப் பிழம்பாகத் தண்டவாளங்களை மாற்றியவாறு முன்னேறி வருவதையும், ரயில்வே கேட்டிலிருந்து நூறு அடிக்கு அப்பால், யாரோ தண்டவாளங்களின் குறுக்கே படுத்திருப்பதையும் பார்த்துச் சாமியார் அதிர்ச்சி அடைந்தார். பரபரப்புடன், ஆவேசமாகத் தண்டவாளங்களை ஒட்டி வேகமாக ஓடி, படுத்திருந்த உருவத்தைக் கட்டிப் பிடித்துத் தூக்கி, ரயில் பாதையை விட்டுக் கடத்தினார். அடுத்த நிமிடம் ரயில் அந்த இடத்தைக் கடந்து சென்றது.

சாமியாருக்கு ஓடி வந்த களைப்பு அடங்கவில்லை. நெஞ்சு எம்பி, எம்பி வடிய, விம்மி விம்மி அழும் பையனின் முதுகில் தடவிக் கொடுத்துக் கொண்டே, "ஏண்டா பையா! இந்த வயசிலே உனக்கு வாழ்க்கை வெறுத்துப் போச்சா? அப்படி என்னப்பா உனக்குக் கஷ்டம் வந்திடுச்சு....? நல்ல வேளை! ஒரு நிமிஷம் தாமசம் ஆகி



யிருந்தாக் கூட... "அழாதேப்பா... அழாதே!" எனச் சாமியார் தேற்றினார்.

விம்மி அழுது கொண்டே அவன் கேட்டான்: சாமீ! என்னை எதுக்காகக் காப்பாத்தினீங்க? என்னாலே யாருக்கும் பிரயோஜனமில்லை. பிரயோஜனமில்லாமே எதுக்காக சாமீ உயிரை வெச்சுக்கிட்டு இருக்கோணும்...?"

"பிரயோஜன்மில்லையா...? யாரப்பா அப்படிச் சொன்னாங்க?"

"எங்கம்மாவே சொல்லிட்டாங்க! அதுக்கு மேலே வேறு யாரு சொல்லணும் சாமி?" என அவன் மேலும் விம்மத் தொடங்கினான்.

அவனை மிகுந்த பாசத்துடன் ஒரு கையால் அணைத்துக் கொண்டு, "உங்க அம்மா சொன்னாலும் சரி, வேறே யாரு சொன்னாலும் சரி, அதது பிரயோஜனப்படற விதத்தாலே வித்தியாசப்படலாம். அவ்வளவு தான்" என்றார் சாமியார்.

"என்னாலே இனி யாருக்கும் ஒரு பிரயோஜனமும் இல்லே..." என விம்மியவனைத் தேற்றி, "அதெல்லாம் உன்னாலும் என்னாலும் சொல்ல முடியாதுப்பா..." எனக் கூறித் தம்முடன் அவனை அழைத்துக் கொண்டு சென்றார் அன்னதானச் சாமியார்.

பகல் முழுவதும் கை வண்டி இழுத்துப் பிழைக்கும் கந்தையாவின் மகன் தான் சங்கரன். தங்கள் மகன் தங்களைப் போல் தற்குறியாக இல்லாமல் நன்றாகப் படித்து முன்னேற வேண்டும் என்று கந்தையனும் அவன் மனைவி வள்ளியம்மாளும் அவனை ஆர்வமாய்ப் படிக்க வைத்தார்கள்.

கந்தையாவிற்குக் கிடைக்கும் கூலி, ஒரு நாளைப் போல ஒருநாள் இராது. சில நாட்களில் ஒருவேளை சாப்பாட்டிற்குப் போதுமான கூலி கூடக் கிடைக்காது. அந்த நாட்களில் பையனை மில் வேலைக்கு அனுப்பினால் தினசரி நிலையாக வருமானம் வருமென்ற யோசனையை அந்தப் பேட்டையின் பக்கத்துக் குடிசைகளில் உள்ளவர்கள் சொல்வார்கள். "நாள் பூரா பசியும் பட்டினியுமாக் கிடந்தாலும் சரி, சங்கரனைப் படிக்க அனுப்புவமே ஒழிய, ஒருநாளும் கூலி வேலைக்கு அனுப்ப மாட்டோம்..." என அப்போதெல்லாம் வள்ளியம்மாள் ஆவேசத்துடன் கூறுவாள்.

நீண்ட காலமாகத் தமிழ் நாட்டில் இருந்து வந்த மதுவிலக்கை, புண்ணியவான்கள் என்றைக்குக் காற்றில் பறக்க விட்டார்களோ, அன்றைக்கே கந்தையாவின் குடும்பத்தில் புயல் 'மையம்' கொள்ளத் தொடங்கி விட்டது!

விளையாட்டாகக் கை வண்டிச் சகாக்களுடன் ஆரம்பித்த குடிப் பழக்கம், மதுவிலக்கு மறுபடியும் வந்த பின்னும் கந்தையாவைக் கவ்விப் பிடித்துக் கொண்டது. மீன்—உண வென்று விழுங்கித் தூண்டிலில் சிக்கிக் கொள்வதில்லையா? மிருகங்கள் — இரையென மயங்கி வலையில் விழுந்து விடுவதில்லையா? கந்தையாவின் நிலையும் அப்படி ஆகி விட்டது. குடிப் பழக்கத்தால் அவனது வாக்கும் போக்கும் தலைகீழாக மாறிப் போய் விட்டன. கிடைக்கும் வருமானத்தில் பெரும் பகுதியைக் குடித்தே தீர்த்தான்.

கள்ளத்தனமாய் உற்பத்தியாகும் கெட்ட மதுக் கஷாயங்களைத் தினமும் குடித்து வந்ததால், தேக வலுவும் குறையத் தொடங்கியது. முன் இரவு நேரங்களில் வள்ளியம்மாளுடன் மூர்க்கத்தனமாய்ச் சப்தம் போட்டு வீண் வார்த்தையாடும் கந்தையா, சில நாட்களில் நள்ளிரவு வரையும் ஓய்வதில்லை. இத்தனைக்கும் வள்ளியம்மாள் கந்தையாவுடன் அதிகமாகப் பேசுவதில்லை. தனது விதியை நினைத்துக் க்ண்ணீர் விட்டுக் கொண்டே படுத்திருப்பாள். வீட்டிற்கு வெளியே ஒட்டுத் திண்ணையில் படுத்திருக்கும் சங்கரனுக்கு ஆத்திரமும், வெட்கமும், வேதனையும் வருவதோடு, சில பொழுதில் அழுகையும் வந்து விம்மிக் கொண்டிருப்பான்.

தாயின் பசியைப் போக்குவதைக் காட்டிலும் தனக்குப் படிப்பு முக்கியமில்லையென ஒருநாள் வள்ளியம்மாளிடம் சங்கரன் அழுது கொண்டே சொன்னான். "அந்த மனுசனுக்குத் தான் புத்தி கெட்டுப் போச்சு. அதுக்காக நீ ஸ்கூலுக்குப் போறதை நிறுத்தி

விட்டு, கூலி வேலைக்குப் போகணுமா? அந்த மனுசனை நம்பி இனி நம்மாலே பட்டினியும் கெடக்க முடியாது. அதனாலே நாளையிலேருந்து மில்லுக்கு நான் போகப் போறேன். நீ படிக்கிறபடி படி. அதுக்கு மேலே ஆண்டவன் விட்ட வழி...'' என வள்ளியம்மாள் மகனிடம் உருக்கமாகக் கேட்டுக் கொண்டாள்.


ஒரு மாலைநேரம். பள்ளியிலிருந்து வீடு திரும்பினான் சங்கரன். தன் வீட்டு வாசலில் புத்தகங்களும், நோட்டுகளும், வீட்டுச் சாமான்களும் தாறுமாறாக இறைந்து கிடப்பதைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தான். அந்தப் பேட்டையைச் சேர்ந்த சிலர், அங்கங்கே தூரத்தில் நின்று வேடிக்கை பார்ப்பதைக் கண்டு, வெட்கத்தோடும் வேதனையோடும் புத்தகங்களையும், நோட்டுக்களையும் குனிந்து கொண்டே எடுத்து அடுக்கத் தொடங்கினான்.

வீட்டினுள்ளிருந்து, ''யார்டா அவன்?'' என ஓங்கிய குரலில் குமுறியவாறே கேட்கும் கந்தையாவின் கேள்விக்குப் பதில் சொல்லாமலே சாமான்களை ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்தான் சங்கரன்.

''அடேய்! யார்டா அவன்?'' — மறுபடியும் உறுமினான் கந்தையா.

வேதனையால் சருகாகிப் போயிருந்த சங்கரனின் உடல் கந்தையாவின் உறுமலால் தீப்பற்றிக் கொண்டது போல் ஆயிற்று! ஆத்திரத்துடனும், அழுகையுடனும், ''நானா...? நான் ஒரு குடிகாரனொட மகன்!'' என்றான் சங்கரன்.

''என்னடா சொன்னாய்? அடேய்.. என்னடா சொன்னாய்?'' எனக் கேட்டுக் கொண்டே, ஒரு மிருகத்தின் பாய்ச்சலாய் சங்கரனின் மேல் பாய்ந்து, சட்டையைப் பிடித்து இழுத்துக் கிழித்து, இரண்டு கைகளாலும் அவனை மாற்றி மாற்றி அடிக்கத் தொடங்கினான் கந்தையா. சுற்றிலும் நின்று வேடிக்கை பார்த்தவர்கள் நெருங்கி வந்தனர். மில் வேலைக்குப் போய் வீடு திரும்பிக் கொண்டிருந்த வள்ளியம்மாள் பதறிப் போய், ''ஐயோ! அவனை விட்டுடுங்கோ.. விட்டுடுங்கோ...'' என அலறிக்



பலமும் அறிவும்

ராமுவும் சோமுவும் ரயிலில் ஜன்னல் அருகே எதிர் எதிராக உட்கார்ந்து பயணம் செய்தனர். வழியிலே மழை பெய்ததால், பலசாலியான சோமு, தன் அருகே இருந்த ஜன்னலை மூடி விட்டான். ராமு மிகவும் பலவீனமாக இருந்ததால், அவனால் ஜன்னலை மூட முடியவில்லை.

''அட, நோஞ்சான் பயலே. இதோ நான் மூடுகிறேன் பார்'' என்று கூறி, சோமு ஜன்னலை இழுத்து மூடி விட்டான். மழை நின்றதும், ஜன்னலைத் தூக்க, ராமு சிரமப்பட்டான். ''சோனிப் பயலே, இதோ பார்'' என்று சோமு ஜன்னலைத் தூக்கினான்.

சோமு ராமுவை 'சோனி' என்றும் 'நோஞ்சான்' என்றும் தொடர்ந்து கேலி செய்ததால், ராமுவுக்கு ஒரு யோசனை தோன்றியது.

ராமு எழுந்தான். அபாயச் சங்கிலியை மிகவும் சிரமப்பட்டு இழுப்பது போல் பாசாங்கு செய்தான். ''அட, நோஞ்சான் பயலே, இதை இழுக்கக் கூட உனக்குச் சக்தி இல்லையே!'' என்று கூறிவிட்டு அபாயச் சங்கிலியைச் சோமு பிடித்துப் பலமாக இழுத்தான். அடுத்த கணம் வண்டி நின்றது. அபாயச் சங்கிலியை இழுத்த சோமுவை ரயில் அதிகாரிகள் பிடித்துக் கொண்டனர்.

'பலம் இருந்தால் மட்டும் போதுமா? அறிவும் வேண்டும்' என்பதை சோமு அப்போதுதான் உணர்ந்தான்.

— மு. சதீஷ்குமார் (20,906),
விருத்தாசலம்.



கொண்டே கணவனுக்கும் மகனுக்கும் குறுக்கே நின்றாள்.

''அடியே! இந்தப் பயலுக்கா ஏத்துக்கிட்டு வாராய்? இந்தப் பயல் என்னைக் குடிகாரன்னு சொல்லிப்பிட்டாண்டி....!'' என்று வள்ளியம்மாளின் சிகையைப் பிடித்து இழுத்தான் கந்தையா.

ஓங்கிய கையைத் தடுத்துத் தன் பலம் கொண்ட மட்டும் கந்தையாவைப் பின்புறமாகத் தள்ளிக் கொண்டு போய், ஒட்டுத் திண்ணையில் கிடத்தி விட்டு, வேகமாக அங்கிருந்து ஓடினான் சங்கரன்.

சற்று நேரத்தில் இரண்டு காவலர்களுடன் பேட்டைக்குள் நுழைந்த சங்கரனை, பேட்டை வாசிகள் ஆச்சரியத்துடன் பார்த்தனர். நேராகத் தன் வீட்டுக்கு முன் காவலர்கள் வந்த போது 'இங்கேதான்' எனச் சுட்டிக் காட்டினான் சங்கரன்.

அப்போதும் வள்ளியம்மாளுடன் வீட்டினுள் சச்சரவு செய்து கொண்டிருந்தான் கந்தையா.

''யாரப்பா உள்ளே? என்ன சப்தம்? வெளியே வாப்பா...'' என்ற அதட்டலைக் கேட்டதும், வீட்டினுள் சப்தமும், சச்சரவும் நின்றன!

''இங்கே யாரும் இல்லேங்க...'' எனப் பயந்து, குழப்பத்துடன் வெளியே வந்த வள்ளியம்மாள், காவலர்களுடன் சங்கரனைப் பார்த்துத் திடுக்கிட்டாள்.

கந்தையாவைக் காவலர்கள் பிடித்து இழுத்துக் கொண்டு பேட்டையை விட்டுச் சென்ற போது, அவளுடைய ஆத்திரமும், ஆற்றாமையும் மகன் சங்கரன் மேல் திரும்பியது. ஒட்டுத் திண்ணையில் வெறித்த பார்வையுடன் உட்கார்ந்திருந்த அவனைப் பிடித்து உலுக்கிக் கீழே தள்ளினாள். ''அடே! இதுக்குத்தானா உன்னை வளத்துப் படிக்க வெச்சோம்? பெத்த தாயைத் தவிக்க விட்டுட்டு, வளத்த அப்பனையே போலீசிலே புடிச்சுக் குடுத்திட்டியே...? பாவிப் பயலே! தலை அரிச்சதுனா கொள்ளிக் கட்டையை எடுத்தா சொறிஞ்சுக்கிறது? என் கண்ணிலே முழிக்காதே...! எங்கே போவியோ... எங்கே ஓடுவியோ.. குளம் குட்டையிலே

அல்லது ரயில்லே விழுந்து சாவியோ போய்த் தொலை.. இனிமேலே உன்னால ஒரு பிரயோசனமும் இல்லே. போடா... போ... போ'' தரையில் உட்கார்ந்து 'ஓ'வென ஓலமிட்டாள்.

''சரி... நான் போயிடறேன்.. ஆமா, போயே போயிட்றேன்!'' என விம்மல்களுக்கிடையே ஆத்திரத்தோடு கூறி விட்டு, அங்கிருந்து ஒரு தீர்மானத்துடன், கண்ணீரைத் துடைத்து விட்டுக் கொண்டு 'விடு விடு'வென நடந்தான் சங்கரன்.

— தன் கதையை ஆலமரத்துக்கு அருகே உள்ள மேடையில், விளக்குக் கம்பத்தின் எளிமையான ஒளியில், அன்னதானச் சாமியாருக்குப் பக்கத்தில் அமர்ந்து, சொல்லிக் கொண்டு வந்த சங்கரன், ''தினமும் அம்மாவைக் கஷ்டப்படுத்துறாரேங்கிற நெனப்பிலேதான், ஒரு வேகத்திலே போலீசுக்குப் போனேன்'' எனக் கூறிக் கொண்டு, 'ஓ'வென அழத் தொடங்கினான்.

''சங்கரா! அழாதேப்பா... நீ போலீசுக்குப் போனதிலேயும் தவறில்லை! உங்க அம்மா உன்னை வீட்டை விட்டுப் போகச் சொன்னதிலேயும் தவறில்லை!'' எனச் சாமியார் கூறியதைக் கேட்ட சங்கரன் அவரை ஆச்சரியத்துடன் பார்த்தான்.

''ஆமா, சங்கரா..! பிரகலாதன் சரித்திரம் படிச்சிருப்பியே...? ஞாபகமிருக்கா? தாயினும் இனிய தயாபரனுக்காகத் தன் தந்தை இரணியனுக்கு எதிராக நின்றான் பிரகலாதன்; இல்லையா? தாயின் பொருட்டு உன் தகப்பனுக்கு எதிராக நின்றிருக்கிறாய் நீ! அவ்வளவுதான்...! அதே நேரத்திலே இன்னொண்ணையும் நீ மறக்கக் கூடாதப்பா... எவ்வளவு மோசமானவனாப் போனாலும், புருஷனிடம் வெச்ச மரியாதையை, பக்தியை மாற்றிக்கிறது, நம்ப நாட்டு பெண்டுகளுக்குச் சரி வராது! அந்தப் பக்தியிலேதான் உன் அம்மா உன்னை அப்படிப் பேசியிருக்கா.. உன் தாய் உத்தமமான பதிவிரதையின்னு எனக்குப் பட்றது'' எனக் கூறிய அன்னதானச் சாமியாரைச் சங்கரன் வாஞ்சையோடு நோக்கினான்.

''சரி, பனி அடிக்கறாப்பிலே இருக்கு, குடிசைக்குள்ளே போய்ப் படுத்துக் கொண்டே பேசுவோம்... வா...'' எனச் சங்கரனின் கையைப் பிடித்துக் குடிசைக்குள் அழைத்துச் சென்றார் சாமியார். தன் அருகே படுத்திருந்த சங்கரனைத் தேற்றுவதற்காகவும், தெளிவு பெறச் செய்வதற்காகவும் இரவு வெகு நேரம் வரை, இதிகாசங்கள், புராணங்கள், சரித்திரங்கள் ஆகியவற்றிலிருந்து நிகழ்ச்சிகள் பலவற்றைப் பாசத்தோடு கூறிக் கொண்டிருந்தார் சாமியார்.

நன்றாகத் தூங்கிப் போன சங்கரன், விடிவதற்கு முன் எழுந்தான். தன் அருகில் படுத்திருந்த சாமியாரைக் காணாது, குடிசைக்கு வெளியே வந்தான். ஆலமரத்தடியில் நின்ற சாமியார் ''சங்கரா! என்ன தூக்கம் போயிட்டுதா...? சரி, புறப்படு. புருஷனுமில்லாமே, புள்ளையும் இல்லாமே ராத்திரியெல்லாம் உங்க அம்மா என்னமாத் தவிச்சாளோ? ஆமா, பத்தாவது படிக்கறதாத்தானே சொன்னாய்...? இந்த வருஷம் அரசாங்கப் பரீட்சை எழுதணும்... இல்லையா? படிக்கிறதுக்கு வீட்டிலே கஷ்டமா இருந்தா இங்கே வந்திடு.. படிக்கிறதுக்கு ஏற்ற தனிமையான இடம் இது! எப்ப வேணுமானாலும் இங்கே நீ வரலாம்... ம்.. ம் புறப்படு. உன் அம்மாவுக்கு இப்போ கோபம் கொஞ்சம் குறைஞ்சுதான் இருக்கும். அவங்க என்ன பேசினாலும் நீ ஒண்ணும் எதிர்த்துப் பேசாதே.'' நல்லா விடிஞ்சதும் அனுப்பி வைத்தார்.

இரவு நெடு நேரம் வரை, சாமியார் சொல்லிக் கொண்டிருந்த சம்பவங்கள், தன் பேட்டையை நோக்கி நடந்து கொண்டிருந்த சங்கரனின் மனத்துள் ஒவ்வொன்றாகத் தோன்றிக் கொண்டிருந்தன.

ஆள் இல்லாத ரயில்வே கேட் அருகே வந்ததும், நேற்றிரவு தண்டவாளத்தின் குறுக்கே, தான் படுத்திருந்த இடத்தைத் திகிலுடன் திரும்பிப் பார்த்தான். நிலம் தெளியும் அந்த நேரத்தில், தண்டவாளத்தின் அருகே அமர்ந்து, திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே, எதையோ செய்து முடிக்க அவசரப்படும் ஒரு மனிதனை மிகுந்த வியப்புடன் பார்த்

சித்திரப் புதிர் — 35 விடை:

1. எகிப்து (EGYPT)
2. ஸ்கேட்டிங் (SKATING)
3. கப்பல் கட்டும் தொழில்
4. கயிலாச மலை
5. துருவக் கரடி (POLAR BEAR)

தான் சங்கரன். ரயில் கேட் அருகே இவன் நிற்பதையும், கூர்ந்து பார்ப்பதையும் கண்ட அந்த மனிதன், ஓட்டமும் நடையுமாக இவன் நிற்பதற்கு எதிர்த் திசையில் விரைவாகச் சென்று மறைந்தான். கொஞ்ச நேரம் சிந்தித்த சங்கரன் ஆவலுடன் அந்த மனிதன் அமர்ந்திருந்த இடத்தை நோக்கி நடந்தான்.

தண்டவாளங்களை இணைக்கும் ஃபிஷ் பிளேட்டுகள் கழற்றப்பட்டுக் கிடப்பதைப் பார்த்த சங்கரன், செய்வது அறியாது திகைத்து நின்றான்.

சங்கரனின் உடலெங்கும் அந்தக் காலை நேரத்திலும் 'குப்'பென வியர்த்தது! பதற்றத்துடன் சுற்றிலும் பார்த்தான். கண்ணுக்கு எட்டிய தூரம் வரை ஒருவரையும் காணாது கலங்கினான். இன்னும் அரை மணி நேரத்தில் ரயில் அங்கு வந்து விடும் என்பது அவனுக்குத் தெரியும். கலவரமடைந்த சங்கரலிங்கம், ரயில் வருகிற திசையை நோக்கித் தலை தெறிக்க ஓ டி னா ன். இருபதே நிமிஷத்தில் 15 கிலோ மீட்டர் தூரத்தில் இருந்த ரயில்வே ஸ்டேஷனை அடைந்து விட்டான். ஸ்டேஷன் மாஸ்டர் அறைக்குள் திடீரெனப் புகுந்து மேல் மூச்சு கீழ்மூச்சு வாங்க, நடந்ததைச் சொன்னான். அவன் சொல்லி முடிப்பதற்கும், ரயில் அந்த ஸ்டேஷனில் வந்து நிற்பதற்கும் சரியாக இருந்தது. உடனே ரயில் டிரைவரை நோக்கி ஓடினார் ஸ்டேஷன் மாஸ்டர். தகவல் அறிந்த டிரைவர் கீழே இறங்கினார். மற்ற அதிகாரிகளும் உடனே வந்தார்கள். ரயில்வே இன்ஜினியர்களையும் வேலையாட்களையும் அழைத்துக் கொண்டு சங்கரன் சொன்ன இடத்தை அடைந்தார்கள். "ஆ! சற்று முன்புதானே தண்டவாளங்களைச் சரிபார்த்துச் சென்றோம். அதன் பிறகுதான் இந்த நாச வேலை நடந்திருக்கிறது" என்று சிலர் கூறினர்.

"நல்லவேளை! கடவுள்தான் ஆயிரக்கணக்கான பயணிகளை இந்தப் பையன் வடிவிலே வந்து காப்பாற்றினார்" என்றார் ஸ்டேஷன் மாஸ்டர். மற்றஎல்லோருமே அவனைப் பாராட்டினர். சிறிது நேரத்தில் பாதை சரி செய்யப்பட்டது. இச் செய்தி அக்கம் பக்கத்தில் பரவி, அன்னதானச் சாமியாரும் அங்கு வந்து விட்டார்! அவர் நடந்ததைக் கேட்டு, "சங்கரா, நினைவிருக்கா? உலகத்திலே பிரயோஜனமில்லாத பொருள் எதுவுமே இல்லை. அதது பிரயோஜனப்படுகிற விதத்திலே வித்தியாசப்படும்" என்று கூறிப் பாசத்தோடு அவனைத் தட்டிக் கொடுத்தார்.


எல்லாரும் திரும்பி அந்த ஸ்டேஷனுக்கு வந்ததும், தகவல் அறிந்த பயணிகளும் சங்கரனைப் பாராட்டினார்கள்.

அப்போது அங்கு ஓடிவந்த டாக்டர் கணேசன், "தம்பி, நான் குடும்பத்தோட குற்றாலம் போறதுக்காக வந்தேன். உன்னால் உயிர் தப்பிய ஆயிரக்கணக்கானவர்களிலே என் குடும்பமும் ஒன்று. சென்னையில் பெரிய மருத்துவமனை வைத்திருக்கிறேன். உனக்கு வேண்டிய எல்லா உதவிகளையும் நான் செய்யத் தயாராயிருக்கிறேன்" என்று உருக்கமாகச் சொன்ன வார்த்தைகள் ரயில்வே பணியாளர்களை மட்டுமல்லாது சாமியாரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தின!

எழும்பூர் ரயில் நிலையத்திற்குள், கொல்லம் எக்ஸ்பிரஸ் அதிகாலை நேரத்தில் சென்று நின்றது. சங்கரலிங்கத்தை வரவேற்கக் குடும்பத்துடன் வந்திருந்த டாக்டர் கணேசன் அவன் ரயிலை விட்டு இறங்கியதும், அவனை இறுகப் பற்றி அணைத்துக் கொண்டார். கந்தையாவையும், வள்ளியம்மாவையும் கனிவோடு பார்த்து, "உத்தமமான இந்தப் பிள்ளையை மகனாகப் பெறுவதற்குப்பூர்வ ஜன்மத்தில் நீங்கள் புண்ணியம் செய்திருக்க வேணும்!" என்றார், டாக்டர் கணேசன். ஆனந்தக் கண்ணீருடன் சங்கரனின் அப்பாவும், அம்மாவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

பிருந்தாவனக் கதையரங்கம்

பந்தயப் பணம்



ஆறு.அண்ணாதுரை
(10403)

"டேய், பாபு, நம்ம வகுப்பிற்குப் புதிதாக வந்திருக்கும் மணி..." என்று இழுத்தான் துரை.

"அவனுக்கென்னடா?" என்று கேட்டான் பாபு.

"அவன் தன்னைவிட யாரும் நல்லாப் படிக்க மாட்டாங்க என்று நினைப்பவன்!"

"இது எல்லாருக்கும் தெரிந்தது தானே!... நாம் எப்படியும் அவனுடைய ஆணவத்தை அடக்கணும்டா" என்று இருவரும் பேசியபடியே பள்ளிக்கூடத்திற்குவந்துகொண்டிருந்தனர்.

பாபுவும், துரையும் எட்டாவது வகுப்பு மாணவர்கள். சுமாராகப் படிப்பார்கள். அதே வகுப்பில் புதிதாய் வந்து சேர்ந்த மாணவன் மணி. நன்றாகப் படிப்பவன். ஆனால், தன்னை யாரும் படிப்பில் மிஞ்ச முடியாது என்ற ஆணவம் மணியிடம் குடிகொண்டிருந்தது. இதனால் மற்ற மாணவர்களிடம், "என்னைவிட அதிக மதிப்பெண்கள் யாரால் வாங்க முடியும்?" என்று பந்தயம் வைப்பான். அவனது திறமையை அறிந்து யாரும் எளிதில் அவனது பந்தயத்திற்குச் சம்மதிக்க மாட்டார்கள். தப்பித் தவறி அவனது பந்தயத்தை ஏற்றுத் தோற்று விட்ட மாணவனை, அவன் மிகவும் கிண்டல் பண்ணுவான். மணியின் பந்தயத்தை ஏற்றுத் தோல்வியைச் சந்தித்தவர்களில் துரையும், பாபுவும் அடங்குவார்கள்.

"டேய், பாபு, அதோ பாருடா, நம்ம கூடப் படிச்ச கண்ணன் வர்றாண்டா" என்று துரை கூற, இருவரும் ஓடினார்கள், கண்ணனிடம்.

"கண்ணா! நீ மட்டும் தனியாய் வருகிறாய். என்ன விஷயமடா?" என்று துரை கேட்டான்.

"துரை! எங்கப்பாவுக்கு மீண்டும் இந்த ஊருக்கே இடமாற்றம் ஆகியிருக்கு. நான் இனிமேல் இங்கேயே படிக்கப் போறேன்" என்றான் கண்ணன்.

"டேய் கண்ணா! நீ இந்தப் பள்ளிக்கூடத்தை விட்டுப் போன பிறகு மணின்னு ஒரு பையன் புதிதாகச் சேர்ந்தான். அவன் நல்லாப் படிப்பான்டா; ஆனால், தன்னை யாரும் 'படிப்பில் மிஞ்ச முடியாது' என்று நினைப்பவன். இதனால், எங்களை ஏளனம் பண்ணுறான்டா. அவனுடைய தலைக்கனத்தை, நீதான் அடக்கணும்" என்று ஒரே குரலில் கூறினார்கள் பாபுவும், துரையும்.

"அப்படியா! சரி, என்னால் முடிந்தவரை நான் முயற்சி செய்கிறேன்" என்றான் கண்ணன்.

"கண்ணா! பள்ளிக்கு நேரமாச்சு. நாங்கள் போயிட்டு வர்றோம்!" கண்ணன் அவர்களுக்கு விடை கொடுத்து அனுப்பினான்.

கண்ணன் நன்றாகப் படிப்பான். ஆனாலும், தான் நன்றாகப் படிக்கிற பையன் என்ற ஆணவம் அவனிடம் துளிக்கூடக் கிடையாது. சென்ற ஆண்டு இந்தப் பள்ளிக்கூடத்தில் தான் படித்தான். அப்போது துரையும் பாபுவும் நண்பர்கள் ஆனார்கள். கண்ணனின் தந்தைக்கு வெளியூரில் சென்ற ஆண்டில் இடமாற்றம் கிடைத்ததால்தான் கண்ணன் வெளியூர் செல்ல நேர்ந்தது. இப்போது மீண்டும் அதே பள்ளியில் வந்து சேர்ந்தான்.

ஒருநாள் மணி கண்ணனிடம்வந்து, "வருகிற மாதத் தேர்வில் என்னைவிட அதிக மதிப்பெண் பெற உன்னால் முடியுமா?" என்று ஆணவத்துடன் கேட்டான்.

"எல்லா மாணவர்களும் அதிக மதிப்பெண் பெறத்தானே முயற்சி செய்வார்கள்? நானும் முயற்சி செய்வேன்" என்று அடக்கத்தோடு கூறினான் கண்ணன்.

"அப்படி என்னைவிட அதிக மதிப்பெண் பெற்றுவிட்டால் நான் உனக்கு இருபது ரூபாயைப் பந்தயப் பணமாகத் தருகிறேன். நான் உன்னைவிட அதிக மதிப்பெண் பெற்றுவிட்டால் நீ எனக்குப் பத்து ரூபாயைப் பந்தயப் பணமாகத் தந்தாலும் போதும். சம்மதமா?"

கண்ணன் சிறிது நேரம் யோசித்தான். அதற்குள் துரையும் பாபுவும் "கண்ணா, என்னடா தயக்கம்? சரியென்று சொல்லுடா" என்று தூண்டி விட்டனர். உடனே கண்ணனும் சம்மதித்து விட்டான்.

மாதத் தேர்வும் வந்தது. எல்லாப் பாடங்களிலும் முதல் மதிப்பெண்கள் பெற்றிருந்தான் கண்ணன். கண்ணனுக்கு அடுத்தபடியான மதிப்பெண்களையே பெற்றிருந்தான் மணி.

"கண்ணா! நம் பந்தயப்படி இந்தா இருபது ரூபாய்" என்று கண்ணனிடம் நோட்டை நீட்டினான் மணி.

"மணி, இதை நீயே வைத்துக் கொள். இனிமேல், உனது ஆணவத்தைவிட்டுவிடு. அதுவே நீ எனக்குத் தரும் பந்தயப் பணம்" என்றான் கண்ணன்.

"கண்ணா! நிச்சயமாக விட்டு விடுகிறேன்" என்று தழுதழுத்த குரலில் கூறினான் மணி.

இப்பொழுதெல்லாம் மணி ஆணவத்தை விட்டுவிட்டு நல்ல பிள்ளையாக நடந்து கொள்கிறானாம்.

காணாமல் போன குமார்



டி.ஏ. பிரான்சிஸ் (19532)

நாகபுரி என்ற ஊரில் ராஜா, சித்ரா இவர்களின் செல்வ மகனாக குமார் வளர்ந்து வந்தான். அப்போது அவனுக்கு இரண்டு வயது கூடப் பூர்த்தியாகவில்லை.

ஒருநாள் அவர்கள் அனைவரும் சுற்றுலா சென்றனர்.

அப்பொழுது ஓர் ஊரில் திருவிழா நடைபெற்றது. அதைக் கண்டவுடன் அங்கு இறங்கி, நன்கு சுற்றிப் பார்த்தனர். குமாரின் தாயும், தந்தையும் வேடிக்கை பார்த்த ஆரவாரத்திலும், அளவுக்கு மீறிய நெருக்கடியிலும் குமாரைக் கவனிக்க மறந்து விட்டனர். குமார் வேடிக்கை பார்த்தவாறே வேறு எங்கேயோ சென்று விட்டான். பின்பு குமாரைத் தேட ஆரம்பித்தனர் அவன் பெற்றோர். குமாரின் தாய் அழுதவாறே தேடலானாள். இருவரும் தேடி அலைந்து கடைசியில் குமார் கிடைக்காமற்போகவே, போலீஸாரிடம் புகார் செய்தனர். அவர்

களும் தேடிப் பார்த்து, காணவில்லை என்று கூறிவிட்டார்கள்.

குமார் பெற்றோரைக் காணாத ஏக்கத்துடன் அழுதுகொண்டே தேடித் தேடிக் கடைசியில் யாருமே இல்லாத இடத்திற்குச் சென்று விட்டான். சூரியன் மறையும் நேரமாகி விட்டது. அவனும் களைப்பால் உறங்கி விட்டான்.

அவ்வழியில் ஒருவர் வந்தார். அவர் அந்தச் சிறுவனைக் கண்டு அவன் கழுத்தில் இருக்கும் தங்கச் சங்கிலியைப் பார்த்து, 'இவன் யாரோ பணக்கார வீட்டுப் பிள்ளையாகத்தான் இருக்க வேண்டும்' என நினைத்தார். தனக்கும் குழந்தை இல்லை, அந்தச் சிறுவனுக்கும் யாரும் துணையைக் காணோம் என அவரே தூக்கிக் கொண்டு சென்று விட்டார். அவருடைய மனைவியும் மிக்க மகிழ்ச்சியால், குழந்தைக்கு முத்தமிட்டு அன்போடு அணைத்துக் கொண்டாள்.

அந்தச் சிறுவனுக்கு 'கோபி' என்று பெயரிட்டார்கள். பள்ளிக்கு அனுப்பினார்கள். படித்து நல்ல மாணவனாகத் திகழ்ந்தான். அவனுக்கு இருபது வயது ஆகியது. அவர்களுக்கும் வயதாகிவிட்டது. அவனுடைய வளர்ப்புத் தாயார் இறந்து விட்டாள். கோபியை வளர்த்த அப்பாவும் உடல்நிலை சரியில்லாமல், படுக்கையில் இருந்தார். அவர், "நான் இறக்கும் முன் உன்னிடம் ஓர் உண்மையைக் கூறப் போகிறேன்" என்றார்.

கோபியும், "என்ன அப்பா? சொல்லுங்கள்" என்றான்.

"நானும் என் மனைவியும் உன்னுடைய சொந்த அப்பா, அம்மா இல்லை. நீ பதினெட்டு வருடங்களுக்கு முன் ஒரு மரத்தடியில் உறங்கிக் கொண்டிருந்தாய். அவ்வழியில் வந்த நான், எனக்குக் குழந்தை இல்லாத காரணத்தால் உன்னை அன்போடு வளர்த்து வந்தேன். அன்று உன் கழுத்தில் இருந்த தங்கச் சங்கிலி உன் கழுத்திலேயே பல நாட்கள் இருந்தது. நீ வளர்ந்து பெரியவனானதும், வேறு சங்கிலி செய்து போட்டேன்." என்று கூறி, சில நாட்களில் இறந்து விட்டார். கோபிக்குத் துக்கம் அதிகரித்தது.

அவன் தன் சொந்தப் பெற்றோரை எப்படியாவது காண வேண்டும் என்ற முயற்சியுடன் ஊர் ஊராகச் சுற்றித் தேடினான். அப்படிச் சென்று கொண்டிருக்கும் போது ஆட்டோ, ஒரு வயதான அம்மையாரை இடித்து விட்டுச் சென்றது. அந்த அம்மையார் கீழே விழுந்தார். காயங்களும் ஏற்பட்டன. இதைப் பார்த்த கோபி உடனே அவ்வம்மையாரைத் தூக்கிக் கொண்டு ஆஸ்பத்திரிக்குச் சென்று உடல் நிலை சரியான பின்பு, "அம்மா, உங்கள் வீடு எங்கே இருக்கிறது? நான் உங்களை வீட்டில் விட்டுச் செல்கிறேன்" என்று கூறினான்.

"உன் நல்ல எண்ணத்தையும், பாசத்தையும் பாராட்டுகிறேன் தம்பி. வா போகலாம்" என்று கூறித் தன் வீட்டுக்கு அழைத்துச் சென்றார்.

வீட்டிற்குள் சென்றவுடன், "உங்களுக்குத் துணையாக யாரும் இல்லையா?" என்று கேட்டான் கோபி.

"இல்லை தம்பி. என் கணவரும் இறந்து விட்டார். என் மகன் சிறிய வயதிலேயே காணாமல் போய்விட்டான். அவன் கழுத்தில் ஒரு தங்கச் சங்கிலி போட்டிருந்தோம். அதில் 'K' என்ற எழுத்தும் இருக்கும். முதுகில் பெரிய மச்சமும் இருக்கும்" என்று கூறினார். உடனே கோபி சட்டையைக் கழற்றி அந்த அம்மையாரிடம் முதுகைக் காட்டினான். அதில் பெரிய மச்சம் இருந்தது. அத்துடன் தான் சிறு குழந்தையாக இருந்த போது அணிந்திருந்த தங்கச் சங்கிலியில் 'K' என்ற எழுத்து இருப்பதையும் கூறினான். அதைக் கேட்ட அந்த அம்மையார் அவனை அப்படியே கட்டி அணைத்து "என் அருமை மகனே!" என்று முத்தமிட்டார். உடனே, "அம்மா!" என்று கூறிக் கண் கலங்கினான் கோபி.

"குமார், நீ சிறு வயதில் எப்படி இருந்தாய், பார்த்தாயா?" என்று ஒரு போட்டோவை அவனிடம் காண்பித்தார். பின்பு, கோபியும் நடந்தவற்றையெல்லாம் கூறி, "எனக்குக் 'கோபி' என்று பெயரிட்டார்கள்" என்றான். இருவரும் மகிழ்ச்சியாக வாழ்ந்தார்கள்.


(வி)சித்திரச் செய்திகள்

சொன்னபடி நடந்தவர்!

உலகில் அதிக தூரம் நடந்து காட்டப்போவதாக ஸ்டீவ் நியூமன் என்னும் அமெரிக்கர் அறிவித்தார். அதன்படி அவர் 33,600 கி. மீட்டர் தூரம் நடந்து சாதனை புரிந்திருக்கிறார். 22 நாடுகளுக்கு அவர் நடந்தார். அமெரிக்காவிலிருந்து ஐரோப்பாவுக்கும், ஆசியாவிலிருந்து ஆஸ்திரேலியாவுக்கும் போகும் போது இடைப்பட்ட சமுத்திரத்தை விமானத்தில் கடந்தார்.




நான்கு சக்கர மோட்டார் சைக்கிள்!



சாதாரணமாக மோட்டார் சைக்கிளுக்கு இரண்டு சக்கரங்கள்தானே இருக்கும்! ஆனால், இப்போது ஜப்பானில் நான்கு சக்கர மோட்டார் சைக்கிளைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். இது மிகவும் பாதுகாப்பானது. கவிழ்ந்து போவதில்லை. அத்துடன் பெட்ரோலும் அதிகம் செலவாவதில்லையாம்!

90 ஆண்டுகளுக்குப் பிறகு உயிர் பெற்றது!

ரஷ்யாவில், சைபீரியா பகுதியில் தங்கச் சுரங்கம் தோண்டினார்கள். அப்போது 90 ஆண்டுகளுக்கு முன்பு பனியில் உறைந்து உயிரற்றுப் போன பிராணி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. நீரிலும் நிலத்திலும் வாழக் கூடியது. அதை எடுத்துத் தண்ணீர்த் தொட்டியில் போட்டபோது உயிர் வந்துவிட்டது! அந்தப் பிராணியின் உடலின் மொத்த அளவில் மூன்றில் ஒரு பங் ஈரல் இருக்கிறது. அதிலிருந்து சுரந்து கொண்டிருந்த திரவம்தான் அது மீண்டும் உயிர் பெறக் காரணம் என்கிறார்கள் விஞ்ஞானிகள்.



ஏழு வயதுச் சிறுவனின் சாதனை!



டென்மார்க்கில் ஜேன் பெடெர் சென் என்னும் 7 வயதுச் சிறுவன் இரண்டு தடவைகள் 2,500 மீட்டர் உயரத்திலிருந்து பாராசூட்டைக் கட்டிக் கொண்டு கீழே குதித்துச் சாதனை புரிந்திருக்கிறான். அவனுக்குப் பக்கத்திலேயே அவன் அப்பாவும் துணையாகக் குதித்தார்!



மணக்கும் இசைத்தட்டு!

பல்கேரியாவில் நல்ல வாசனையை வெளிப்படுத்தும் இசைத் தட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. வேண்டிய வாசனை பதிவான இசைத் தட்டைச் சுழலச் செய்தால் அந்த இடத்தில், இசையுடன், மல்லிகை, ரோஜா, அல்லது இதுபோன்ற மணம் மணக்கத் தொடங்கி விடுகிறது!

நீரிலும் நிலத்திலும் செல்லும் வாகனம்



நீரிலும் நிலத்திலும் செல்லக் கூடிய ஒரு வாகனத்தை பிரெஞ்சுக் கடற்கரையோரம் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள். இதில் 150 உல்லாசப் பயணிகள் உட்காரலாம். அதில் இருந்தபடியே நீரிலும் பயணம் செய்யலாம், சாலையிலும் பயணம் செய்யலாம். இடத்தை விட்டு எழுந்திருக்க வேண்டியதில்லை!



வாழைப்பழ வீரர்!

ராஞ்சியில் உள்ள ராஜேந்திரா மருத்துவமனையின் டாக்டர் ஹிருதய நாராயண் என்பவர் இரண்டே நிமிடங்களில் 1850 கிராம் எடையுள்ள 22 வாழைப் பழங்களைத் தோல் உரிக்காமல் தின்று உலக சாதனை புரிந்திருக்கிறார்!


நீரிலும் நிலத்திலும் செல்லக் கூடிய வாகனம்: ambhibian coach

ஜேன் பெடர்சென்: Jan Pedersen.

பல்கேரியா: Bulgeria.

வாசனை இசைத் தட்டுக்கள்: (aromatic records)

ஸ்டீவ் நியூமன்: Steve Newman



உள்ளத்தில் ஊனமில்லை!



சாலை ஓரம் ஒரு மனிதன்
சகலரும் பார்க்க வாழ்ந்திட்டான்!
ஏழை அவனிடம் சிலரேதான்
இரக்கம் காட்டிச் சென்றிடுவார்!

கண்ணைக் கொடுத்த இறைவனுமே
கண் ஒளி கொடுக்க மறந்தானே!
எண்ணில் லாத துயரோடு — கை
ஏந்திக் காசு பெறுவானே!

கிடைக்கும் சொற்பக் காசினிலே
காலம் கழித்து வந்தானே!
தடையாய் ஒருநாள் விபத்தொன்றில்
தன் ஒரு கையையும் இழந்தானே!

சோக வாழ்க்கை வாழ்ந்தாலும்
சோரா உள்ளம் கொண்டானே!
தேக வலிமை குறைந்தாலும்
தினமும் துடிப்பாய் இருப்பானே!

அன்று பகலில் ஒருசிறுவன்
அழும்குரல் கேட்டுத் துடித்தானே!
என்ன காரணம் எனச்சிறுவன்
எடுத்துக் கூறக் கேட்டானே!

த.பழனிவேலு

வெளியூர் செல்லும் அவனிடத்தில்
வேண்டிய பணமும் இருந்ததுவாம்!
வழியில் திருடர் அனைத்தையுமே
வகையாய்ப் பறித்துக் கொண்டனராம்;

பயணம் தொடர முடியாமல்
பயணச் சீட்டையும் இழந்திட்டான்!
துயரம் நிரம்பிய செய்தியினைச்
சுவையாய்ப் பலரும் கேட்டனரே!

கூட்டம் அதிகம் இருந்தாலும்
கொடுத்தே உதவ வரவில்லை!
வாட்டம் போக்க ஒருவருமே
வந்து பணமும் தரவில்லை!

கதையைக் கேட்ட சிலபேரோ
கலைந்து செல்லத் தொடங்கினரே!
இதனை அறிந்து கண்ணீரை
இங்கே இவன்தான் வடித்தானே!

பதறும் அவனை அழைத்தானே!
பையில் இருந்ததைக் கொடுத்தானே
இதமாய் ஆறுதல் சொன்னானே!
இன்னும் கொடுக்க விழைந்தானே!

'போய் வா ஊருக்' கென்றானே!
புலம்பா திருக்கச் சொன்னான்!
ஊனம் உடலில் இருந்தாலும் — இவன்
உள்ளம் ஊனம் ஆகலையே!

டாக்டர் பக்கம்



மோசமான காய்ச்சல்

டாக்டர். கு. கணேசன்

அதோ வருகிறான் பாருங்கள்! அவன்தான் மாதவன். மணியான மாணவன். படிப்பில் கெட்டிக்காரன். பழகுவதற்கு இனிமையானவன், எங்கள் தெருவில் எல்லோருக்குமே மாதவனைப் பிடிக்கும்.

மாதவன் விடுமுறை நாட்களில் என்னைச் சந்திக்க வருவான். அறிவியல் விஷயங்களை அதிகம் பேசுவான். எதையும் அறிவுப் பூர்வமாகச் சிந்திப்பான். அவன் உடல் நலத்தைக் காப்பதில் அக்கறை காட்டுவான்.

இதோ இன்றும் வருகிறான் மாதவன்!

மாதவன்: வணக்கம், டாக்டர்!


நான்: வணக்கம், மாதவா! நலமா? உன்னைப் பார்த்து அதிக நாட்களாயிற்றே...! படிப்பு மும்முரமா?

மாதவன்: ஆமாம், டாக்டர்! மாதத் தேர்வுகளும், மன்றத் தேர்வுகளும் மாறி மாறி வந்தன. அவற்றிற்குத் தயார் செய்வதில் அக்கறை காட்டியதால், இங்கு வர இயலவில்லை... மேலும், என் நண்பன் ஒருவனுக்கு உடல்நலம் சரியில்லை. சாயுங்கால வேலைகளில் அவனைப் பார்ப்பதற்குச் செல்ல வேண்டியிருந்தது, டாக்டர்!

நான்: உன் நண்பனின் என்ன உடம்புக்கு?

மாதவன்: என் நண்பனுக்கு டைபாய்டு காய்ச்சல், டாக்டர்! அரசு மருத்துவமனையில் உள்ளான். டைபாய்டு காய்ச்சல் என்பது மிகவும் மோசமான காய்ச்சல் என்று அங்கே பேசிக் கொண்டார்கள். அது உண்மையா, டாக்டர்? எனக்கு டைபாய்டு காய்ச்சலைப் பற்றி ஒன்றும் தெரியாது. அதை உங்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் என்ற எண்ணத்தில் இப்போது வந்திருக்கிறேன், டாக்டர்!

நான்: அப்படியா, மாதவா? மற்றக் காய்ச்சல்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது, டைபாய்டு காய்ச்சல் சற்றே மோசமானதுதான். இக் காய்ச்சல் தொற்று நோயைச் சேர்ந்தது. சால்மோனெல்லா டைபை (SALMO-



NELLA TYPHI) என்ற பாக்டீரியா கிருமி களினால் வரக்கூடியது. இக் கிருமி கள் சுத்தமற்ற இடங்களில் அதிகமா கக் காணப்படும். சுகாதாரமற்ற சூழ் நிலைகளில் பன்மடங்கு பெருகும். சாக்கடைத் தண்ணீரில் மில்லியன் கணக்கில் வாழும். எனவேதான், ஜனநெருக்கம் நிறைந்த இடங்களில் வசிப்பவர்களிடத்திலும், சுகாதாரம் குறைந்த சூழ்நிலையில் வளர்பவர் களிடத்திலும் டைபாய்டு காய்ச்சல் மிக அதிக அளவில் இருக்கிறது. குளிர் காலத்தை விட, கோடைக் காலத்தில் இந் நோய்க் கிருமிகள் அதிகமாக வளர்ச்சி அடைவதால் ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் டைபாய்டு அதிகமாகக் காணப்படு கிறது.

மாதவன்: அப்படியா, டாக்டர்! டைபாய்டு கிருமிகள் அசுத்தமான இடங்களிலிருந்து நம் உடம்புக்குள் எப்படி நுழைகிறது என்பதையும் எனக்குச் சொல்லுங்கள், டாக்டர்!

நான்: சொல்கிறேன், மாதவா! இந் நோய்க் கிருமிகள் தானாகவே நம் உடம்புக்குள் நுழைவதில்லை. ஈக்கள் மூலமாகவே நுழைகின்றன. எப்படித் தெரியுமா? அசுத்தமான இடங்களில் டைபாய்டு கிருமிகள் இருப்பதைப் போல ஈக்களும் நிறைய இருக்கும். இந்த ஈக்களின் மேல் டைபாய்டு கிருமிகள் அமர்ந்து கொள் ளும். உனக்குத்தான் தெரியுமே, ஈக்கள் ஓரிடத்தில் நிலையாக இல்லா மல் பல இடங்களுக்குப் பறந்து செல் லும். நம் மேல் உட்காரும், நாம் சாப் பிடும் உணவின் மீதும் உட்காரும். தண்ணீரில் போய் அமர்ந்து கொள் ளும். மூடி வைக்காத பலகாரங்களின் மேல் மிகப் பிரியமாக வாசம் செய் யும். இம் மாதிரி சமயங்களில் ஈக்கள் மேல் பயணம் செய்யும் டைபாய்டு கிருமிகள் உணவிலும், தண்ணீரிலும், பலகாரங்களிலும், ஒட்டிக் கொள் ளும். பிறகென்ன, நாம் அந்த உண வையும், தண்ணீரையும், பலகாரங் களையும் சாப்பிடும் போது எளிதாக நம் உடம்புக்குள் நுழைந்து விடும். இப்போது புரிந்து கொண்டாயா மாதவா, எப்படி இக் கிருமிகள் பரவு கின்றன என்பதை?

மாதவன்: புரிந்து கொண்டேன், டாக்டர்! இக் கிருமிகள் நம் உடம்புக் குள் புகுந்ததும் என்ன செய்கின்றன? உடனே காய்ச்சலை உண்டாக்கி விடுமா?

நான்: இல்லை மாதவா! காய்ச்சல் உடனே வருவதில்லை. டைபாய்டு கிருமிகள் உணவின் மூலம் உடம்புக் குள் நுழைந்து நேராக சிறுகுடலுக்குச் செல்லும். அங்கு சில நாட்கள் தங்கி, சிறு சிறு புண்களை உண்டாக்கும். பின்பு, அங்கிருந்து நிணநீர் திசுக்கள் வழியாக இரத்தத்திற்குச் செல்லும். இரத்தத்தில் கிருமிகளின் எண் ணிக்கை பன்மடங்கு அதிகமாகும். இச் சமயத்தில்தான் நமக்குக் காய்ச் சல் வரும். டைபாய்டு கிருமிகள் இதோடு விடுமா? இரத்தத்திலிருந்து கல்லீரல், மண்ணீரல், பித்தநீர் பை ஆகிய உறுப்புக்களுக்குச் சென்று அவற்றையும் பாதிக்கும். அங்கிருந்து மீண்டும் இரத்தத்தின் மூலமாகச் சிறு குடலுக்கு வரும். சுமார் இரண்டு வாரங்கள் கழித்த் பின்னர் இந் நோய்க் கிருமிகள் நோயாளியின்

மலம், சிறுநீர் ஆகியவற்றின் மூலம் வெளியேற ஆரம்பிக்கும். சுமார் ஒரு மாத காலம் நோயாளியின் மலத்திலும், சிறுநீரிலும் கிருமிகள் வெளியேறிக்கொண்டே இருக்கும். இச் சமயங்களில் நோயாளியின் மலத்திலும் சிறுநீரிலும் ஈக்கள் மொய்த்தால், அந்த ஈக்கள் மூலம் மற்றவர்களுக்கு நோய் பரவி விடும். அதனால்தான் டைபாய்டைத் தொற்று நோய் என்கிறார்கள்.

மாதவன்: சரி டாக்டர், ஒருவருக்கு வந்துள்ள காய்ச்சலை டைபாய்டு காய்ச்சல் என்று எப்படி நாங்கள் தெரிந்து கொள்வது? மற்ற காய்ச்சலைப் போல இதிலும் காய்ச்சல் தானே வருகிறது! இதை மட்டும் 'டைபாய்டு' என்று எப்படிக் குறிப்பிட்டுச் சொல்கிறீர்கள்?

நான்: நன்றாகக் கேட்டாய், மாதவா! நோயாளியின் நோய் அறிகுறிகளை வைத்து நாங்கள் டைபாய்டு என முடிவு செய்கிறோம். பின்பு, இரத்தப் பரிசோதனை மூலம் அதை டைபாய்டுதான் என்று உறுதி கொள்கிறோம்.

மாதவன்: அப்படியென்றால் இந்நோயின் அறிகுறிகளை நானும் தெரிந்து கொள்கிறேன், டாக்டர். தயவு செய்து சொல்லுங்கள்.

நான்: டைபாய்டு காய்ச்சலின் ஆரம்பத்தில் இரண்டு நாட்களுக்கு மிதமான காய்ச்சல் இருக்கும். அதனுடன் தலைவலி, உடம்பு வலி, அசதி ஆகியவையும் இருக்கும். மூன்றாம் நாள் காய்ச்சல் அதிகமாகும். 104°F வரை காய்ச்சல் இருக்கலாம். அத்தோடு குளிர், நடுக்கம், வாந்தி, வயிற்றுவலி, வயிற்றுப்போக்கு அல்லது மலச்சிக்கல் போன்ற தொந்தரவுகளும் சேர்ந்து கொள்ளும். அசதி அதிகமாகும். பசி அறவே இருக்காது. இந் நிலை மேலும் 3 நாட்கள் நீடிக்கும். காய்ச்சல் ஆரம்பித்த எட்டாவது நாளில் வயிற்றிலும் முதுகிலும் இளஞ்சிவப்பு நிறத்தில் சிறு சிறு புள்ளிகள் தோன்றும். அதே சமயம் கல்லீரலும், மண்ணீரலும் வீங்கும். மற்ற காய்ச்சலைப் போல் அன்றி டைபாய்டு சுமார் இரண்டு வாரங்களிலிருந்து மூன்று வாரங்கள்



வரை நீடிக்கும்.

மாதவன்: ஏன் டாக்டர், இக் காய்ச்சல் நீண்ட நாட்கள் இருப்பதாலேயே இதனை மோசமான காய்ச்சல் என்று சொல்லுகிறார்களா?

நான்: இல்லை மாதவா! அதற்கு இது மட்டும் காரணமல்ல. டைபாய்டு காய்ச்சலை ஆரம்பத்திலேயே கவனிக்கத் தவறினால் நம் உயிருக்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய பின் விளைவுகள் உண்டாகும். உதாரணமாக, சிறுகுடலில் இரத்தக் கசிவு ஏற்படும். சில சமயங்களில் குடலில் துவாரம் விழுந்து விடலாம். நுரையீரலையும், மூளையையும் பாதிக்கலாம். இதனால்தான் டைபாய்டை மோசமானது என்கிறார்கள். ஆனால், அதே சமயம் இக் காய்ச்சலை உடனுக்குடன் கவனித்து மருத்துவம் பெற்று விட்டால், எளிதில் குணமடைந்து விடலாம் என்ற செய்தியையும் நீ தெரிந்து கொள்ள வேண்டும்.

மாதவன்: நல்லவேளை, டாக்டர்! எங்கே டைபாய்டுக்கு மருத்துவமே

கடிகாரம் காட்டுகின்ற மணி நாட்டுக்கு நாடு வித்தியாசமாக இருக்கும். ஒரே சமயத்தில் பல நாடுகளிலும் என்ன மணி என்று தெரிந்து கொள்ள வேண்டுமானால், நாம் டிஸ்னிலான்டிற்குத்தான் போக வேண்டும். அங்கு ஒவ்வொரு நாட்டின் நேரத்தையும் எப்போதும் சரியாகக் காட்டும் ஒரு பிரம்மாண்டமான கடிகாரம் வைக்கப்பட்டிருக்கிறது.

— வி. மீனாட்சி (9145), புதுக்கோட்டை.

இல்லையோ என்று பயந்து விட்டேன். டைபாய்டு வந்தவர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதையும் எனக்குச் சொன்னால் என் நண்பனிடத்தில் சொல்வதற்கு உதவியாக இருக்கும், டாக்டர்!

நான்: டைபாய்டு உள்ளவர்கள் வீட்டிலோ அல்லது மருத்துவமனையிலோ சுமார் ஒரு மாத காலம் தனியறையில் பூரண ஓய்வு எடுக்க வேண்டியது அவசியம். மருத்துவர் தரும் மருந்து, மாத்திரைகளை முறையாக நேரப்படி உண்ண வேண்டியது மிக மிக அவசியம். காய்ச்சல் ஆரம்பித்த முதல் ஒரு வாரத்திற்கு எளிதில் ஜீரணிக்கக்கூடிய நீராகாரங்களை அதிக அளவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். பால், தண்ணீர், குளுகோஸ், ஹார்லிக்ஸ், ஆரஞ்சு, தக்காளி, திராட்சைப் பழச்சாறுகள் போன்றவற்றை அருந்த வேண்டும். ஒரு வாரம் கழிந்த பின்னர், மிருதுவான ரொட்டி, அரிசிக் கஞ்சி ஆகியவற்றை நீராகாரங்களுடன் சேர்த்துக் கொள்ளலாம். இரண்டு வாரம் கழிந்த பின்னரே, எப்போதும் போல் உணவுகளைச் சாப்பிட இயலும். ஆனால், இறைச்சி, மீன் போன்றவற்றைக் குறைந்தது இரண்டு மாதங்களுக்குச் சேர்த்துக் கொள்ளக் கூடாது.

மாதவன்: ஏன் டாக்டர், டைபாய்டு ஒருவருக்கு வந்து விட்டால் அது எல்லோருக்கும் பரவி விடுமா? அதைத் தடுக்க இயலாதா?

நான்: மாதவன், மனிதன் நினைத்தால் எதைத்தான் சாதிக்க இயலாது? நான் சொல்லும் வழிமுறைகளை நாம் எல்லோரும் கடைப்பிடித்தால் டைபாய்டை எளிதில் தடுத்து விடலாம்.


மாதவன்: அப்படியென்றால் முதலில் அந்தத் தடுப்பு முறைகளை எனக்குச் சொல்லுங்கள், டாக்டர்!


நான்: நல்லது, மாதவன்! உன்னைப் போன்ற சிறுவர்களுக்கு டைபாய்டு வந்தால், ஒரு மாத காலத்திற்குப் பள்ளியில் விடுப்பு எடுத்துக் கொண்டு வீட்டிலிருக்க வேண்டும். அப்போதுதான் பள்ளியில் மற்ற குழந்தைகளுக்கு டைபாய்டு பரவாது. டைபாய்டைத் தடுப்பதற்கு 'டி.ஏ.பி. வேக்சின்' (TAB VACCINE) என்ற ஒரு தடுப்பு ஊசி உள்ளது. அதை டைபாய்டு பரவுகிற சமயங்களில் அனைவரும் போட்டுக் கொள்ள வேண்டும். ஒருவர் ஒரு ஊசி போட்டுக் கொண்டால் மூன்று ஆண்டுகளுக்கு அவருக்கு டைபாய்டு வராது. அடுத்ததாக, வீட்டில் பால், குடி தண்ணீர் போன்றவற்றை நன்கு கொதிக்க வைத்து, ஆற வைத்துச் சாப்பிட வேண்டும். காய்கறிகளை நன்கு அலசிய பிறகே சமையலுக்குப் பயன்படுத்த வேண்டும். உணவுகளைத் தயாரிக்கும்போது சுத்தத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். தயாரித்த உணவுகளை ஈக்கள், கொசுக்கள் மொய்க்காதவாறு பாதுகாக்க வேண்டும். சிறுவர்கள் கடைகளில் விற்கும் ஈக்கள் மொய்த்த பண்டத்தை வாங்கிச் சாப்பிடக் கூடாது. தெருவில் மலஜலம் கழிக்கக் கூடாது. வீட்டிலும் தெருக்களிலும் அசுத்தமான நீர் தேங்கக் கூடாது. அவ்வப்போது ஈக்களை ஒழிப்பதற்கு மருந்து தெளிக்க வேண்டும். இப்படியாக நம்மையும் சுத்தமாக வைத்துக் கொண்டு, நம் சுற்றுப்புறத்தையும் சுத்தமாகப் பேணிப் பாதுகாத்தால் டைபாய்டு காய்ச்சல் என்ற சொல் அகராதியிலிருந்து அகற்றப்படும்! இல்லையா மாதவன்?

மாதவன்: உண்மைதான், டாக்டர்! நீங்கள் சொன்ன மாதிரி இனி நான் சுத்தத்தைக் கடைப்பிடிப்பேன். அதை என் நண்பர்களுக்கும் எடுத்துச் சொல்வேன். டைபாய்டு காய்ச்சல் பற்றிய பயம் இனிமேல் எனக்கு இல்லை. உங்களுக்கு என் மனமார்ந்த நன்றி டாக்டர்.

நான்: மகிழ்ச்சி, மாதவன்! மீண்டும் சந்திப்போம்.

பழமொழிப் புதிர்





எந்த எந்தப் பழமொழிகளை இந்த இரண்டு படங்களும் நினைவூட்டுகின்றன?

விடை 87 ஆம் பக்கம்.

சிரிக்க வைக்கும் செந்தமிழ்ப்பாடல்

ஆரையடா சொன்னாய்?



முன்பொரு காலத்தில் சிலம்பி என்று ஒரு பெண்மணி இருந்தாள். அவள் புகழ் பெற்ற புலவர் ஒருவர் தன்னைப் பற்றிப் பாட வேண்டுமென்று ஆசைப்பட்டாள். ஆனால், அந்தப் புலவரோ, 'ஒரு பாட்டுப் பாட வேண்டுமென்றால் ஆயிரம் பொன் கொடுக்க வேண்டும்' என்று சொன்னார். சிலம்பு, கொஞ்சம் கொஞ்சமாக ஐந்நூறு பொன் சேர்த்தாள். அதைப் புலவரிடம் கொடுத்து, "ஐயா, வாயைக் கட்டி, வயிற்றைக் கட்டி நான் சேர்த்த தொகை ஐந்நூறு பொன்னை ஏற்றுக் கொள்ளுங்கள்; என் மீது ஒரு பாட்டுப் பாடுங்கள்" என்று வேண்டினாள்.

பணத்தாசை பிடித்த அந்தப் புலவர், பொன்னை வாங்கிக் கொண்டார். ஐந்நூறு பொன்னுக்கு அரைப் பாட்டே பாடுவதாகச் சொல்லி ஓர் ஓலையில் பாதிப் பாட்டை எழுதிக் கொடுத்துச் சென்றார். பாவம்! அந்தப் பாதிப் பாட்டில் அவளது பெயர் கூட இல்லை.

ஒரு நாள் ஔவையார் சிலம்பி வீட்டுக்கு வந்தார். அவருக்குக் கடுமையான பசி. சிலம்பி அவரை அன்புடன் வரவேற்றாள். அப்போது தன் வீட்டிலிருந்த கூழை அவருக்குக் கொடுத்தாள். பசி நீங்கியதும் ஔவையார் ஓலையில் இருந்த அந்தப் பாட்டைப் படித்தார். உடனே சிலம்பியின் பெயரையும் சேர்த்துப் பாதிப் பாடலை முழுப் பாடலாக எழுதிக் கொடுத்தார். ஔவையாரின் ஆசியால் சிலம்பி பெரிய பணக்காரி ஆகிவிட்டாள்.

இந்தச் செய்தியை அறிந்த பாதிப்

பாட்டுப் புலவர் ஔவையார் மீது பொறாமையும் ஆத்திரமும் கொண்டார். ஔவையாரை 'அடி' என்று எப்படியாவது இழித்துப் பேச வேண்டுமென்று விரும்பினார். ஒரு நாள் அவர் ஔவையாரைக் கண்டார். உடனே அவர், "ஒரு காலில் நாலிலைப் பந்தலடி..அது என்ன?" என்று விடுகதை போலச் சொல்லிப் பொருள் கேட்டார்.

புலவரின் ஆணவத்தை உணர்ந்து கொண்ட ஔவையார்,

எட்டேகால் லட்சணமே! எமன் ஏறும்
பரியே!
மட்டில் பெரியம்மை வாகனமே! —
முட்டமேல்
கூரையில்லா வீடே! குலராமன் தூதுவனே!
ஆரை அடா சொன்னாய் அது.

என்று பாடினார்.

தமிழ் இலக்கத்தில் எட்டு — அ. கால் — வ என்று குறிக்கப்படும்.

எட்டே கால் லட்சணமே என்றால் அவலட்சணமுடையவனே என்று அர்த்தம். பெரியம்மை — மூதேவி.

'அவலட்சணமுடையவனே! எமன் ஏறி வருகின்ற வாகனமாகிய எருமையே! மிகவும் விகாரமான மூதேவியைத் தாங்கி வரும் கழுதையே! முழுவதும் மூடப்படாத வீட்டின் குட்டிச்சுவரே! உயர்ந்த குடியில் பிறந்த இராமபிரானின் தூதனாகிய அனுமனே! (குரங்கே) அடா, நீ கூறியது ஆரைக் கீரையைக் குறிக்குமடா' ஒரு காலில் நாலிலைப் பந்தல் என்பது ஒரு காம்பில் நான்கு இலைகளை உடைய ஆரைக் கீரையைக் குறிக்கும்) என்று 'அடி' என்று தன்னைக் குறிப்பிட்டதற்கு 'அடா' என்று பதிலடி கொடுத்து ஔவையார் பாடியதை நினைக்கும் போது நமக்குச் சிரிப்பு வருகிறதல்லவா?

— புலவர் தணிகை உலகநாதன்.

"என்ன சார், உங்க பையன் நான் நல்லா நடிக்கலைன்னு சொல்றானாமே!"

"பாவம், அவனுக்கு என்ன சார் தெரியும்? ஊரிலே பல பேர் சொன்னதைக் கேட்டிட்டுச் சொல்லியிருப்பான்."

— ஏ. ஆர். விவேக், காரைக்குடி.



"டேய் ராஜா, எழுந்திருடா. இப்படித் தரையிலே கிடக்கிறியே. ராத்திரித் தூங்கிற போது கட்டிலிலேயிருந்து விழுந்திட்டியா?"

"அடடே, அதுதான் தொப்புன்னு ராத்திரி ஏதோ விழுந்த மாதிரி சத்தம் கேட்டுதா!"

— ஆர். ஆர்த்தி, சென்னை — 17.



உண்டு/இல்லை

* இப்போது இருக்கிறவை:

1 ஆப்பிரிக்க காண்டாமிருகம் (African Rhino),

5 கிவி (Kiwi),
6 ஹார்ன் பில் (Horn Bill),
8 இம்பாலா (Impala),

* இப்போது இல்லாதவை:

2 டெரானோடன் (Pteranodon),
3 மெகாதேரியம் (Megatherium),
4 எரியோப்ஸ் (Eryops),
7 ட்ரிசெராடோப்ஸ் (Triceratops),

பழமொழிப் புதிர் — விடை


புதிர் — 51: பன்றியுடன் சேர்ந்த கன்றும் கெடும்.

புதிர் — 52: ஆசைக்கு ஒரு பெண்ணும் ஆஸ்திக்கு ஒரு பிள்ளையும்.

பிருந்தாவனம்

பாரதியாரின் பத்திரிகை

1906—ஆம் ஆண்டில் பாரதியார் தொடங்கி 1910—ஆம் ஆண்டு வரை நடத்தி வந்த பத்திரிகை 'இந்தியா'. சுதந்தர உணர்வைப் பாமர மக்களும் நன்கு அறிய அவர் இப் பத்திரிகை மூலம் பெருந் தொண்டாற்றினார். அந்தப் பத்திரிகையின் ஆண்டுச் சந்தா எவ்வளவு தெரியுமா? அது ஒரே மாதிரி இருக்கவில்லை.



அரசாங்கங்களுக்கு	ரூ. 50
அரசர்கள், ஜமீன்தார்களுக்கு	ரூ. 30
மாதம் ரூ. 200/—க்கு மேல் வருமானம் உள்ளவர்களுக்கு	ரூ. 15
மற்றவர்களுக்கு	ரூ. 3.

— எம். நாச்சியப்பன் (20,679), கோயில்பட்டி.

ஜனவரியும் அக்டோபரும்


இந்த 1989—ஆம் ஆண்டில் ஜனவரி, அக்டோபர் மாதத் தேதிகளும் கிழமைகளும் ஒரே மாதிரி



இருப்பதைக் காணலாம். இரண்டு மாதங்களிலும் முதல் தேதி திங்கட் கிழமை, 31—ஆம் தேதி புதன் கிழமை.

— ஏ. ஆர். ஆனந்த் (421), காரைக்குடி.

தமிழ் நாட்டில் நூலகங்கள்




தற்போது தமிழ் நாட்டில் 1538 பொது நூலகங்கள் இருக்கின்றன. 5000 மக்களுக்கு அதிகமாக ஓர் ஊரில் இருந்தால் அங்கு நூலகம் அமைக்கப்படுகிறது. மொத்தம் 138 லட்சம் புத்தகங்கள் இந்த நூலகங்

களில் இருக்கின்றன.

— தொலைக்காட்சியில் கேட்டது.
தகவல்: வி. அரவிந்த் (10,928),
சென்னை — 40.

ஒரு சொல்: 3 பொருள்



1. தேசியக் கொடி.
2. படரும் கொடி.
3. துணி காயப்போடும் அடி.

— எம். கவிதா (19,351), கீழச்சிவல்பட்டி.

வேடிக்கைப் பழமொழிகள்



* பசியாதிருக்க வரம் தருகிறேன்; பழையது இருந்தால் கொஞ்சம் போடு.

* தென்னை மரத்திலே தேள் கொட்ட பனை மரத்திலே நெறி கட்டியதாம்!

* பகலிலே பசு மாடு தெரியாதவனுக்கு இரவிலே எருமை மாடு எப்படித் தெரியும்?

* ஒய்யாரக் கொண்டையாம், தாழம் பூவாம், உள்ளே பார்த்தால் ஈறும் பேனும்

— பழ. சாந்தி (5,939),
இராயவரம்.

துணுக்கு

முதன் முதலில் தபால் துறை வேலை செய்யத் தொடங்கியவுடன் தபால்களை, குதிரை வீரர்கள் எடுத்துச் சென்றனர். தபால்களை எடுத்துச் சென்ற குதிரை வீரர்கள் ஓர் இடத்தில் உணவு உண்டு விட்டு பின்



இளைப்பாறிச் செல்வார்கள். அவ்வாறு அவர்கள் உணவு உண்டு இளைப்பாறிய இடத்துக்கு 'போஸ்ட்' என்று பெயர். இந்தப் பெயரே பின்னர் கடிதங்களுக்கும் உரியதாகி வழங்குகின்றது.

— சா. இரா. மணி (21,412),
வந்தவாசி.

முதல் இதழ்

1942—ல் முத்து நாராயணன் என்பவர் 'பாப்பா மலர்' என்னும் சிறுவர்களுக்கான இதழை இராயபுரத்திலிருந்து வெளியிட்டார். இவ்



விதழ் 9 மாதங்கள் வெளிவந்தது. சிறுவர்களின் எழுத்துக்களைப் பதிப்பித்த முதல் இதழ் இதுதான்.

— டி. எல். சிவகுமார் (9,815), வந்தவாசி.

நான்கு- நான்கு நான்கு!



நான்கு வருட காலம் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்தவர் ஹேய்ஸ். இவர் கல்லூரியில் நான்கு ஆண்டுகள் படித்தவர். நான்கு வருடம் காங்கிரஸ் உறுப்பினராக இருந்தார். நான்கு வருடம் கவர்னராக இருந்தார். விடுதலைப் போரில் நான்கு வருடம் பங்கு கொண்டவர். நான்கு முறை காயமுற்றார். இவர் 1877ல் இருந்து 1881 வரை நான்கு வருடம் ஜனாதிபதியாக இருந்தார்.

— சா. இரா. மணி (21,412), வந்தவாசி.

பெரியவன் ஆனதும்...?



மகன்: அப்பா! நான் பெரிய பிள்ளையா வளர்ந்த பிறகு....!

அப்பா: நாட்டுக்கு நல்லது செய்யப் போறியா?

மகன்: அதில்லேப்பா! வேட்டி கட்டிக்குவேன்!

— ரா. பால முருகன் (15,165).

தலைகீழாக மாற்றியவர்



1937ம் ஆண்டு தமிழகத்தின் முதல்வராக இராஜாஜி இருந்த சமயம். தன்னுடைய அலுவலக ஊழியர் ஒருவரிடம் ஒரு கவரைக் கொடுத்து, அதில் அஞ்சல் தலையை ஒட்டி வரச்

சொன்னார். அவன் ஒட்டி வந்து கொடுத்ததைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே இராஜாஜி சொன்னார்:

"என்னப்பா! நாங்கள் அனைவரும் சேர்ந்து ஆங்கிலேயச் சக்ரவர்த்தியைத் தலைகீழாகக் கவிழ்க்கப் பெரும் பாடுபட்டு வருகிறோம். ஆனால், எங்களால் முடியவில்லை. எங்களால் முடியாததை நீ ஒரே நொடியில் செய்து விட்டாயே!" என்றார்.

ஆங்கில அரசு முத்திரை பதித்த அஞ்சல் தலையைத் 'தலைகீழாக' ஒட்டியதைத்தான் அவர் குறிப்பிடுகிறார் என்பதைப் புரிந்து கொண்ட ஊழியர் வெட்கித் தலைகுனிந்தான்.

— 'அறிஞர்கள் நகைச்சுவை' யிலிருந்து.

தகவல்: பி. கோவிந்தசாமி (5,703) பேதாதம்பட்டி புதூர்.

வெல்வெட்



மான்களின் கொம்புகள் உண்மையான எலும்பாலானவை. இந்தக் கொம்புகள் வளரும்போது மெல்லிய தோலால் மூடியிருக்கும். இந்தத் தோலில் ரத்த ஓட்டம் இருக்கும். இந்தத் தோலை 'வெல்வெட்' என்று அழைக்கிறார்கள். கொம்புகள் நன்கு வளர்ந்ததும், ரத்த ஓட்டம் நின்று, கொம்புத் தோல் உரிந்து, கொம்பு மட்டும் காட்சியளிக்கும்.

— ஏ. ஆர். வீரராகவன் (2,118), மயிலாடுதுறை.

திரைப்படம் பிறந்தது!



திரைப் படங்கள் பிடிப்பதற்கான எண்ணம், போட்டோ பிடிக்கும் கருவியான காமிரா கண்டுபிடிக்கப்படும் வரை யாருக்கும் தோன்றவில்லை. நம் கண்ணின் படலம் ஒரு பொருளைப் பார்த்த மாத்திரத்தில் அதன் உருவம் மறைந்து விடுவதில்லை. மேலும் சிறிது காலம் நீடித்து இருந்து கொண்டிருக்கிறது என்ற உண்மையை ஜோசப் பிளாட்டோ என்ற ஒரு பெல்ஜிய நாட்டுப் பேராசிரியர் கண்டுபிடித்திரா விட்டால், சினிமா படம் பிடிப்பதற்கான சினி—போட்டோகிராஃபே கண்டுபிடிக்கப்பட்டிருக்க முடியாது.

— ஆதாரம்: இந்துஸ்தான் இயர்புக் 1957.

— க. வீ. அம்பேத்கார் (18,479), உரத்தநாடு – 614 625.

தள்ளாத வயதில் சாதனை!




ஜப்பானில் 91 வயதான டோயோகிச்சி என்பவர் பியூஜியாமாவில் என்ற 3.776 மீட்டர் உயரமுள்ள சிகரத்தில் ஏறி ஒரு சாதனை புரிந்துள்ளார் அந்த தள்ளாத வயதில்.

— ஆ. இரமேஷ் (13,226), அட்டகட்டி.



பிருந்தாவனக் கவியரங்கம்

தமிழ் கற்க வா!



தம்பி, தம்பி, ஓடி வா!
தத்தித் தத்தி ஓடி வா!

தமிழ் கற்க ஓடி வா!
தாவி அணைக்க ஓடி வா!

நன்மை செய்ய ஓடி வா!
நாடு போற்ற ஓடி வா!

உதவி செய்ய ஓடி வா!
உழைப்பவரைப் போற்றி வா!

எங்கள் சின்னத் தம்பியே!
நல்ல தங்கக் கம்பியே!

பிள்ளை. கோகுல் ராஜு, (17,403),
குருசாமிபாளையம்.

கல்விப் பூங்கா



பூத்துக் குலுங்கும் மலர்கள் நிறைந்த
பூங்காதான் பள்ளி — தேன்
பொங்கும் மலரில் அறிவு மணத்தைப்
பொழிவதே பள்ளி.

ஊற்றுப் போல அறிவு பெறுக
உழைப்பவன் சீடன்! — அன்றி
ஊரைச் சுற்றி நாளைக் கழிப்போன்
உண்மையில் மூடன்!

ஆற்றல் வளரும் படிப்பை உணர
அமைவதே தேர்வு — மலர்கள்
அனைத்தும் சிறந்த மாலையாக
அமைப்பதே தேர்வு.

கல்விக் கண்கள் கொடுக்கும் ஆசான்
கருணை போற்றுவோம் — நம்
கல்வியில் பூங்கா பெருமை உயரக்
கடமை ஆற்றுவோம்.

— மு. மீ. யாக்கூத் (21,351), காயல்
பட்டினம்.

அணிலின் நன்றி



பாவம், அணிலும் பசியாய் வந்தது.
பாய்ந்தே ஓடி அருகில் வந்தது.

தரையில் வைத்தேன் கொய்யாப் பழத்தை
தாவியே வந்து விரைவில் எடுத்தது.

உண்ணும் பொழுதே உவப்புடன் எனக்கு
நன்றி செலுத்தக் கைகூப் பியதே.

பசியும் நீங்கிடப் பாய்ந்தே ஓடிப்
பக்கச் சுவரில் ஏறிப் பார்த்தது.

பழத்தைக் கொடுத்த என்றன் உள்ளம
பரவச மடைந்தது அதனை நினைத்தே!

— ம. ஸ்ரீவித்யா (8,399), மதுரை – 625 018.

நம் நாடு



ஒற்றுமையின் சின்னமாக
  வாழ்ந்து காட்டுவோம் — இந்த
உலகினிலே பாரதத்தை
  உயர்த்திக் காட்டுவோம்.

அழிவுப்பாதை அறிவியலை
  ஒழித்துக் கட்டுவோம் — அதை
ஆக்கப்பணியில் நாம்புகுத்தி
  வெற்றி காணுவோம்.

புத்தன், காந்தி பிறந்த நம்து
  புண்ணிய பூமி — மிகப்
பெருமை மிக்க தலங்கள்யாவும்
  நிறைந்த இப்பூமி.

இமயமுதல் குமரிவரை
  எல்லை கொண்டது — மிக்க
இணையில்லாத ஆறுகளால்
  வளம் கொழிக்குது.

கவிவளர்த்த பாரதியார்
  பிறந்த பொன்னாடு — இதைக்
கண்ணியமாய்க் காக்க நல்ல
  வழிகளைத் தேடு.

— ஆர். சிவசுப்பிரமணியன் (19,381), பங்காம்பாளையம்.

மண்ணுக்கு நீ உண்டு



மலை மேலே உருவாகி
தரை மேலே உறவாடி
கரை கொண்டு விரைந்தோடி
கடலுக்குள் முடிவாகி.

நடை போடும் நதியே நீ.
நகை சிந்தும் கலைவாணி
அமுதூறும் அருங் கேணி
அழியாத தமிழாய் நீ.

பயிருக்குத் துணை செய்து
ஊருக்கு நலம் செய்து
வளமைக்கு வழி செய்து
வந்தாய் நீ நடம் செய்து.

இளந் தென்றல் சுகமாக
இளங் காலைப் பனியாக
விடி காலை மலராக
வெண் மேகத் திரளாக

விண்ணுக்கு மதியுண்டு.
கண்ணுக்கு இமையுண்டு.
மண்ணுக்கு நீ உண்டு.
மறையாது உன் தொண்டு.


— ந. செந்தில் குமார் (279), தஞ்சாவூர் 613 007.

தோல்வியில் வெற்றி!

லும் வந்துவிட்டது!

'ப்ளஸ்' ஒன் படிக்கும் எனக்கு இன்னும் 'ஓட்டு'ப் போடும் வயது வரவில்லை. ஆனாலும், தேர்தல் அறிக்கைகள், கூட்டங்கள், பிரசாரங்கள், ஆகியவற்றை ஒருவித ஆவலுடன் படித்தும், கேட்டும், பார்த்துக் கொண்டும் வந்தேன்.

அப்பொழுதுதான் சோமுவை நான் சந்தித்தேன். ஓர் அரசியல்கட்சித்



"தை பிறந்தால் வழி பிறக்கும்!" என்பார்கள். இந்த வருடம் பொங்கல் அன்று எங்கள் பேட்டைக்கு உண்மையிலேயே ஒரு வழி பிறந்துவிட்டது.

முதல் யோகம் எங்கள் பேட்டை சாலைகளுக்குத்தான். மேடு பள்ளங்களை அகற்றிச் சமன் செய்து தார் பூசிவிட்டார்கள். இனி நான் ஜோராக சைக்கிளில் கல்லூரி போகலாம்.

புதிய 'சோடியம்' விளக்குகள் பொருத்தப்பட்டன. ஒளி வெள்ளத்தில் ஊரே பளபளத்தது!

எங்கள் வீட்டுச் சுவர்கள் கூட வண்ண வண்ணச் சுவரொட்டிகள் பளபளக்கப் புத்தம் புதுப் பொலிவு பெற்றன.

ஆக, இந்த ஆண்டு பொங்கல் பண்டிகைக்கு எங்கள் வீடு, எங்கள் ஊர்ச் சாலைகள், எங்கள் பேட்டைத் தெரு விளக்குகள் எல்லாமே புதுக் கோலத்துடன் விளங்கின.

கூடவே ஜாம் ஜாமென்று தேர்த

தொண்டனாக அவனைப் பார்க்கும் பொழுது எனக்கு ஆச்சரியமே ஏற்பட்டது.

நான் மாநகராட்சி உயர்நிலைப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்த போது அவன் எனக்கு மூன்றாண்டுகள் சீனியர். கிரிக்கெட் விளையாட்டில் நண்பர்கள் ஆனோம். அப்பொழுதே, தமிழில் நன்றாகப் பேசுவான்; எழுதுவான். 'ஏதாவது சாதிக்கணும், சாதிக்கணும்' என்று துடித்துக் கொண்டிருப்பான். பத்தாவதுமுடித்து விட்ட பிறகு, எனக்கும் அவனுக்கும் தொடர்பு விட்டுப் போய் விட்டது. ஆனாலும், அடிக்கடி அவனை நினைத்துக் கொண்டிருப்பேன். அன்று ஒரு கட்சியின் தொண்டனாக அவனைச் சந்தித்தபோது, அவன் பேச்

மாயன்

கம், பழகிய விதமும் அவனும் என்னை மறக்கவில்லை என்பதைப் புலப்படுத்தியது.

எங்கள் வீட்டு எதிர்ப்புறத்தில்— நடைபாதையில் — தென்னை ஓலையில் அலுவலகம் அமைத்துக்கொண்டு சோமு தேர்தல் பணியைத் தொடர்ந்தான். அவன்கூட இன்னும் சில கட்சித் தொண்டர்களும் இருந்தார்கள்.

நாங்கள் இருவரும் பழைய பள்ளி நினைவுகளில் மூழ்கிச் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தோம்.

நான் 'ப்ளஸ்—ஒன்' படிப்பதைப் பற்றி அக்கறையுடன் விசாரித்துத் தெரிந்து கொண்டான். 'நன்றாகப் படிக்க வேண்டும். வாழ்க்கையில் ஒரே குறிக்கோளை வைத்துக் கொண்டு அதிலேயே முழுக் கவனம் செலுத்தி முயற்சியுடன் முன்னேற வேண்டும்' என்று அறிவுரை கூறினான். மேலும் அவன் சொல்லை மதித்து நடப்பதாகக் கூறி விடைபெற்றேன்.

மறுநாள்.

இன்னும் இரண்டு கட்சிகள் தென்னம் ஓலைகளில் தங்கள் தங்கள் தேர்தல் அலுவலகத்தை அதே வரிசையில் அமைத்துக் கொண்டன.

எங்கள் பேட்டையே தேர்தல் பிரசாரத்தில் மூழ்கித் திணறியது.

எங்கும் 'உங்கள் ஓட்டு எங்கள் சின்னத்திற்கே!' என்கிற கோஷமும், ஆட்டோ, கார்களில் தேர்தல் பாட்டுகளும், வாக்காளர்களின் பெயர்களைச் சரி பார்க்கும் கட்சித் தொண்டர்களின் நடமாட்டமும் மிகுந்து ஊரே திமிலோகப்பட்டது.

'அவைகளில் எல்லாம் என் கவனம் செல்லவில்லை. நல்லவனாக விளங்கிய இந்தச் சோமு எப்படி ஓர் அரசியல் கட்சியில் புகுந்தான் என்பதில் மட்டும் என் மனம் புகுந்து ஆராய்ந்தது.

சோமுதான் எங்கள் பள்ளியில் எல்லோருக்குமே நல்ல நண்பன். ஆனால், எப்படி 'நல்ல நண்பனாக' விளங்கினான் என்பதை அறிந்து கொள்ள மட்டும் எனக்கு அப்பொழுது தெரியவில்லை. நான் எட்டாவது படிக்க வந்த பொழுது அவன் பள்ளியை விட்டுப் போய்விட்டான்.

அவன் போன பிறகு எங்கள் 'கிரிக்கெட்' டீம் பல தோல்விகளைக் காண நேர்ந்தது. அப்பொழுதுதான் சோமுவின் விளையாட்டுத் திறமையும் நண்பர்களைக் கொஞ்சம் கண்டிப்புடன் மைதானத்திற்கு வரவழைத்துப் 'பயிற்சி' எடுக்க வைத்த நிர்வாகத் திறமையும் தெரிய வந்தது.

ஏழை மாணவர்களுக்குப் பழைய புத்தகங்களைச் சேகரித்துக் கொடுத்த இரக்க குணமும் பிற்பாடுதான் புரிந்தது.

பெரியோர்கள், ஆசிரியர்கள், நண்பர்கள் ஆகியோரிடம் பேசும் பொழுது, தான் பேசுவதைவிட மற்றவர்கள் சொல்வதைக் கேட்பதில்தான்



அதிகக் கவனம் செலுத்துவான்.

யாருக்காவது தீங்கு நேர்ந்துவிட்டால் அதைப் போக்கிடத் தன்னாலான எந்த முயற்சியையும் செய்து பார்ப்பான். சிறியது, பெரியது என்று 'நல்ல காரியங்களில்' வித்தியாசம் கிடையாது. மிக மிகச் சிறிய நல்ல பணிகூட, பெரிய பெரிய பயன் அளிக்கும் என்று அடிக்கடி சொல்வான்.

அப்படிப்பட்டவன் அரசியல் துறைக்கு வந்தது எனக்கு மிகவும் ஆச்சரியத்தை உண்டு பண்ணியது. ஏன் என்றுஎனக்குப்புரியவேயில்லை.

சில வாரங்கள் சென்றன.

தேர்தல் நாள் வந்தது.

சோமு சோர்வின்றி உற்சாகத்துடன் தன் தேர்தல் பணிகளைச் செய்து முடித்தான்.

அமைதியாகத் தேர்தல் முடிந்தது. மக்கள் ஆவலுடன் தேர்தல் முடிவுகளை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்.

கட்சித் தொண்டர்களும், பத்திரிகைகளும், வானொலி, தொலைக்காட்சி ஆகிய பொது ஜனத் தொடர்புகளும் மக்கள் ஆவலுக்கு அவ்வப்பொழுது விடைகள் கூறி வந்தன.

எல்லா முடிவுகளும் அறிவிக்கப்பட்டன.

சோமு சார்ந்த கட்சியின் வேட்பாளர் சில ஆயிரம் ஓட்டுக்கள் வித்தியாசத்தில் தோற்கடிக்கப்பட்டார்.

வென்றவர்கள் பட்டாசுகளைக் கொளுத்தி, தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். பொங்கல் பண்டிகை, தீபாவளிப் பண்டிகையைப் போல மாறிவிட்டது.

நான் சோமுவைப் பார்த்தேன். அங்கே சாந்தமும் இனிமையும் குடி கொண்டிருந்தன. அவனுக்குப் பக்கத்தில் தேர்தல் அலுவலகம் அமைத்து இருந்தவர்கள், தென்னம் பந்தல்களை அகற்றி ஓலைகள், கொம்புகள், கயிறுகள், ஆகியவற்றை ஒரு வண்டியில் ஏற்றிக் கொண்டிருந்தனர்.

சோமுவின் தேர்தல் அலுவலகம் மட்டும் அப்படியே இருந்தது.

மறுநாள்.

எங்கள் வீட்டு வாசற்படி அருகே தான் பஸ் ஸ்டாண்டு. அங்கு எப்பொழுதும் கூட்டம் நிறைந்து இருக்கும்.

காலையில் எழுந்து மாடிக்குச் சென்று எங்கள் வீட்டின் எதிர்ப்புறத்தைப் பார்த்தேன்.

நேற்று வரையில் தேர்தலின் காரணமாகக் கூட்டம் நிறைந்து காணப்பட்ட அந்த இடம் 'வெறுமையாக' இருந்தது.

சோமுவின் தென்னம் பந்தல் கூட அகற்றப்பட்டுவிட்டது.

நான் மௌனமாகக் கீழே இறங்கி சைக்கிளை எடுத்துக் கொண்டு வெளியே வந்தேன்.

என்ன ஆச்சரியம்?

எந்தப் பணி செய்தாலும் பயன் உள்ளதாகச் செய்ய வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருந்த சோமு, அதே மாதிரி சாதித்து விட்டானே?

எந்தத்தென்னம்ஓலைகள், மூங்கில் கழிகளைக் கொண்டு தேர்தல் அலுவலகம் அமைத்தானோ, அவைகளைக் கொண்டே எங்கள் வீட்டு வாசற்படிக்கு அருகிலிருந்த பஸ்ஸ்டாண்டில்இரவோடுஇரவாகப் பந்தல் அமைத்துப் பயணிகள் நிற்கும் 'நிழற் குடை' ஆக்கி விட்டான்!

தோல்வியில் கூடப் பயன் உள்ள பணி செய்து வெற்றிக் கனியைப் பறித்த சோமுவின் தேர்தல் முயற்சி இனிது முடிந்தது. அதை எண்ணி மகிழ்ந்து நான் கல்லூரிக்குப் புறப்பட்டேன்.

செடியும் கொடியும்

ஆலிவ் செடியையும் கொடி முந்திரியையும் ஒட்டுச் சேர்த்து துருக்மெனிய (சோவியத்) விஞ்ஞானிகள் ஒரு புது வகையான பழத்தை உற்பத்தி செய்துள்ளனர். இச் செடி மரமாக வளருகிறது. பழங்கள் முந்திரி போலச் சுவையாக உள்ளன. கொட்டைகளிலிருந்து ஆலிவ் எண்ணெய் கிடைக்கிறது.

ஆ. கணேஷ் (9532),
அட்டகட்டி.



பரதன் அச்சகத்தில் பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிட்டவர்: வி. முரளி. ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.
நிர்வாகக் காரியாலயம்: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: 4 3154 3, 4 34 157.
ஆறு மாதச் சந்தா: உள்நாடு: ரூ. 18/—; வெளி நாடு: கப்பல் தபால் ரூ. 60/—; விமானத் தபால்: ரூ. 135/—.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 36/—; வெளி நாடு: கப்பல் தபால் ரூ. 120/—; விமானத் தபால் ரூ. 270/—.


"தினமும் மூணு வேளை கேரமில்க் கொடுங்க, சரியாயிடும்!"
Parry's
கேரமில்க்
CARAMILK
"குழந்தைகளே... இன்னிக்கு கேரமில்க் சாப்பிட்டிங்களா!"
PARRY'S
பாரிஸின் தரமான தயாரிப்புகள்
கேரமில்க்• சாக்லேட் எக்ளேர்ஸ்• ட்ரை-மி
கோகனட் கிரீம்• சாக்ளேர்ஸ்• லால்லிபாப்ஸ்• காஃபி பைட்
Parry's
The King of Sweets
HTA 7077

REGISTERED No. TN MS (3) 281
Registered as a Newspaper in Sri Lanka